www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாத இதழ்

# புதிய பூமி

පුදිය පූමි
Puthiya Poomi

சுற்று 14 | பெப்ரவரி 2007 | பக்கம் 20 | விலை 20/- | சுழற்சி 100

# அடிமைவிலங்கொடிக்க பல நூறு போராட்டங்கள்





100 வது இதழ்

விலைவாசி உயர்வைத் தடுக்க
சம்பள உயர்வுகளை வென்றெடுக்க
யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை வென்றெடுக்க
கொலைகள் ஆட்கடத்தல்களைத் தடுக்க
பேச்சு எழுத்து சுதந்திரத்தைப் பாதுகாக்க
ஜனநாயக மனித உரிமைகளை நிலைநிறுத்த
இனவாதத்தை தோற்கடிக்க
ஏகாதிபத்திய உலகமயமாதலைத் தடுக்க
மறுகாலனியாதிக்கத்தை எதிர்க்க
முன்னெடுக்கப்படும் அனைத்துப் போராட்டகளும்
சரியான வெகுஜன அரசியல் மார்க்கத்தில்
முன்னேறும்போதே மக்களுக்குரிய வெற்றி நிச்சயமாகும்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



புதிய பூமி

சுற்று 14 பெப்பவரி 2007 பக்கம் 20 விலை 20/- சுழற்சி 100

இல. 47, 3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# நீண்ட பயணத்தில் நூறாவது இதழ்

புதிய பூமி தனது நீண்ட வெகுஜன அரசியல் பயணத்தில் 100வது இதழை வந்தடைந்துள்ளது. பரந்துபட்ட வெகுஜன தளத்தை இலக்காகக் கொண்டு ஒரு மாற்று அரசியல் பத்திரிகையாக புதிய பூமியை வளர்த்தெடுத்து வந்த பாதை கடினமான பாதையாகும். இன்றைய சமூக அமைப்பின் தேவைகளுக்கு ஏற்றவாறு வர்த்தக நோக்கில் ஒரு பத்திரிகையை வெளியிடுவதும் விநியோகித்து விற்பனை செய்வதும் முதலீடு செய்யக் கூடியவர்களுக்கு இயலுமான ஒன்றாகும். ஆனால் நடைமுறையில் உள்ள சமூக ஒழுங்கிற்கு மாறாக எதிர் நீச்சலிட்டு மாற்று அரசியல் பத்திரிகை ஒன்றை வளர்த்தெடுப்பது என்பது சிரமங்கள் நிறைந்த காரியமாகும்.

அத்தகைய கடினமான பாதையில் புதிய பூமி தனது பயணத்தை பல்வேறு நெருக்கடிகள் சவால்கள் எதிர்ப்புகள் கண்டனங்கள் மத்தியில் தொடர்ந்து மேற்கொண்டு வந்தமை இலட்சியப் பணி சார்ந்த விடா முன் முயற்சியாகும்.

நமது நாட்டின் இன்றைய சமூக அமைப்பு பல்வேறு நிலைகளிலும் ஏகப் பெரும்பான்மையான மக்களுக்கு விரோதமாகவே சென்று கொண்டிருக்கிறது. அதன் பன்முகப்பட்ட பாதிப்புகள் மக்கள் மீது சுமத்தப்பட்டு வரும் அதே வேளை நேரடியானதும் மறைமுகமானதுமான பல்வேறு ஒடுக்கு முறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகின்றன.

இந் நிலையில் இவை அனைத்திற்கும் ஒரே மாற்று வழி அடிப்படையான சமூக மாற்றத்தைக் கொண்டு வருவதேயாகும். ஏற்றத்தாழ்வும் சுரண்டலும் ஒடுக்குமுறைகளும் கொண்ட இன்றைய சமூக அமைப்பின் கோரத்தனங்களை முடிவுக்கு கொண்டுவர பரந்து பட்ட வெகுஜன எழுச்சியும் போராட்டங்களும் அவசியம். அத்தகைய எழுச்சியினதும் போராட்டங்களினதும் அடிப்படை ஆதார சக்தி மக்களாக மட்டுமே இருக்க முடியும். மக்களே மக்கள் மட்டுமே 'வரலாற்றின் உந்து சக்தி' என்ற வரலாற்று நியதிக்கு உட்பட்டு நின்றே சமூக மாற்றத்திற்கான அரசியலை முன்னெடுக்க முடியும். அத்தகைய அரசியல் முன்னெடுப்பிற்கு மக்களை கருத்தியல் சிந்தனை நடைமுறை செயற்பாட்டு தளங்களில் அறிவூட்டவும் அணிதிரட்டவும் வேண்டிய அரசியல் கடமை முன்னெழுகின்றது. அதற்கான பணி என்பது ஒரு தவமாகும்.

புராணங்களில் தவம் செய்தவர்கள் ஈற்றில் தமக்குரிய வரங்களைப் பெற்றுக் கொண்டதாகப் படித்திருக்கின்றோம். அவ்வாறே சமூக மாற்றத்திற்கான வரத்தை வேண்டியே பொதுவுடைமை வாதிகள் தமது மாக்சிச லெனினிசக் கோட்பாட்டை முன் வைத்து இலட்சியத் தளத்தில் உறுதியாக இருந்து மக்கள் மத்தியில் தவம் செய்து வருகிறார்கள். அவர்களது தவத்திற்கு வரம் கொடுப்பவர்கள் வானத்தில் இருப்பதாக எண்ணப்படும் கடவுளர்கள் அல்லர். மண்ணிலே வாழ்ந்து வரும் பரந்து பட்ட மக்கள் திரளினரே யாவர்.

இத்தகைய மக்கள் திரளினர் தொழிலாளர்களாக விவசாயிகளாக புத்திஜீவிகளாக பெண்களாக இளைஞர் யுவதிகளாக மற்றும் உழைக்கும் மக்களாக இருந்து வருகின்றனர். இம் மக்கள் பிரவினர் தான் சமூக அமைப்பில் தொண்ணூறு சதவீதமாக உள்ளனர். பத்துவீதமானவர்களே சொத்து சுகம் பெறுபவர்களாகவும் நிலவுடைமை வழிவந்த முதலாளித்துவ ஏகாதிபத்திய அரவணைப்பாளர்களாகவும் உள்ளனர். இவர்களின் அரசியல் பிரதிநிதிகளே ஆளும் வர்க்க சக்திகளாக இருந்து வருகின்றனர். இவ்வாறான உயர் வர்க்க மேட்டுக்குடி சக்திகளிடையே இன மொழி மத பிரதேச வேறுபாடுகள் கிடையாது. அவர்களது ஐக்கியம் உயர் வர்க்க இணைவு கொண்டதாகவும் இருந்து வருகின்றது.

இவர்கள் இந் நாட்டின் தொண்ணூறு வீதமான மக்களை நிலவுடைமை முதலாளித்துவ கருத்தியல்களால் அமுக்கி ஜனநாயகம் சுதந்திரம் சட்டத்தின் முன் சகலரும் சமம் என்ற ஏமாற்றுக்களால் ஆண்டு அனுபவித்து வருகின்றனர். அவற்றை எதிர்த்து மீறல்கள் இடம் பெற்றால் நேரடியான ஒடுக்கு முறைகள் ஆயுதப்படைகள் மூலம் ஏவி விடப்படும் நிலையே நீடித்து வருகின்றது. இதனால் மக்கள் பெறவேண்டிய சுபீட்ச வாழ்வும் சமத்துவ உரிமைகளும் உண்மையான மக்கள் ஜனநாயக விழுமியங்களும் மறுக்கப்படுகின்றன. அதே வேளை தேசிய இனங்களிடையேயான இனமொழி மத பிரதேச முரண்பாடுகளை பூதாகரமாக்கி இன ஒடுக்குமுறை மூலம் ஒருவரோடு ஒருவரை மோதவைத்து மக்களைப் பிளவுபடுத்தியும் வருகின்றனர். இன முரண்பாட்டை பிரதான இடத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம் ஆளும் வர்க்கமும் அவர்களது எசமார்களான ஏகாதிபத்தியமும் அடிப்படையான வர்க்க முரண்பாட்டையும் வர்க்க ஒடுக்கு முறையையும் மறைத்துக் கொள்கின்றன. அவ்வாறே பெண்கள் மீதான ஒடுக்கு முறையையும் சாதிய முரண்பாட்டையும் மறைத்து நிற்கின்றனர்.

இவற்றை மாக்சிச லெனினிச மாஓசேதுங் சிந்தனை வழிநின்று நோக்கும் போது வர்க்க இன சாதிய பெண்கள் மீதான நான்குவகை ஒடுக்கு முறைகளை அடையாளம் காண முடிகின்றது. இவற்றில் இன்று இன முரண்பாடும் ஒடுக்குமுறையும் பிரதான இடத்தில் இருந்து வருகின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். அதனால் அடிப்படை முரண்பாடான வர்க்க முரண்பாடு மறைக்கப்படும் சூழலே நீடிக்கின்றது. அதற்கு ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல் மேலும் ஊக்கப்படுத்தி பங்களித்து வருகின்றது.

இவை அனைத்தையும் சரியான வெகுஜன அரசியல் தளத் திலிருந்து மக்களுக்கு எடுத்துக் கூறி அறிவூட்டவும் அணி திரட்டவும் வேண்டிய கடமையும் தேவையும் உணரப்பட்டதன் விளைவே புதிய பூமியின் தொடர்ச்சியான வரவாகியது. யாழ்ப் பாணத்திலிருந்து வெளிவந்த செம்பதாகையின் மாற் றப்பட்ட பெயரான புதிய பூமி தொண்ணூறுகளின் நடுக் கூறில் கொழும்பிலிருந்து வெளிவர ஆரம்பித்தது. நிதி நெருக்கடியும் ஏனைய வளங்கள் பற்றாக் குறையும் புதிய பூமியை அச்சுறுத்தி நின்று போதிலும் தோழர்கள் நண்பர்களின் விடாமுயற்சியில் புதிய பூமி மக்கள் மத்தியில் தனக்குரிய இடத்தை தேடிக் கொள்ளவும் வலுப்பெறவும் முடிந்தது. பழைமைவாதக் கருத் துக்கள், உலகமயமாதலின் நுகர்வுப் பண்பாடு, தக வல் தொழில்நுட்பத்தின் பன்முகச் சீரழிவுகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் அந்நியப் பணப் புளக்க நடவடிக்கை கள் போன்றவற்றின் மத்தியில் புதிய பூமி மாற்று அரசியல் பத்திரிகையாகத் தனது நீண்ட பயணத்தில் ஒரு சிறு தூரத்தை மட்டுமே கடந்து நிற்கிறது. புதிய பூமி தான் வரித்துக் கொண்ட மாக்சிச லெனினிசக் கருத்தியல் நிலைப் பாட்டில் இருந்தே சகல விடயங்களையும் அணுகி வந்துள்ளது. பிற்போக்குத் தன மான நிலைப்பாடுகளையும் மக்கள் விரோத செயற்பாடு களையும் சமூகத்தின் மீதான வக்கிரப் போக்குகளையும் சந்தர்ப்பவாதக் அரசியல் இலக்கியக் கருத்துக்களையும் புதிய பூமி எவ்வித தயக்கமும் இன்றி விமர்சனம் செய்து கண்டித்து எழுதி வந்திருக்கிறது. அத்தகைய எழுத்தின் நோக்கம் கருத் துக்களை கருத்துக்களால் முறியடிப்பதே அன்றி தனிநபர் தாக் குதலோ வசைபாடலோ வக்கிர செயல்பாடோ அல்ல. தனி நபர்களையும் அமைப்புகளையும் அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்களை வைத்து நோக்குகிறதே தவிர அவர்களின் பட்டம் பதவி அந்தஸ்து போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டல்ல என்பதைக் கூறிக்கொள்வது அவசியமாகிறது. அதன் வழியிலேயே கொள்கையில் உறுதி, செயலில் அர்ப்பணிப்பு, எதிர்காலத்தின் மீதான முழு நம்பிக்கை, மக்களுடன் இணைந்த செயற்பாடு என்பவற்றால் புதிய பூமி மக்களுக்குரிய மாற்று அரசியல் பத்திரிகையாக வளர்ச்சிகண்டு நிற்கிறது, கடந்த காலத்தின் பலம் பலவீனத்தை விமர்சனம் சுய விமர்சனத்தின் ஊடாக அடையாளம் கண்டு புதிய பூமி மேலும் தொடர்ந்து பணியாற்றும் என்ற உறுதியினை இவ் வேளை எடுத்துக் கொள்கின்றது, புதிய பூமியின் வரவிற்கும் வளர்ச்சிக்கும் இருப்பிற்கும் பங்களிப்பு செய்து வரும் ஒவ்வொருவருக்கும் தனது ஆழ்ந்த நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றது புதிய பூமி மேலும் சக்திப்படவும் வளர்ச்சியுறவும் அனைவரினதும் பங்களிப்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கின்றோம்.

ஆசிரியர் குழு

## பூசா கூறும் எதிர்காலம்

சிறைக் கைதிகளைக் கொடுமைப் படுத்துவதற்குப் பேர் போன பூசா தடுப்பு முகாம் மறுபடியும் செயற்படத் தொடங்கியுள்ளது. இதுவும் மஹிந்த சிந்தனையின் ஒரு முக்கியமான பகுதியோ தெரியாது. ஆனால் நாட்டின் நடைமுறை அரசியல் அதிகாரம் எவர் மூலம் செயற்படுகிறது என்பதை இந்த நகர்வு தெளிவாகக் காட்டுகிறது. பாராளுமன்ற ஆட்சி அதிகாரத்தைப் பிரயோகிக்க இயலும் என்பதை நாம் அனுபவ வாயிலாகக் கற்கப் போகிறோம் என்றால் இவை எல்லாம் ஆரம்பப் பாடங்கள் மட்டுமே. இன்னும் பல வர இருக்கின்றன,

## ஈழத்தமிழ்க் கவிதைக்குக் கரி பூசும் காலம்

இடதுசாரி எதிர்ப்புக்காக எந்த மூர்க்கனுக்கும் களமமைத்துக் கொடுக்கத் தயங்காத கனடாத் தமிழ் சஞ்சிகையான "காலம்" இம்முறை இந்துத்துவ இலக்கியப் புலுடா ஜெயமோகனிடம் காலஞ் சென்ற சு.வில்வரத்தினம் பற்றி ஒரு கட்டுரை எடுத்துப் போட்டுள்ளது. நாவலுக்கு இலக்கணம் வகுக்கப் போய் முட்டாளாக்கப்பட்ட புலுடாக்காரர் இப்போது நவீன கவிதைக்கும் இலக்கணம் வகுத்து ஈழத் தமிழ்க் கவிதை எல்லாம் கவிதை அல்ல என்று உளறி வைத்துள்ளார். உண்மையில் கிடைத்த வாய்ப்பைக் கொண்டு கவிஞர் சிவசேகரத்தை வலிந்து தாக்கப் போய் சேரன் முதலாகப் பின்னைய தலைமுறைக் கவிஞர்களை எல்லாம் கவிதை தெரியாதவர்கள் என்று கழித்து வைக்க நேரிட்டிருக்கிறது, ஜெயமோகன் என்கிற இலக்கியப் புலுடா ஈழத்துக் கவிதைகளை முறையாக வாசித்தற்கான தடயம் எதுவுமே அக் கட்டுரையில் இல்லை.

யார் எல்லாம் எம்மை எட்டி உதைக்கிறார்களோ அவர்களையே நாம் வணங்குகிறோம் என்பது கடமையைச் செய்யப் போய்ச் சிவபெருமானிடம் உதை வாங்கின காலனுக்கும் பொருந்தும்; இலக்கியப் பொறுக்கிகளிடம் தேடிப் போய் வலிந்து உதை கேட்கும் "காலத்துக்கும்" பொருந்தும்.

## இரங்கு வரிசை

காலச் சுவடு இலக்கிய மடம் (பி) லிமிட்டங் கம்பனி இப்போது சுந்தர ராமசாமி என்ற கம்பனியின் ஸ்தாபகரை பாரதிக்கும் புதுமைப் பித்தனுக்கும் சமமாக உயர்த்துகிற நோக்கில் ஒரு திருவிழாவை நடாத்தியது. புதுமைப் பித்தனிடம் இருந்த சொற்ப அரசியல் அடையாளத்தையும் அழிப்பதில் தீ விரங்காட்டிய ராமிசாமியை பாரதி- புதுமைப்பித்தன்- கு.ரா. என்று வரிசை ப்படுத்தியிருப்பது சமூக அக்கறையைப் பொறுத்த வரை ஒரு உண்மையான இறங்குவரிசை தான்.

## பாவம் அப்பா!

குமுதம் சஞ்சிகையில் தமிழக முதல்வரின் மகளும் காலச் சுவடு போன்றவற்றின் செல்லப்பிள்ளையுமான கனிமொழியிடம் கருணாநிதி ஏன் ஈழத்தமிழர் பிரச்சினையில் அடக்கி வாசிக்கிறார் என்ற கேள்விக்கு ''பாவம் அப்பா! அவரால் என்ன செய்ய முடியும்'' என்கிற விதமான பதில் கிடைத்திருக்கிறது. டில்லியை மீறி அவரால் எதுவுஞ் செய்ய முடியாது என்பது தான் அவரது விடையின் பொழிப்பு. அப்படியானவர் ஈழத் தமிழர் பிரச்சனை பற்றிக் கருணாநிதி வாய் திறப்பானேன்?

டில்லியிடம் பேசி எதையும் சாதிக்க முடியாதென்றால், அதை வெளிவெளியாகச் சொல்லாமே! சொன்னால், பாவம் அப்பா, தமிழகத்தில் வளர்ந்து வருகிற ஈழத்தமிழர் அனுதாப அலைக்கு முன்பு தாக்குப் பிடிக்க மாட்டாரே!

## நாலு நடக்கும் உலகிலே

நற்குணன்

### அமெரிக்க மனிதாபிமான அக்கறை

மிக அண்மையில் தான் ருவாண்டாவில் 1994ல் நடந்த இனப்படுகொலை பற்றிய திரைப்படத்தைப் பார்க்கக் கிடைத்தது. ஏறத்தாழ எட்டு லட்சம் பேரைப் பலி எடுத்த அந்த வெறியாட்டத்தின் போது அமெரிக்க அரசாங்கம் அது இன ஒழிப்பு என ஏற்க மறுத்ததுடன் ஐ. நா. படைகளின் கரங்களை வலுப் படுத்தவும் மறுத்தது என்பதை அப் படம் வலுயுறுத்திக் கூறுகிறது.

படத்தின் பல வேறு காட்சிகள் இங்கு நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை பற்றிக் கூறுவது போலிருந்தது. ருவாண்டாவிற் போல இங்கு 1983 ஐ மிஞ்சிய ஒரு இன ஒழிப்புக் கொலை வெறியாட்டம் நடந்தாலும், அமெரிக்கா அங்கு நடந்து கொண்டட்டு போலவே இடையிடைம் கவலை தெரிவித்துவிட்டுக் கையைக் கட்டிக் நடக்கட்டும் எனப் பார்த்துக் கொண்டிருக்கும் என்பது உறுதி. இது தமிழ் மேட்டுக்குடித் தலைவர்கட்கும் புலம் பெயர்ந்த தமிழ்ப் பிரமுகர்கட்கும் என்று தான் விளங்குமோ?

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்




**107 அமைச்சர்கள்** | **122 உறுப்பினர்கள்** | **450 கோடி டொலர் உதவி**

# இரத்தம் வழிந்தோடும் நாட்டையும் மக்களின் அவல வாழ்வையும் மீட்டெடுக்க முடியுமா?

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சி தமது இரண்டாவது ஆண்டினுள் பிரவேசித்துள்ளது. இவ்வேளை ஒரே ஒரு அது சாதனையை நிலை நாட்டியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் இருந்து பத்தொன்பது பேரையும், சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசில் இருந்து ஆறு பேரையும், ஜாதிக ஹெல உறுமயவில் இருந்து ஒன்பது பேரையும் பதவி விருதுகள் வழங்கி தம்பக்கம் வரவழைத்துள்ளது. இப்பொழுது பதினைந்து அரசியல் கட்சிகளைச் சேர்ந்த 122 பேர் அரசாங்கப் பக்கத்தின் உறுப்பினர்கள். இதனால் அறுதிப் பெரும்பான்மை ஏற்பட்டுள்ளது, இதில் வேடிக்கை யாதெனில் 122 உறுப்பினர்களில் 107 பேர் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர். அபிவிருத்திக்காக அமைச்சுகளை வைத்து அதற்கு தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கிய காலம் ஒன்று பெயரளவில் தானும் இருந்தது. ஆனால் இன்று ஆட்சகளைத் திருப்திப்படுத்த பரிசில்கள் வழங்குவது போன்று அவர்களுக்காக அமைச்சுப் பதவிகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே அரசின் முக்கிய அமைச்சரும் சி.ல.சு. கட்சியின் பொதுச் செயலாளருமான மைத்திரிபால சிறிசேனா தான் அமைச்ச ராக இருப்பதில் வெட்கம் கொள்வதாகக் கூறியுள்ளார்.

மொத்தம் 107 அமைச்சர்களில் 53 பேர் முழு அமைச்சர்கள். 20 பேர் அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்கள், 34 பேர் பிரதியமைச்சர்கள் என நியமனம் பெற்றுள்ளனர். இவர்கள் மாதாமாதம் விழுங்கப் போகும் பணமும் அனுபவிக்கவுள்ள வளங்களும் யாருடையவை. அவர்கள் கொண்டு வந்த நிலவுடைமை முதலாளித்துவ முதுசச் சொத்தல்ல. இந்நாட்டு தொழிலாளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் வெயர்வை சிந்தியும் இரத்தத்தைப் பிழிந்தும் உழைத்த உழைப்பிலிருந்து உறுஞ்சப்பட்டவையேயாகும். தோட்டத் தொழிலாளர்களுக்கு 300 ரூபா நாட்சம்பளம் வழங்க மறுத்து ஒரு சில ரூபாய்களைப் பிச்சை போன்று வழங்க சிபார்சு செய்த மகிந்த சிந்தனை அரசாங்கம் தான் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்களுக்கு பல ஆயிரக் கணக்கான ரூபாய்களால் சம்பளத்தையும் விஷேச படிகளையும் வழங்கிக் கொண்டது.



அதேநேரம் அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த வருடத்தில் உயர்த்தப்பட்ட சிறுதொகை சம்பள உயர்வுடன் வயிற்றை இறுக்கிக் கொள்ளுமாறு செய்துள்ளது. ஆனால் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு நாளுக்கு நாள் வானத்தை நோக்கி ரொக்கட் வேகத்தில் உயர்ந்து செல்கிறது, இதனால் ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்கள் நாளாந்தம் பல முனை வாழ்க்கை அவலங்களை எதிர் கொண்டவர்களாகி செய்வதறியாது தடுமாறி வருகின்றனர். இவற்றின் விளைவாக பன்முக நெருக்கடிகளும் சமூகச் சீரழிவுகளும் வளர்ந்து வருகின்றன. மக்கள் சகல நிலைகளிலும் விரக்தியும் வேதனையும் கொண்டவர்களாகி நிற்கின்றனர்.

இவற்றிலிருந்து நாட்டு மக்களைத் திசை திருப்ப யுத்தம் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பாணியைப் பின்பற்றி பயங்கரவாத எதிர்ப்பு பஜனை பாடப்படுகின்றது. இதன் பயங்கர விளைவுகள் வடக்கு கிழக்கில் மட்டுமன்றி நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவி வருகின்றது, கொலைகள் ஆட்கடத்தல்கள் கப்பம் பெறுதல் பழிக்குப் பழி வாங்குதல் போன்றன நாளாந்தம் நடைபெற்று வருகின்றன. மனிதர்கள் எவ்வித தயவு தாட்சண்யமும் இன்றி இரவிலும் பகலிலும் மிருகத்தனமாகக் கொன்று குவிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஐந்து மணித்தியாலங்களுக்கும் ஒருவர் கொல்லப்படுகின்றார் எனக் கூறப்படுகின்றது, கடந்த வருடத்தின் யூலை முதல் டிசம்பர் வரையில் 229 பேர் வரை படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந் நிலை இவ் வருடத்தில் மேலும் அதிகரித்துள்ளது, கடந்த மாதத்தில் மட்டும் வவுனியாவில் ஐம்பது பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது, இவையாவும் போர் முனை இறப்புகளுக்கு அப்பால் இடம் பெற்று வருபவையாகும். இத்தகைய மோசமான மனித உரிமை மீறல்களுக்கு உரிய பதிலை அரசாங்கமே கூற வேண்டும். ஆனால் அரசாங்கம் நடக்கட்டும் என்ற தோரணையில் மட்டுமன்றி தமது பங்கிற்கு அரச பயங்கரவாதத்தையும் உள்ளூர முடுக்கி விட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு ராணுவத் தீர்வே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, ஆனால் வெறுமனே அரசியல் தீர்வு உச்சரிக்கப்பட்டு யுத்தத்திற்கு ஒரு கவசமாகப் பயன்படுத்தப்படுகின்றது. அமெரிக்கா தலைமையிலான சர்வதேச சமூகமும் இந்திய ஆளும் வர்க்கமும் தத்தமது உலகமயமாதல் திட்ட ஊடுருவல்களை மையமாக வைத்தே தமது காய்களை நகர்த்தி வருகின்றன. அதன் அடிப்படையிலேயே கடந்த மாதக் கடைசியில் இலங்கையின் காலி நகரத்தில் நடாத்திய உதவி வழங்கும் மாநாடு 450 கோடி அ. டொலர் நிதி உதவியை இலங்கைக்கு வழங்க தீர்மானித்தது. அடுத்த மூன்று வருடத்தில் அந்நிதி செலவு செய்யப்பட வேண்டிய இடங்களையும் அடையாளப்படுத்திக் காட்டியது அம் மாநாடு. அதிவேகப் பாதைகள் விமான நிலையங்கள் துறைமுகங்கள் மற்றும் தனியார்துறை விஸ்தரிப்பு போன்றவற்றுக்கே அந்நிதி பயன்பட வேண்டும் என்பதே அக்கொடையாளிகளின் ஆணையும் ஆலோசனைகளுமாகும். இவற்றால் நம் நாட்டு தேசிய பொருளாதாரத்திற்கு எவ்வித நன்மையும் கிடைக்கப் போவதில்லை. அதன் அழிவுகளுக்கே மேன் மேலும் வலுவூட்டப்படுகிறது.

ஆதலால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஊதிப்பெருப்பிக்கப்பட்ட அமைச்சரவை மூலம் நாடு அபிவிருத்தி சுபீட்சம் அரசியல் தீர்வு சமாதானம் நோக்கிச் செல்லும் என்று எவரும் கனவுகாண முடியாது. எனவே இரத்தம் வழிந்தோடும் நாட்டையும் அவலங்கள் நிறைந்த மக்களின் வாழ்வையும் அவற்றிலிருந்து மீட்டெடுப்பதற்கு மகிந்த சிந்தனையாலும் அதற்குப் பின்னால் அணி சேர்ந்து நிற்கும் ஆளும் வர்க்க கனவான்களாலும் முடியுமா என்பதே கேள்வியாகும். முடியாது என்றே உழைக்கும் மக்கள் சார்பாக நாம் உறுதியிட்டுக் கூறமுடியும். அதற்கு காரணம் உண்டு. இன்று ஜனாதிபதி மகிந்த தலைமையில் அணி திரண்டு நிற்போர் யார் என்பதே முக்கியமானதாகும். நிலவுடைமை வழி வந்த முதலாளிகள், தரகு முதலாளிகள், அமெரிக்காவிற்கும் இந்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளுக்கும் செங்கம்பளம் விரித்து வரவேற்போர், பௌத்தசிங்கள பேரினவாதிகள் தமிழ் முஸ்லீம் தேசியம் பேசி சொத்து சுகம் அனுபவிப்போர் போன்ற உழைக்கும் மக்கள் விரோத ஆளும் வர்க்க சக்திகளே அணிதிரண்டுள்ளனர். இவர்கள் எவ்வாறு நாட்டிற்கும் மக்களுக்கும் சேவை செய்து வழிகாட்டுவார்கள். இதனை அனைத்து மக்களும் அரசியல் ரீதியில் சிந்திக்க வேண்டும். மக்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தக் கூடிய மாற்று வெகுஜனப் பாதை பற்றி ஆழ்ந்து நோக்க வேண்டும்.

## தமிழ் முஸ்லீம் கட்சிகளின் சரணாகதி சொத்து சுகம் பதவிகளுக்கே தேசியம் பயன்படுகிறது

தற்போதைய அரசாங்கத்தில் தமிழ் முஸ்லீம் கட்சிகள் பங்கு கொண்டு அமைச்சர் பதவிகளைத் தாராளமாகப் பெற்றுள்ளன. எதற்காக இவ்வாறு பதவிகள் வகிக்கின்றனர் என்பது இரகசியமான ஒன்றல்ல. கடந்த காலங்களிலும் இப்பொழுதும் அமைச்சர் பதவிகளாலும் ஏனைய உயர் பதவிகளாலும் சொத்து சுகம் பெற்று தம்மையும் தம்மவர்களையும் வளமாக்கிக் கொண்டவர்கள் தான் இத் தமிழ் முஸ்லீம் கட்சிகளின் தலைமைகள். மலையக மக்களைப் பற்றி இ. தொ. கா. வும் மலையக மக்கள் முன்னணியும் பேசும் போது இனமொழி பிரதேச விசுவாசம் கொப்பளிக்கும். உருக்கமும் உணர்ச்சியும் ததும்பும் 'எமது மக்கள்' என்று பேசும் போது மலையகத் தேசியம் துலங்கி நிற்கும். ஆனால் எந்த அரசாங்கத்திலும் இணைவதையும் பேரினவாத ஆளும் வர்க்கத்தின் முன் சரணாகதி அடைவதையிட்டும் வெட்கம் கொள்ளாதவர்கள் தான் ஆறுமுகமும் சந்திரசேகரனும்.

அதேபோன்று முஸ்லீம் தலைமைகளும் தன்மானம் சுயகௌரவம் பற்றி நீட்டிப் பேசினாலும் இறுதியில் சரணம் சாமி என வீழ்ந்து கொள்வார்கள். இந்த வரிசையில் ரவ்.ஃவூஹக்கீம் சற்றுத் தாமதமாகி சென்றடைந்துள்ளார்.

தற்போதைய அரசாங்கத்தின் முழு முதல் தலைவரான ஜனாதிபதிய ஒற்றையாட்சியை வற்புறுத்தி நிற்கும் பேரினவாத நிலைப்பாடு கொண்டவர். அவரது நிலையைப் பலப்படுத்த அவரது கட்சிக்குள் பலர் இருந்து வருகின்றார்கள். அவர்கள் போதாதென்று தற்போது ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து சென்ற கரு ஜெயசூரியா, நவீன் திஸநாயக்கா ஹேமகுமார நாணயக்காரா பந்துல குணவர்த்தனா போன்ற பேரினவாத நிலைப்பாட்டாளர்கள் அணிசேர்ந்திருக்கிறார்கள். இந்த அணிசேர்வை அவதானித்த பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் பிரதிநிதியான ஜாதிக ஹெல உறுமயவும் அரசாங்கத்தில் இணைந்திருக்கிறது, வாய்திறந்தால் பேரினவாத நஞ்சைக் கக்கும் சம்பிக்க ரணவக்க அதன் அமைச்சராகியுள்ளார்.

இத்தகைய பேரினவாத சக்திகளோடு தான் மலையகத் தேசியம் பேசியோரும் முஸ்லீம் தேசியம் முன் வைத்தோரும் ஒரே அமைச்சரவையில் ஒரே அரசாங்கப் பக்கத்தில் ஒன்றிணைந்துள்ளனர். இது தற்செயலானதும் இல்லை. அதிசயமானதும் அல்ல. இன மொழி மத பிரதேச தேசியங்கள் பேசும் எவரும் இறுதியில் வர்க்கம் என்ற மையப் புள்ளியில் இணையும் போது பேசிய தேசியங்கள் எல்லாம் காற்றோடு கலந்தவையாகிவிடுவது இயல்பாக இடம் பெற்று வருவதேயாகும். இன்று பாராளுமன்றத்தில் எஞ்சி இருப்பது தமிழ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே தற்போதை விஷேட சூழல் இல்லாவிடின் அவர்களில் சிலர் கூட பக்கம் மாற மாட்டார்கள் என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. அண்மையில் இரண்டு தமிழர் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதியைச் சந்தித்த விடயம் ஊடகங்களுக்கு கசிந்து கொண்டது.

எனவே இடம் பெறும் நிகழ்வுகளின் ஊடே தேசியத்தின் வர்க்க இயல்பையும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் எவ்வளவுக்கு மக்கள் விரோதம் கொண்டது என்பதையும் புரிந்து கொள்வதற்கு இது உரிய சந்தர்ப்பமாகும்.

## அமைச்சர்களுக்கு வழங்கப்படும் கொழுத்த சம்பளம் யாருடைய பணம்?

**அமைச்சர்களின் சம்பள விபரம்**

| | |
|---|---|
| பா. உறுப்பினர் சம்பளம் | ரூபா 54,285 |
| அமைச்சர்களுக்கான மேலதிக படிகள் | ரூபா 96,500 |
| மொத்தம் | 150785 |
| 15 ஊழியர்களுக்கான சம்பளம்+படிகள் | ரூபா-700000 |
| 7 பாதுகாப்பு அதிகாரிகளின் சம்பளம்+படிகள் | ரூபா 120000 |
| மொத்தம் | 820000 |

**ஒரு அமைச்சருக்கான மாதாந்த மொத்தச் கொடுப்பனவும் செலவும்97,0785/=**

* அமைச்சர்களுக்கும் அவர்களின் செயலாலளர்களுக்குமான தொலைபேசிக் கட்டணங்கள் அரசாங்கமே வழங்குகிறது.

**பிரதி அமைச்சர்கள்**

| | |
|---|---|
| பா. உறுப்பினர் சம்பளம் | ரூபா 54, 285 |
| பிரதி அமைச்சருக்கான மேலதிகப் படிகள் | ரூபா 96, 500 |
| | 150, 785 |

**ஊழியர்கள்**

| | |
|---|---|
| 10 ஊழியர்கள் சம்பளம் மற்றும் படிகள் | ரூபா 500000 |
| 6 பாதுகாப்பு அதிகாரிகள் சம்பளம் + படிகள் | ரூபா 100000 |
| மொத்தம் | 600000 |

**ஒரு பிரதி அமைச்சருக்கான மாதாந்த கொடுப்பனவும் மொத்தச் செலவும் 750785/=**

**107 அமைச்சர்களுக்கான மாதாந்த மொத்த சம்பளமும் அமைச்சு செலவும் 99959865ரூபாவாகும்**

**(9கோடி 99லட்சத்து 59 ஆயிரத்து 865 ரூபாவாகும்**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சர்வதேச சமூகம் மௌனம் சாதிப்பதேன்? வெறும் எதிர்பார்ப்புகள் ஏமாற்றங்களேயாகும்!

**வெகுஜனன்**

கிழக்கின் வாகரைப் பிரதேசத்தில் இருந்து மக்கள் முற்றாக வெளியேறி விட்டார்கள். அகோரத்தனமான எறிகணை வீச்சுக்களும் பல்குழல் பீரங்கித் தாக்குதல்களும் அங்கிருந்து மக்களை அநாதரவான சூழலில் விரட்டி விட்டுள்ளன. சுமார் அறுபதினாயிரம் மக்கள் மட்டக்களப்பின் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கால்நடையாகவும், உழவுயந்திரங்கள், வள்ளங்கள் மூலமாகவும் கையில் கிடைத்தவற்றுடன் வந்து குவிந்துள்ளனர். பாடசாலைகள், கூடாரங்கள், மற்றும் பொது இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் அன்றாட வாழ்வு வேதனைகள் சோதனைகள் கெடுபிடிகள் மத்தியில் கழிந்து கொண்டிருக்கின்றது.

1995ம் ஆண்டின் நவம்பரில் யாழ்ப்பாணம் வலிகாமத்திலிருந்து ராணுவ நடவடிக்கை காரணமாக மக்கள் முற்றாக வெளியேறியதும் வெளியேற்றப்பட்டதும் போன்றே இன்று வாகரையில் நடைபெற்றிருக்கிறது. வாகரை மக்களின் அவலங்களின் மத்தியில் இப்பொழுது மட்டக்களப்பின் படுவான்கரைக்கு மேற்கே உள்ள பிரதேசங்களில் இருந்தும் மக்கள் ராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வர ஆரம்பித்துள்ளனர். அன்று வலிகாமத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு தென்மராட்சியும் வன்னிப் பிரதேசங்களும் கை கொடுத்தன. அத்துடன் யாழ்ப்பாணத்தின் பொருளாதார வசதி வாய்ப்புகளும் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழ்ந்து வந்த உறவுகளும் ஆதாராமாகவும் அரவணைப்பாகவும் இருந்தன.

ஆனால் கிழக்கின் பொதுவான பின்தங்கிய நிலையும் வாகரை படுவான் கரைக்கு மேற்கே உள்ள மக்களின் நிலையும் வடபுலத்துடன் ஒப்பிடக் கூடிய தொன்றல்ல. முற்றிலும் விவசாயத்தையும் மீன்பிடியையும் அவற்றோடு இணைந்த தொழில்களினதும் உழைப்பாளர்களான மக்கள் எதனைத் தான் செய்ய முடியும். அரசாங்கத்தின் அற்ப சொற்ப நிவாரணங்களுடனும் அரசு சார்பற்ற நிறுவனங்களிடம் கையேந்தி நிற்பதையும் தவிர வேறு வழி தெரியாது மக்கள் முடமாக்கப்பட்டவர்கள் போன்று இருந்து வருகிறார்கள். சிறுவர்கள் முதல் வயதானோர் வயோதிபர் நோயாளர்கள் வரை கூறும் கண்ணீர் கதைகள் கல் நெஞ்சம் கொண்டோரையும் கதிகலங்க வைப்பனவாகவே காணப்படுகின்றன.



ஏற்கனவே யுத்தம் பொருளாதாரத் தடை போராட்டத்தின் போட்டா போட்டிக் கொலைகள் போன்றவற்றுக்குள் சிதறிய மக்களான கிழக்கின் மக்கள் சுனாமியின் கொடிய அலைகளாலும் அழித்து சின்னாபின்னப் படுத்தப்பட்டவர்கள். இன்று கிழக்கில் தொடர்ந்தும் அகதிகளாகி வருவோரின் எண்ணிக்கை பல ஆயிரக் கணக்கில் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. இவர்களுக்கான அரசாங்க உதவிகள் ராணுவத்தின் மூலமும் அரசாங்க பணிமனைகள் மூலமாகவும் வழங்கப்படுகின்றன. அத்தகைய நிவாரண உதவிகளால் இடம் பெயர்ந்து அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுறும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாதுள்ளது. இதனால் உணவு இருப்பிடம் சுகாதாரம் கல்வி என்பனவற்றைப் பெற முடியாத அவல நிலையே நீடித்து வருகின்றது. போதாதற்கு மழை வெள்ளம் அம் மக்களைப் பாதித்து வருகின்றது.

இவ்வாறே வடக்கில் ஏ9 பாதை மூடப்பட்டதால் அன்றாட வாழ்வுக்கு மக்கள் அல்லற்படுகின் றனர். பொருட்கள் தட்டுப்பாடும் விலை உயர்வுகளும் பலமுனை அவலங்களுக்குள் மக்களைத் தள்ளி வருகின்றன. பச்சைத் தண்ணீரைக் குடித்து பட்டினி கிடந்தாலும் பரவாயில்லை என்று குடாநாட்டில் வாழும் மக்களை வெள்ளைவான் ஆட்கடத்தல்களும் பழிக்குப் பழியான கொலைகளும் தினம் தினம் அழித்துக் கொண்டே இருக்கின்றன. புரிந்துணர்வும் யுத்த நிறுத்தமும் எழுதப்பட்ட காகிதங்கள் வடக்கு கிழக்கு மக்களின் இரத்த வெள்ளத்திலும் கண்ணீர் கடலிலும் மிதக்கின்றன.


சில மாதங்களுக்கு முன்பு சர்வதேச சமூகம் தமிழர்களுக்கு ஆதரவாக வரப் போகின்றது. அள்ளிக் கொட்டப் போகின்றது. ஆளும் அரசாங்கத்திற்கு அழுத்தங்களும் அலுப்பும் கொடுக்கப் போகின்றன என தமிழ் ஊடகங்களின் கற்பனா கண்ணோட்ட ஆய்வாளர்கள் எழுதித் தள்ளினார்கள். இந்தியா மீது சலித்த இவர்கள் கூட்டமைப்பு பா. உறுப்பினர்களை டில்லிக்கு அழைத்ததும் தத்தமது பேனாக்களை சற்று உதறிக் கொண்டு உசாராக எழுதி எம்மை இந்தியா கைவிடாதென்றனர்.

ஆனால் இன்று வடக்கிலும் கிழக்கிலும் இடம் பெற்றுவரும் பாரிய அளவிலான மனிதப் பேரவலம் பற்றி தமிழர் தலைமைகளும் தமிழ் ஊடகங்களும் எதிர்பார்ப்புடன் இருந்து வந்த சர்வதேச சமூகம் என்பதும் "தொப்பிள் கொடி" உறவுடையதெனக் கூறப்படும் இந்தியாவும் என்ன செய்து கொண்டிருக்கின்றன. ஏன் கண்களையும் காதுகளையும் பொத்தி நிற்கின்றன.

இவ்விடத்திலே தான் நாம் ஏற்கனவே புதிய பூமியில் தொடர்ந்து சுட்டிக் காட்டிவந்த சாரம்சமான விடயம் வெளிச்சத்தில் வெளிப்பட்டு நிற்கின்றது. சர்வதேச சமூகம் என்ற அமெரிக்கா ஐரோப்பிய ஒன்றியம் யப்பான் நோர்வே உள்ளிட்ட நாடுகள் தமக்குரிய நிகழ்ச்சி நிரலுடன் தான் இலங்கையின் இனப்பிரச்சினையில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனவே தவிர ஒடுக்கப்படும் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்கல்ல. அத்தகைய சர்வதேச சமூகத்திற்கு கடந்த இருபது வருடங்களில் யுத்தம் தேவைப்பட்டது. அதன் மறைவில் உலகமயமாதல் தனியார்மயம் தாராளமயத்தை முன்னெடுக்க முடிந்தது. ஜே.ஆர். தொடக்கி வைத்த பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தை சந்திரிகா தொடர்ந்தார். அதன் விட்டகுறை தொட்ட குறை எல்லாவற்றையும் சேர்த்து பிரகடனப்படுத்தப்படாத யுத்தத்தினை மகிந்த சிந்தனையின் கீழ் மகிந்த ராஜபக்ஷ முன்னெடுக்கின்றார். எனவே இப்பொழுது சர்வதேச சமூகம் என்னும் ஏகாதிபத்திய முதலாளித்துவ உலகத்தவர்களுக்கு இலங்கையில் அமைதி தேவைப்படுகிறது. ஏனெனில் அவர்களது. பல்தேசிய நிறுவனங்களின் முதலீடுகளுக்கும் நுகர்வு வர்த்தகத்திற்கும் இடைஞ்சல் ஏற்படக் கூடாது என்பதற்காகவேயாகும். இதே நிலைதான் இந்திய பிராந்திய மேலாதிக்கவாதிகளுடையதாகவும் உள்ளது. இந்திய முதலீடுகள் பெருகியுள்ளன. வர்த்தக ஒப்பபந்தத்தால் பெரும் பயன்கள் கிடைத்து வருகின்றன. இத்தனைக்கும் மத்தியிலேயே திருகோணமலையில் அனல் மின்நிலையத்தை உருவாக்க இந்தியா இலங்கை அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. இவற்றின் சாராம்சங்களைப் புரியாது "தாய் நாடு" "தொப்புள் கொடி உறவு" "எங்களை இந்தியா கைவிடாது" என்றெல்லாம் பக்கம் பக்கமாக எழுதுவதெல்லாம் தமிழ் மக்களை மயக்க நிலையில் வைத்திருப்பதற்கேயாகும்.

எனவே சர்வதேச சமூகம் என்ற அமெரிக்கா தலைமையிலான ஏகாதிபத்திய நாடுகளும் இந்தியபிராந்திய வல்லரசும் தமிழ்த் தேசிய இனத்திற்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் மட்டுமன்றி முழு இலங்கை மக்களினதும் எதிராளிகளாவர் என்பது உணரப்படல் வேண்டும். அவர்கள் எவரும் தமிழர்களுக்காகவோ சிங்களவர்களுக்காகவோ முஸ்லீம்களுக்காகவோ குரல் கொடுக்கவோ உதவவோ வரமாட்டார்கள். வருவது போல் நடிப்பதும் குரல் கொடுப்பதும் தத்தமது ஆதிக்க ஊடுருவல்களுக்காகவே என்பதை தமிழ் மக்கள் புரியாத வரை எதிர்பார்த்து ஏமாறும் நிலை யே நீடிக்கும்.

# ஜே. வி. பி. வேலிக்கு வெளியே தள்ளி விடப்பட்டுள்ளது.



மகிந்த சிந்தனையைக கோர்த்தெடுத்ததும் மகிந்த ராஜபக்ஷாவை ஜனாதிபதியாக்கியதும் தாமே என மார்த்தட்டி வந்த ஜே. வி. பி. தற்போது அரசாங்கத்தின் எல்லைக்குள் இருந்து வெளியே தள்ளி விடப்பட்டுள்ளது. இதுவரை காலமும் வளவுக்குள் நின்று குரைத்து கடிப்பது போல் மிரட்டி வந்த ஜே. வி. பி இனிமேல் வெளிவளவில் நின்று உரத்துக் குரைக்கத் தயாராகி விட்டது. அந்தக் குரைப்பின் பிரதான சத்தம் இனவாதமாகவே இருக்கும். வெறும் இனவாதமல்ல இனவெறியாகவும் நீண்டு கொண்டிருக்கும். ஏனெனில் தமது பேரினவாத நிகழ்ச்சி நிரலை உள்ளடக்கிய பன்னிரண்டு கோரிக்கைகளுடனேயே மகிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதித் தேர்தலின் போது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஜே. வி. பி செய்திருந்தது. ஆனால் இன்று அந்த ஒப்பந்தம் பொய்யாய் கனவாய் பழங்கதையாய் போய் விட்டது என்றே ஜே. வி. பியினர். புலம்புகிறார்கள் இந்தப் புலம்பல்கள் விரைவில் வீதிகளில் எதிரொலிக்கப் போகின்றன என்றே அரசியல் அவதானிகள் எதிர் பார்க்கின்றனர். அதற்கான பரீட்சார்த்தமாக ஏற்கனவே வேலைநிறுத்தம், மறியல், ஆர்ப்பாட்டம் எனத் தொடங்கப்பட்டன. ஆனால் இவற்றை மகிந்த சிந்தனையும் அதனை நடைமுறைப்படுத்துவோரும் எவ்வாறு எதிர்கொள்வார்கள் என்பது எதிர்பார்க்கப்படும் கேள்வியாகவே உள்ளது. எதற்கும் ஜே. வி. பி. நம்பி இருப்பது இனவாதக் கூச்சல் அரசியலையேயாகும். அரசாங்கப் பக்கத் திலிருந்து எதிர்க்கட்சியில் அமர்ந்தாலும் ஜே. வி. பி தனது இனவாதச் சத்தத்தைக் கைவிடமாட்டாது. தேசிய இனப் பிரச்சினைக்கு அரசி யல் தீர்வைக் காணும் ஒவ்வொரு முயற்சியையும் எதிர்க்கும் ஜே. வி. பி. ராணுவத் தீர்வை மேலும் வற்புறுத்தும் நிலை வேகமடையவே செய்யும்.

அதேவேளை ஜே. வி. பிக்குள் உள் உடைவுகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி வருகின்றது. தலைமைப் பொறுப்பில் இருந்த முக்கிய புள்ளியான நந்தன குணத்திலக்கா (ஜே. வி. பியின் ஜனாதிபதி வேட்பாளராக நின்றவர்) ஏற்கனவே வெளியேறி விட்டார். அவர் சி. ல. சு கட்சியின் களுத்துறை மாவட்ட அமைப்பாளராகி விட்டதாகவும் அறியமுடிகிறது. அவரைத் தொடர்ந்து பலர் வெளியேறலாம் என்றும் பேசப்படுகின்றது. இவை அனைத்திலும் இருந்து ஜே.வி.பி எவ்வாறு தன்னை நிலை நிறுத்தப் போகின்றது என்பது கேள்வியேயாகும்.

# பாதைக்குரிய பாராளுமன்ற இடதுசாரிகள்

தங்களுடைய பாராளுமன்ற சந்தர்ப்பவாதக் கொள்கைகளுக்காக மாக்சிசக் கொள்கை கோட்பாடு அனைத்தையும் துறந்தவர்கள் சமசமாஜ- கம்யூனிஸ்ட் கட்சியினர். இன்று அவர்களிடம் எஞ்சியிருப்பது பழைய பெயர்ப்பலகை மட்டுமே. இவர்களுக்கு கிடைக்கும் வாக்குகள் சிகப்பு நிறத்திற்காகவோ அல்லது இடதுசாரிக் கொள்கைகளுக்காகவோ அல்ல. முதலாளித்துவ பாராளுமன்றத் தேர்தலின் வாக்குகள் பெறும் குறுக்கு வழிமுறைகளின் மூலமேயாகும். அத்துடன் பழைய பெயரைக் கூறியும் கொஞ்சம் பொறுக்குவார்கள். அதுவும் தனித்து நின்றல்ல. சி. ல. சு. கட்சியில் இணைந்தேயாகும். இதன் மூலம் ஒரு சில ஆசனங்கள் கிடைக்கும். அவற்றை வைத்து ஒவ்வொரு அமைச்சர் பதவிகளையும் இரண்டு கட்சியினரும் பெறுவர். நாட்டின் பிரதான பிரச்சினைகளில் மௌனம் காப்பர். அல்லது சப்பை கட்டும் நியாயங்கள் கூறுவர். தேசிய இனப்பிரச்சினையில் பேரினவாதத்தைப் பகைக்காது நடந்து கொள்வர். சில வேளைகளில் பயங்கரவாதம் தீவிரவாதம் என விளக்கமும் அளிப்பர். சிறுபான்மை பெரும்பான்மை எனக் கணக்குக் காட்டி தமிழர் முஸ்லீம் மலையக மக்கள் தனித்துவமற்று பணிந்து அடங்கிப் போக வேண்டும் எனவும் பரிந்துரை செய்வார்கள்.

இவற்றுக்கும் மேலாக தாம் யூ. என். பி. எதிர்ப்பிற்காகவே அரசாங்கத்தில் இருப்பதாகக் கூறி வந்தனர் இந்த இடதுசாரிகள். ஆனால் இப்போது அதே பச்சை யூ. என். பி. யின் தடித்த தரகு முதலாளிகளுடன் சேர்ந்து ஒரே அமைச்சரவையில் வீற்றிருக்கின்றனர். நிறங்களோ கொள்கை இலட்சியம் கோட்பாடுகளோ முக்கியமல்ல. நாட்டைப் பாதுகாப்பதே இப்போதைய கடமை என்று கூறுவதையும் இடக்காதில் கேட்க முடிகிறது. யாரிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பது என்பதே கேள்வி. அமெரிக்காவின் உலக மேலாதிக்கம், உலகமயமாதல், தனியார்மயம், தாராளமயம், இந்தியபிராந்திய மேலாதிக்கம் இலங்கையின் தரகுமுதலாளிகள் பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்கம் என்பனவற்றிடம் இருந்து இலங்கையைக் காப்பாற்றுவதா? அல்லது தமிழ் மக்களின் கோரிக்கைகள் போராட்டங்களில் இருந்தும் ஏனைய மக்களின் வாழ்வுக்கான போராட்டங்களில் இருந்தும் நாட்டைக் காப்பாற்றுவதா? இப் பாராளுமன்ற இடதுசாரிகள் இலங்கையின் ஆளும் வர்க்கத்தின் சேவகர்களாகி அதிக ஆண்டுகள் கழிந்து விட்டன. அவர்களிடம் மக்கள் சார்பையோ தேசிய இனங்கள் மீதான அக்கறையையோ அல்லது ஏகாதிபத்திய எதிர்ப்பையோ துளியளவும் காண முடியாது. நாம் கோருவது என்னவெனில் தயவு செய்து இன்னும் இடதுசாரிகள் என்று கூறி மக்களை ஏமாற்றாது வேஷமிடாது உங்கள் உயர்வர்க்க ஏகாதிபத்திய விசுவாசத் தைத் தொடருங்கள் என்பதையேயாகும்.

www.padippakam.com                                        நன்றி - நூலகத்திட்டம்



# பெருந்தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் வெளியேறுவதால் விடுதலை கிடைக்குமா?

**தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய நிலை**

மலையக சமூகம் இன்னும் பின்தங்கிய சமூகமாக இருப்பதாக ஆதாரபூர்வமாக சொன்னாலும் அதிகமானோருக்கு பிடி ப்பதில்லை. ஆசிரியர்கள் வர்த்தகர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், விரிவுரையாளர்கள், பொறியியலாளர்கள் போன்றோர் இருப்பதாக எடுத்துக்கூறும் அத்தகையோர் சமூகம் முன்னேறிவிட்டதாக கூறுகின்றனர். அதாவது தோட்டத் தொழிலாளர்களாகவன்றி ஏனைய தொழில்துறைகளில் சமூகம் முன்னேறிவிட் டதாக கூறுகின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்களாக இருக்க வேண்டுமா என்றும் அவர்களின் பரம்பரையும் தோட்டங்களிலேயே இருக்க வேண்டுமா என்றும் கேள்வி எழுப்புவர்கள் இன்னும் இருக்கின்றனர். அதாவது மலையக சமூகத்தில் பெரும்பான்மையானோர் தோட்ட தொழிலாளர்களாக இருப்பதால் அச்சமூகம் அபிவிருத்தியடைந்ததாக இருக்க முடியாது என்றே நினைக்கின்றனர். காரணம் தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் மிகவும் குறைவானதாலும் அவர்களின் வாழ்க்கைத் தரம் அடிநிலையில் காணப்படுவதாலும் அவர்கள் தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்களாக இருப்பதில் என்ன பயன் என்ற விரக்தியிலேயே அக்கேள்வி எழுகிறது. அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவோ சம்பள உயர்வைப் பெறவோ முடியாது என்ற முடிவிற்கு வந்து அத்துறையை விட்டு வெளியேறுவதே சரி என்றே சிலர் கருதுகின்றனர்.

உடல் உழைப்பில் ஈடுபட்டுள்ள எல்லோரும் உடல் உழைப்பு தொழிலை விட்டு வேறு தொழில்களுக்கு மாறுவதோ வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிலரை நம்பி அனைத்து தோட்டத் தொழிலாளர்களும் மலையகத்தமிழ் மக்களுக்கும் தங்கி வாழ்வதோ சாத்தியமா?

பொருளாதாரத்தில் பொருள் உற்பத்தியே அடிப்படை. பொருள் உற்பத்தியே ஏனைய சேவைத்துறை அலுவலகத் தொழில்களுக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ ஆதாரமாக இருக்கிறது. பொருள் உற்பத்தி மனித வாழ்க்கையில் இருந்து பிரிக்கப்பட முடியாது. பொருள் உற்பத்தி அல்லாத துறைகளில் அதிகப் பெரும்பான்மையான மக்கள் ஈடுபடுவது என்பது கற்பனையான விடயமே.

பெருந்தோட்டத் தொழிற்துறையை சார்ந்த தொழிலாளர்களும், அவர்களின் வழித்தோன்றல்களும் உடல் உழைப்பில்லாத துறைகளில் சிறியளவிலாவது ஈடுபடக்கூடியளவிற்கு புலைமைசார்ந்தவர்களாக வளர்ச்சியடையவில்லை. ஒரேயடியாக அந்த வளர்ச்சியை எதிர்பார்க்கவும் முடியாது. 200 வருடங்களாக அடிப்படை வாழ்வாதார வசதிகளும், அடிப்படை சம்பளமும் மறுக்கப்பட்ட மலையக தோட்டத் தொழிலாளர் சமூகம் எவ்வாறு தோட்டத்துறை சார்ந்த உடல் உழைப்பு தொழில்களை விட்டு வெளியேறுவது?

தோட்டத் தொழிலாளர்கள் வேறு தொழில் துறைகளுக்கு செல்வது என்பது நாளாந்த சம்பளம் சிறிது அதிகமாக இருந்தாலும் கடுமையான சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுவதுடன் எவ்வித தொழில் பாதுகாப்பும் இல்லாத அத்தக் கூலிகளாக செல்வதாகவே இருக்கும். தோட்ட வேலைகள்



-இ.தம்பையா-

வீட்டுவேலைகள் கடை வேலைகள் போன்றவற்றுக்கே செல்ல முடியும். இது முன்னேறிய நிலைமையாகாது.

தோட்டத்துறையிலிருந்து வேலைகளுக்காக வெளியேறுவது என்பது நீண்ட நாட்களில் தோட்டங்கள் என்ற நிரந்த வசிப்பிடத்தை விட்டு வெளியேறுவதாகும். இதுவரையும் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு நாடோடிகளாக வீதிகளுக்கு செல்வதாகும். தோட்டங்களுக்கு வெளியில் வாழ்வதற்கான காணிகளையோ வீடுகளையோ வாங்கும் சக்தியோ சம்பாத்தியமோ தோட்டத்தொழிலாளர்களுக்கு இல்லை. இதுவரையும் வாழ்ந்துவரும் லயன்அறைகளோ அதனை சூழவுள்ள இடங்களிலோ தோட்டத்தொழிலாளர்களுக்கு உரிமை இல்லை. தோட்டங்களில் வேலை செய்வதனாலேயே அங்கு குடியிருக்கும் உரிமை இருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும்.

**பிரித்தானியர் முதல் இலங்கையில் ஆளும் வர்க்கம் வரை**

பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தினால் உருவாக்கப்பட்ட பெருந்தோட்டங்களுக்கு 1800களின் நடுப்பகுதியில் இங்கு கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களின் தொழிற்திறன் 200 வருடங்களாகியும் பாரியளவில் வளர்ச்சியடையவில்லை. 1948இல் அரசியல் நிர்வாகம் இலங்கை முதலாளிவர்க்கத்திடம் கொடுக்கப்பட்டாலும் காலனியாதிக்க மூலதனத்தின் ஆதிக்கம் நேரடியாகவும், மறைமுகமாகவும் பெருந்தோட்டங்களில் இருந்து வந்தன.

1970 களில் பெருந்தோட்டங்கள் அரசுடமையாக்கப்பட்டன. அவை சர்வதேச வர்த்தத்திலிருந்த ஏகாதிபத்திய பிடிக்கு நின்று பிடிக்க முடியாமையாலும் முதலாளித்துவ ஆட்சியில் அரசுடமை என்பது பொது உடைமையாக மாற்றப்பட முடியாது என்பதாலும் தோட்டங்களை அரசாங்கம் சரியாக பரி பாலிக்க முடியவில்லை. இலங்கையின் ஆளும் வர்க்கமும் தோட்டத்தொழிலாளர்களை இலங்கையின் தேசிய நீரோ ட்டத்தில் இணைக்காமல் தொடர்ந்து அந்நியர்களாக நடத் தியதுடன் அவர்கள் மீது பேரினவாத அடக்குமுறைகளை யும் மேற்கொண்டதனால் பெருந்தோட்டப் பொருளாதாரம் பாரிய சிக்கல்களுக்கு உள்ளானது.

1980களில் உலக வங்கி சர்வதேச நாணய நிதியம் என்பன எமது நாட்டில் மறுசீரமைப்பு என்ற பேரில் பெருந்தோட்டங்களை தனியாரிடம் மீள ஒப்படைக்கும்படி வற்புறுத்தியது. அதன் படி 1991ல் தோட்டங்கள் தனியாருக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. அதன்படி 22 பெருந்தோட்டங்கள் தோட்டக் கம்பனிகள் குத்தகைக்கு எடுத்தன. அக்கம்பெனிகள் தோட்டங்களை முகாமை செய்ய பல முகாமைத்துவ கம்பெனிகளிடம் தோட்டங்களை ஒப்படைத்தன.

தோட்டங்கள் பிரித்தானிய கம்பனிகளிடம் இருந்த காலத்தை விட 1970 இற்கு பிறகு தோட்டத்தொழிலாளர்கள் அரசாங்கத்தில் இனரீதியான திட்டமிட்ட ஒடுக்கல்களுக்கு ஆளாக்கும் திட்டம் பேரினவாத நிகழ்ச்சி நிரலை கொண்டிருந்தது. இக்காலத்தில் தோட்டங்களில் பேரினவாத குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டதாலும் பேரினவாத கெடுபிடிகளும் அடக்கு முறைகளும் மேற்கொள்ளப்பட்டதாலும் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறினர். 1964 ஆண்டு சிறிமா– சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் அதிகமான தோட்டத்தொழிலார்கள் 1970– 83 வரை பாரிய எண்ணிக்கையில் இந்தியாவுக்கு வெளியேற்றப்பட்டனர்.

தோட்டங்களில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவரும் பேரினவாத தாக்குதல்களினாலும் தோட்டங்களிலிருந்து குறிப்பாக கேகாலை இரட்ணபுரி, களுத்துறை, காலி மாவட்டங்களிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வெளியேறிக் கொண்டே இருக்கின்றனர்.

**உலகமயமும் தனியார்மயமும்**

1991 இல் தோட்டங்கள் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பிறகு தோட்டத்தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவதில் தனியார் கம்பெனிகள் தொடர்ந்து தயக்கம் காட்டிவருகின்றனர். கொண்டு நடத்துவதற்கு ஏற்ப சம்பளம் இல்லாமல் தொடர்ந்தும் கஷ்டப்படுகின்றனர். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கையைக் புதிதாக தோட்டத்தொழிலாளர்களாக பதியப்படுவதுமில்லை. நியாயமான சம்பளமும் புதிய வேலைவாய்ப்புகளும் மறுக்கப்படுவதால் தோட்டத்தொழிற்துறையில் தொட ர்ந்து இருக்க வேண்டுமா என்பது தொழிலாளர்களின் பிரச்சினையாக இருக்கிறது.

1990களுக்குப் பிறகு முதலீடுகள் சர்வதேச சந்தை போன்றவற்றில் ஏகாதிபத்திய உலகமயமாதல் ஆதிக்கம் பெற்றுள்ளது. அதாவது காலனியாதிக்க காலத்தில் நேரடியாக இன்னொரு நாட்டில் ஆதிக்கம் செய்வது மாறி நேரடியாக ஒரு நாட்டு மூலதனம் இன்னொரு நாட்டில் ஆதிக்கம் செலுத்தும் நிலை ஏற்பட்டிருந்த நிலையும் மாற்றமடைந்து பல நாடுகளின் மூலதனம் பல்தேசிய கம்பெனிகளினூடாக உலகின் பலநாடுகளிலும் ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரல் ஆதிக்கம் என்பவற்றை முன்னெடுப்பதாக மாறியது. உலகவங்கி சர்வதேச நாணய நிதியம், சர்வதேச வர்த்தக அமைப்பு என்பன முக்கிய ஆதிக்கம் செலுத்துவனவாகி சர்வதேச பொருளாதாரம், வர்த்தகம் என்பவற்றை தகவல் தொழிநுட்பத்தினூடாக ஏகாதிபத்திய நிகழ்ச்சி நிரலுடன் இணைத்தன. மூலதனத்தின் ஆதிக்கத்தை உலகளாவிய ரீதியில் முன்னெடுப்பதனை உலகவங்கி, சர்வதேச நாணய நிதியம், உலகவர்த்தக அமைப்பு ஆகியவற்றின் உலகளாவிய ஆட்சியும் மேற்பார் வையும் உலகமயமாதலின் பெயரில் நடைமுறை க்கு வந்தது. அதாவது அம்மூன்று நிறுவனங்களின் நவதாராளவாத கொள்கைகளின் படி சர்வதேச பொரு ளாதாரத்தை சுமுகமான தகவல் வலை பின்னலின் மூலம் இயங்க வைக்கப்பட்டது.

இந்த சர்வதேச மூலதன ஆதிக்க உலகமயமாதல் இலங்கையின் பெருந்தோட்ட மூலதனம் வர்த்தகம் என்பவற்றில் கட்டுப்பாடு செலுத்துவதாக மாறியுள்ளன. பெருந்தோட்டக் கம்பெனிகளில் பல்தேசிய கம்பெனிகளின் மூலதனம் அதிகரித்துள்ளது. சர்வதேச வர்த்தகத்தில் சந்தைப்போட்டியும் நிலவுகிறது.

பெருந்தோட்டங்களை தொடர்ந்து பேரண்டப்பொருளாதாரமாக முன்னெடுக்காது பாரிய பெருந்தோட்ட முறையையும் பெருந்தோட்டத்தொழிலாளர்களையும் சிதைத்து பெருந்தோட்டத்துறையை சிற்றண்ட பொருளாதாரமாக்குவதனை உலகமயமாதல் தேவையாகக் கொண்டுள்ள இதனால் தொழிலாளர்கள் தோட்டங்களிலிருந்து வெளியேறுவது அந் நிகழ்ச்சி நிரலுக்கு தேவையானதாகும்.

**இனவர்க்க ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தோட்டத்தொழிலாளர்கள்**

மத்திய மலைநாட்டில் தமிழ் மொழியை பேசும் மலையகத் தமிழ்த் தேசிய இன அடையாளத்தைக் கொண்ட தோட்டத்தொழிலாளர்களின் குடிசன செறிவை சிதைக்க பேரினவாதம் நோக்கமாக கொண்டுள்ளது. தோட்டத்தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளியேறுவது பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கும் உதவுவதாகும்.

பெருந்தோட்டத்தொழிற்துறையே தோட்டத்தொழிளராளர்களுக்குரிய பொருளாதாரமாகவும் தோட்டங்களே அவர்களின் வாழ்விடமாகவும் இருக்கின்றன. அதிலிருந்து தொழிலாளர்கள் வெளியேறுவது ஆரோக்கியமானதல்ல. இவ்வாறான சூழ்நிலையில் வேதனம் குறைவு, வேலைவாய்ப்பு இல்லை போன்ற காரணங்களினால் தோட்டத்தொழிலாளர்கள் பெருந்தோட்டத் தொழிற்துறையை விட்டு வெளியேற முடியுமா? வெளியேற வேண்டுமா? என்ற கேள்வி முக்கியத்துவம் பெறுகின்றது.

அவ்வாறு வெளியேறுவதால் வருமானத்தையும், வாழ்க்கைத்தரத்தையும் பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளர்களால் கீழ் உயர்த்திக் கொள்ள முடியாது. அந்தளவிற்கு உலகமயமாதல் சூழ்நிலைகளும் "உழைப்பும்" உலகமயமாக்கப்படவில்லை. சுதந்திரமாகவும் இல்லை. அப்படி வெளியேறுவதால் அவர்களின் பொருளாதாரம் மட்டுமல்ல. வாழிடம், சமூகப்பாதுகாப்பு போன்றன உறுதி செய்யப்படப்போவதில்லை.

பெருந்தோட்டத் தொழிற்துறையிலேயே தொடர்ந்தும் தோட்டத் தொழிலாளர்கள் இருக்க வேண்டுமென்பது அவர்களின் நிரந்தர தலை விதியல்ல. அதற்காக மூலதனத்தின் தேவைக்கு ஏற்பவும் பேரினவாதத்தின் விருப்பத்திற்கு ஏற்பவும் தோட்டத்தொழிலாளர்கள் பெருந்தோட்டத் தொழிற்துறையை விட்டு வெளியேற வேண்டியதில்லை. முன் னேறிய பாதுகாப்புள்ள தொழிலாளர் வர்க்கமாக வேறு

தொடர்ச்சி 8 ம் பக்கம்

## தோழர் சந்திரகுமார் நினைவாக.....



தோழர் பெருமாள் சந்திரகுமார் காலமாகி பெப்ரவரி 18 ஆம் திகதியுடன் இரண்டு வருடங்களாகின்றன. அவர் மூளைக்காய்ச்சலினால் காவு கொள்ளப்பட்டார். அவர் ஒரு ஆசிரியராக இருந்தார். தொழில் பார்த்தார் என்பதைவிட ஆசிரியராகவே வாழ்ந்தார். அவர் அங்கீகாரத்திற்காகவும் சௌகரியத்திற்காகவும் பாராளுமன்ற ஆதிக்க அரசியல்வாதிகளிடமோ அதிகாரிகளிடமோ சமரசம் செய்து கொள்ளவில்லை. அவர் சமரசம் செய்து கொள்வதற்கு தடையாக அவரது நேர்மையான வாழ்க்கைத்துவம் அவரிடம் இருந்தது. அது கம்யூனிஸ வாழ்வ முறையாகும்.

அவர் குறுகியகாலம் வாழ்ந்தாலும் அவரது அர்த்தமுள்ள சமூக வாழ்க்கையே அவரை தொடர்ந்து நினைவில் கொள்ளும் கட்டாயத்தை உணர்த்துகிறது.

அவர் புரட்சிகர கட்சியின் புதிய– ஜனநாயக கட்சியின் அங்கத்தவராக மலையக பிரதேச கமிட்டியின் தலைவர்களில் ஒருவராக அக்கட்சியின் ஆசிரியர் அணித் தலைவராகவும் இருந்தார். தோட்டத் தொழிலாளிகளின் சம்பள உயர்வுப் போராட்டங்கள், பிந்துனுவெவ படுகொலைகளுக்கு எதிரான போராட்டம். ஸ்ரீ பாத கல்வியல் கல்லூரி மாணவர்கள் போராட்டம் போன்றவற்றில் தலைமைத்துவம் கொடுத்த போராளியாவார். அவரை நினைவு கூர்வது சம்பிரதாயமல்ல. மாறாக அவரை படிப்பதும் அவரின் வாழ்க்கையில் இருந்து பலவற்றைத் எடுத்துக்கொள்வதும் அவர் பின்பற்றிய புரட்சிகர அரசியல் பாதையினூடான சமூகமாற்றத்திற்காக உழைப்பதுமாகும். அவர் நினைவாக இக் கட்டுரை வெளியாகிறது

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# தனிமனிதப் படுகொலைகளும் விடுதலைப் போராட்டமும்

எல்லாவிதமான சமூக ஒடுக்குமுறைகளும் வன்முறையின் மீது கட்டியெழுப்பப்பட்டவையே. ஆனாலும் வன்முறை எல்லா வேளைகளிலும் பாவிக்கப்படுவதில்லை. வன்முறை பற்றிய அச்சம் ஒடுக்கப்பட்டோர் மனதில் நிலையாகப் பதிந்திருக்கக்கூடிய விதமாகப் பலவேறு விதங்களில் மக்கள் பழக்கப்படுகின்றனர். வன்முறையும் வன்முறை பற்றிய அம்சமும் பலவேறு தளங்களில் நிறுவனங்களாகச் செயற்படுகின்றன.

அடிமைச் சமூகங்களிலும் நிலவுடைமைச் சமூகங்களிலும் ஆளும் வர்க்கங்கள் நேரடியாகவே தனிமனிதர்களது உரிமைகளை மறுக்கவும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தவும் மீறும் போது தண்டனை விதிக்கவும் வல்லவையாய் இருந்தன. சட்டத்தின் முன் எல்லாரும் சமம் என்ற கோட்பாடு முதலாளிய சமூகத்தின் வருகையின் பின்பே ஏற்கப்பட்ட சமூக விதியாகியது. அது நடைமுறையில் அவ்வாறு செயற்படுகிறதா என்பது இன்னொரு விடயம். எனினும் முன்னேறிய முதலாளிய நாடுகளில் தோற்றப்பாடாகவேனும் சட்டத்தின் ஆட்சி நிலவுகிறது. அது வெளிவெளியாக மீறப்படுகிற போது சமூகத்திற்குள்ளிருந்து எதிர்ப்புக் குரல்கள் எழ வாய்ப்புண்டு. இரகசிய மீறல்கள் அம்பலமாகிறபோது அவை அதிகாரத்தில் உள்ளவர்களை நெருக்கடிக்கு உள்ளாக்குவது முண்டு. அதே வேளை, சட்டமும் நீதி நிருவாகமும் சமூக ஏற்றத்தாழ்வுகட்கான அடிப்படைக் காரணமான தனியார் சொத்து, உற்பத்திச் சாதனங்கள் மீது தனியார் ஆதிக்கம், சமனற்ற உற்பத்தி உறவுகள் என்பவற்றைப் பாதுகாக்கின்றன. ஒடுக்குமுறையின் அடிப்படையிலான வன்முறை சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல், அரசிற்குக் குழிபறிப்பதைத் தடுத்தல், தேச நலன், தேசத்தின் பாதுகாப்பு என் பன போன்ற பரவலாக ஏற்கப்படக்கூடிய முகத்திரைகளுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

நிறுவனமாக்கப்பட்ட ஒடுக்குமுறையின் அதியுயர்ந்த அமைப்பு அரசுயந்திரம். ஆளும் அதிகார வர்க்கம் தன்னை நிலை நிறுத்துவதற்கும் வர்க்க நலன்களைப் பேணுவதற்கும் தொடர்ந்தும் உழைக்கும் வர்க்கங்களைச் சுரண்டுவதை உறுதிப்படுத்தவும் ஒடுக்கு முறையை நாடுகிறது. அதன் ஒடுக்கு முறை தொழிலாளி வர்க்கத்திற்கும் பிற உழைக்கும் மக்களுக்கும் எதிராக மட்டுமன்றிப் பிற தேசங்களையும் தேசிய இனங்கட்கும் நீடிக்கப்படுகிறது. தேசிய இனங்கள் சிறுபான்மைச் சமூகங்கள் விளிம்பு நிலை மாந்தர் போன்ற பலர் மீதும் பிரயோகிக்கப்படுகிற இந்த ஒடுக்குமுறைக்கு எதிரான கிளர்ச்சிகளும் எதிர்ப்பும் சட்டத்தின் பேராலும் சட்ட வரம்புகளை மீறிய வன்முறை கொண்டும் அடக்கப்படுவதை அண்மைக் காலங்களில் திரும்பத் திரும்பக் கண்டிருக்கிறோம். எனவே தான் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்தில் வன்முறை தவிர்க்க இயலாததாகிறது.

மார்க்சிசம் இதையே முன்பிருந்து சொல்லி வந்திருக்கிறது. அடிப்படையான சமூகமாற்றத்திற்கு வன்முறை தவிர்க்க இயலாத தேவையாகியுள்ளதை லெனின், மாஓ ஆகியோரும் பன்முறை வலியுறுத்தியுள்ளனர். ஆயினும் அத் தேவையை உருவாக்குவது ஒடுக்குமுறையின் கருவியான அரசும் ஆளும் வர்க்கத்தின் பிற ஒடுக்குமுறை நிறுவனங்களுமே.

மார்க்சியவாதிகள் எல்லாவற்றையும் வன்முறை மூலம் தீர்க்க முடியும் என்றோ முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு வன்முறை மட்டுமே வழி என்றோ பரிந்துரைப்பதில்லை. மார்க்சிசத்தின் பெயரால் யாரும் அப்படிச் சொல்வார்களானால் அது சிறுபிள்ளைத்தனமானதும் மார்க்சியச் சிந்தனைக்கு நேர்மாறானதுமாகும். வர்க்க எதிரிக்கு மாறாகத் தனிமனித வன்முறை கூடப் பயனற்றதும் சமூக நீதிக்கான போராட்டத்திற்குத் தீங்கானதும் என்பதே லெனினின் அசைக்க முடியாத நிலைப்பாடாக இருந்தது.

முரண்பாடுகள் பற்றிய மாஓவின் ஆய்வு மக்கள் மத்தியிலான முரண்பாடு என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து விரிவுபடுத்துகிறது. எதிரியுடனான முரண்பாடு மட்டுமே வன்முறை மூலம் தீர்க்கப்பட வேண்டும் என்று அந்த ஆய்வு தெளிவுபடுத்துகிறது. எதிரி எனும் போது எதிரியுடன் சேர்ந்து நிற்கிற ஒவ்வொருவரும் நிரந்தர எதிரி என்றோ வன்முறையால் அழிக்கப்பட வேண்டியவர்களென்றோ கூறப்படவில்லை. மாறாக ஐக்கியப்படக் கூடிய அனைவருடனும் ஐக்கியப்பட்டு எதிரியைத் தனிமைப்படுத்துவது என்பது எதிரியின் தரப்பில் நிற்போரைக் கூட மக்களின் தரப்புக்கு வென்றெடுப்பது என்னுமளவுக்குச் சொல்லுகிறது. எதிரியின் படைகளை அழிப்பது என்பது எல்லாரையும் கொன்றொழிப்பது அல்ல. சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் அத்தரப்பில் நிற்போரை வென்றெடுக்க ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்த வேண்டும் என்பதே மார்க்ஸிய லெனினிய புரட்சிகர நிலைப்பாடாக இருக்கிறது.

இதன் அடிப்படையில் அண்மைவரை நேபாளத்தில் நடந்த ஆயுதப் போராட்டத்தைக் கவனத்தில் எடுத்தால் 10 ஆண்டுகளில் நேபாளத்தில் இறந்த 12000க்கும் 13000க்கும் இடைப்பட்டவர்களில் இரண்டாயிரம் பேர் மட்டிலேயே மாஓவாதிகளாற் கொல்லப்பட்டனர். மிகப் பெரும்பான்மையானோர் அரசின் ஆயுதப்படையினரால் கொல்லப்பட்டவர்கள். இலங்கையில் போர் உக்கிரமாக நடக்கிற வடக்கு- கிழக்கில் போர் நிறுத்த உடன்படிக்கைக்குப் பிறகு கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை மட்டுமே பல ஆயிரங்களைத் தாண்டிவிட்டது. இலங்கையை விடச் சனத்தொகை கூடிய நேபாளத்தின் மாஓ வாதிகள் நாட்டின் 90% நிலப்பரப்பைத் தமது ஆதிக்கத்



திற் கொண்டுவரப் பலியான உயிர்களின் எண்ணிக்கையை நமது நாட்டின் நிலையுடன் ஒப்பிடுவது பயனுள்ளது. வடக்கு- கிழக்கின் போர் ஒரு இலட்சம் பேருக்கும் மேலானோரை பலி எடுத்து அதைவிடப் பல மடங்கு பேரை நிராதரவானவர்களாக்கி மேலும் பலரை நாட்டைவிட்டே விரட்டியுள்ளது. 1989-90 கால இடைவெளியில், தெற்கில் ஒரு லட்சத்திற்கு நெருக்கமான தொகையினர் ஆட்சியாளர்களது ஆயுதப்படையினராலும் ஜே.வி.பி யினராலும் அழிக்கப்பட்டனர். அதனால் எந்த விதமான நன்மையும் மக்களுக்குக் கிட்டவில்லை.

இன்று போர்நிறுத்த உடன்படிக்கை ஒன்று ஏற்பட்டு ஐந்தாண்டுகள் கழிந்தும் அது பேரளவில் நடைமுறையில் இருக்கும் போதும் பலவாறான உயிரிழப்புக்கள் நிகழுகின்றன. அரசாங்கம் அமெரிக்காவின் வான் வழிப் படங்களின் உதவியுடன் குண்டுவீசியும், தரைவழிக் கடல் வழித்தாக்குதலாலும் மக்களைக் கொன்று குவிக்கிறது. அதே வேளை, அதே அளவு கண்டிக்க வேண்டியவாறு தென்னிலங்கை வாழ் அப்பாவிச் சிங்கள மக்கள் பயணஞ் செய்த மூன்று பஸ்கள் தாக்கப்பட்டது போன்ற கொடுமைகள் நிகழ்ந்துள்ளன. அவற்றைக் காரணங்காட்டி அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு பயங்கரவாத எதிர்ப்பு என்கிற பேர்களில் தெற்கில் ராணுவக் கெடுபிடிகளையும் தமிழ் மக்களைத் துன்புறுத்துகிற அல்லது தொல்லைக்குட்படுத்துகிறவிதமான நடவடிக்கைகளையும் உச்சப்படுத்தி வருகிறது. வடக்கு- கிழக்கில் தனது மூர்க்கத்தனமான தாக்குதல்களை நியாயப்படுத்தித் தீவிரப்படுத்துகிறது.

அதுபோகத் தமிழ் மக்கள் பலவேறு ஆயுதக் குழுக்களாலும் குற்றச் செயற்கும்பல்களாலும் ஆட்கடத்தல், கப்பம், மிரட்டல், படுகொலை போன்ற பலவேறு ஆக்கினைகளுக்குட்படுகின்றனர். இவற்றைச் சிங்களப் பேரினவாதிகளோ சிங்களக் குற்றச் செயல்காரக் கும்பல்களோ அரச படையினரோ பொலிசாரோ செய்யவில்லை. பல சமயம் அரசின் அனுசரணையோடும் அங்கீகாரத்தோடும் செய்யப்பட்டதாக யாரும் சொன்னாலும் அக் கொடுமைகள் ஆயுதபாணிகளான தமிழராலேயே செய்யப்படுகின்றன. விடுதலைப்புலிகளுக்கும் அவர்கட்கு எதிரான அரசாங்கச் சார்பான ஆயுதக்குழுக்கட்கும் முன்னாள் விடுதலை இயக்கங்கட்குமிடையிலான தொடர்தொடரான மோதல்கள் படுகொலைகளாகவும் ஆட்கடத்தலாகவும் அமைப்புக்களின் உறுப்பினர்களை மட்டுமில்லாமல் ஆதரவாளர்கள் அல்லது அனுதாபிகள் என்று ஐயப்படக் கூடியவர்களையும் குடும்பத்தினரையும் பாதிக்கின்றன.


தமிழ்ச் சமூகத்தை அது எவ்வளவு தூரம் சிதைக்கிறது என்பது பற்றி இவற்றுக்கும் பொறுப்பானோர் சிந்திப்பார்களாயின் அவ்வாறு நடந்து கொள்ளமாட்டார்கள். நேரடியான ஆயுத மோதல் தவிர்ந்த சூழ்நிலைகளில் நடக்கும் கொலைகளைக் குற்றச் செயற்களாகவே கருத வேண்டியுள்ளது. எச் சூழ்நிலையிலும் சாதாரண அப்பாவிப் பொதுமக்கள் அவர்கள் எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களாயினும் துன்புறுத்தவோ கொல்லவோ படகூடாது.

தனிமனிதப் படுகொலைகள் விடுதலைக்கும் ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்திற்கும் எந்த வகையிலும் உதவுவதில்லை. மாறாக அவை நாட்டில் மேலும் குழப்பமான சூழலுக்கும் அரச ஒடுக்குமுறைக்குமே பங்களிக்கின்றன. எனவே தமிழ் மக்களின் விடுதலையும் சமூக அக்கறையும் உள்ள ஒவ்வொருவரும் தனிமனிதர்கட்கெதிரான வன்செயல்களை குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தினுள் நடக்கிற கொடுமைகளை

தொடர்ச்சி 7ம் பக்கம்

-மோகன்-

**தனிமனிதப் படுகொலைகள் விடுதலைக்கும் ஒடுக்கு முறைக் கெதிரான போராட்டத்திற்கும் எந்த வகையிலும் உதவுவதில்லை. மாறாக அவை நாட்டில் மேலும் குழப்பமான சூழலுக்கும் அரச ஒடுக்கு முறைக்குமே பங்களிக்கின்றன**



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 10

## வரவேற்பும் விருந்தோம்பலும்

பேராசிரியர் சி. சிவசேகரம்

## தென்னாசிய சமூகத்தில் யார் யாரை உபசரிக்கலாம் என்பதை வர்க்கமும் சாதியும் வரையறுக்கின்றன

வீடுதேடி வருவோரை வரவேற்பது பற்றியும் விருந்தினரை உபரிப்பது பற்றியும் ஒவ்வொரு சமூகமும் தனக்கான சில விதிமுறைகளைக் கடைப்பிடிக்கிறது. இவ் விதிமுறைகள் ஒவ்வொரு சமூகத்தினதும் வாழ்க்கைமுறையையும் பண்பாட்டு விழுமியங்களையும் வரலாற்று அடிப்படையிலான பண்பாட்டு விருத்தியையும் ஒட்டியே அமைகின்றன. காலத்தை ஒட்டியும் நடைமுறை சார்ந்தும் அவை வேறுபடக் கூடுமாயினும் சில அடிப்படையான பண்புகள் தொடர்ந்தும் தமது வரவேற்புபசாரங்களில் இழையோடுகின்றன. மனித நடத்தை காரணகாரிய அடிப்படையால் மட்டுமன்றிப் பழக்க வழக்கங்களாலும் வழி நடத்தப்படுவதை நாம் அறிவோம். மாறி வரும் பழக்க வழக்கங்க ளிலும் மனித உறவு தொடர்பான சில பண்பாட்டுக் கூறுகள் அடிப்படையாக நின்று இயங்குகின்றன. மாற்றங்களை ஒரு வர் எவ்வாறு எதிர் கொள்கிறார் என்பது அவரது உலக நோக்குடன் தொடர்புடையது.

தமிழில் அறநூல்கள் உருவான காலம் தமிழ் வரலாற்று மரபின் இருண்ட காலமாகக் கூறப்படுகிறது. மூவேந்தர் ஆட்சியிருக்காததுமான களப்பிரர் காலம் எனப்படுகிறது. தமிழில் அறியப்பட்ட நாலடியார் உட்பட்ட பழைய அற நூல்களில் சமணர்களின் பங்கு முதன்மையானது. திருக்குறள் சமண விழுமியங்களையே அதிகம் வற்புறுத்துவதாகவுங் கூறுவர். இவ்வாறான அற நூல்கள் தனிமனித ஒழுக்கம் பற்றி மட்டுமன்றிச் சமூக நடத்தை பற்றியும் மனித உறவுகள் பற்றியும் வழிகாட்டல்களை முன்வைக்கின்றன. இன்று திருக்குறள் தமிழரின் அற நூலாகவும் வாழ்வுக்கான வழிகாட்டியாகவும் போற்றப்படுகிறது. எனினும் இது தமிழ்த் தேசிய உணர்வினதும் பார்ப்பனிய எதிர்ப்புணர்வினதும் எழுச்சியுடன் சார்ந்த ஒரு நூற்றாண்டிற்கும் குறுகிய கால இடைவெளியில் ஏற்பட்ட ஒரு மாற்றமே. விருந்தோம்பல் பற்றித் திருக்குறள் வலியுறுத்துகிற சிந்தனைகள் தமிழர் பல வேறு நீதி நூல்களிலும் பன்முறை எடுத்துரைக்கப்பட்டவை. தம் விருந்தினர் வரவைத் தமக்குக் கிடைத்த ஒரு பேறாகக் கருவதும் தம்மை ஒறுத்தேனும் விருந்தினரின் மனங்கோணாத படி நன்கு உபசரிப்பதும் பற்றிக் கூறப்பட்டுள்ளவை பல பண்பாடுகட்கும் பொதுவானவை. இவ்வாறான வரவேற்பும் உபசரிப்பும் வர்க்க வேறுபாடின்றிக் கடைப்பிடிக்கப்பட முடியுமா என்பதைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. நமது விருந்துபசார மரபின் மேன்மை பற்றிப் பெருமையுடன் பேசிக்கொள்கிறோம். தென்னாசியச் சமூகத்தில் யார் யாரை உபசரிக்கலாம் என்பதை வர்க்கமும் சாதியும் வரையறுக்கின்றன. இன வேறுபாடும் சூழ்நிலைகட்கமைய மத வேறுபாடுங்கூட அத்த கைய வரவேற்பிற்கும் விருந்துபசாரத்திற்கும் தடையாக இருந்ததில்லை.

விருந்தினரை உபசரிப்பதற்கும் தம்மிலும் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கட்கு உணவிடுவதற்குமிடையிலான வேறுபாட்டை நாம் அறிவோம். வரவேற்பும் உபசாரமும் பற்றிய வழிகாட்டல்கள் இந்த வேறுபாட்டைத் தெளிவாக அறிந்தே தமிழர் மரபில் விருந்தோம்பல் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளது. பொதுப்பட யாரும் விருந்துக்கு அழைக்கப்படுவதற்கும் விருந்துண்ணப் போவதற்கும் சம்பந்தப்பட்டோரிடையே குறிப்பிடத்தக்க சமூக ஏற்றத்தாழ்வு இல்லாமை அவசியம். விலக்காக வெகு அருமையாக ஏதேன் நடந்திருக்கலாம். அவை பற்றிய இலக்கியக் குறிப்புக்களை வைத்துப் பொதுவான சமூக நடத்தையை மதிப்பிட இயலாது.

எவ்வாறாயினும் விருந்தோம்பல் என்பது நிலவுடைமைச் சமூகங்களின் பண்பாட்டின் சிறப்பான சில கூறுகளைக் கொண்டது. தம்மை ஒறுத்தும் விருந்தினரை உபசரிப்பது என்பது விருந்தாளியாக ஒருவர் வருவது அவர் தமக்கு அளிக்கும் ஒரு மரியாதையாகக் கருதுவதன் அடிப்படையினின்று எழுகிறது. வீட்டுக்கு வரும் ஒருவருக்கு உணவு பரிமாற இயலாமை பற்றி வெட்கப்படுகிற அதே வேளை வீட்டுக்கு வந்தவர் வாய் 'நனைக்காமல்' போவது அவமதிப்பாகவும் கருதப்படுகிறது.

இந்த விதமாக விருந்தினரை மதிப்பது வர்க்க, சாதிய எல்லைகளை மீற மறுப்பதையும் நாம் காணுகிறோம். விருந்துபசாரம் ஒரு புறமிருக்க, ஒருவரை வீட்டு வாசலில் காத்து நிற்கச் செய்யாமற் குரல் கேட்ட வுடனேயே ஓடிச் சென்று இன்சொல் கூறி வரவேற்று வீட்டினுள் அழைத்து அமரச் செய்வதும் எல்லாருக்குங் காட்டப்படுகிற மரியாதையல்ல.

ஒருவரது வீட்டினுள்ளோ வளவினுள்ளோ எவர் எவ்வளவு தொலைவு வரை உள்ளே வரலாம் என்பது கூட மிகக் கட்டுப்பாடாகக் கடைப்பிடிக்கப்பட்ட யுகமொன்றின் நினைவுகள் மூத்த தலைமுறையினரிடம் இன்னமும் இருக்கும். எனவே நிலப்பிரபுச் சமூகத்தின் சீரிய மனித உறவு விழுமியங்கள் சமூக ஏற்றத்தாழ்வுகளால் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டவை என்பதை நாம் மறக்கலாகாது. இவ்வாறான வேறுபாடு எல்லாத் தேசிய இனங்களிடையிலும் இருந்து வந்த பல இடங்களில் இன்னமும் இருந்து வருகிற ஒன்று தான்.

முதலாளியம் நிலப்பிரபுச் சமூகத்தின் உற்பத்தி உறவையும் அதனோடொட்டிய ஏற்றத்தாழ்வான சமூக ஒழுங்கமைப்பையும் சிதைக்கிறது. அதனிடத்தில் தோற்றப்பாடான மனித சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அது முன்வைக்கிறது. எனினும் மூன்றாமுலகின் நாடுகளிலும் சில முன்னேறிய முதலாளிய நாடுகளிலுங் கூட நிலப்பிரபுத்துவ ஏற்றத்தாழ்வுகளும் அவற்றையொட்டிய சமூக வழக்கங்களும் தொடருகின்றன. முதலாளியம் தனக்குத் தடையாக அமையாத எந்த ஏற்றத் தாழ்வையும் இல்லாமலாக்க அதிகம் முயல்வதில்லை. பேரளவில் இல்லா தொழிக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் நடைமுறையில் தொடருகின்றன.

நகரங்களின் வளர்ச்சியும் கிராமங்களிலிருந்து நகரங்கட்குக் குடிப்யெர்வும் கிராமங்களின் மீது நகரங்களது பாதிப்பும் பொதுவான நவீனமயமாதலும் முதலாளிய விழுமியங்களின் பரவலுக்கு வகை செய்கின்றன. முதலாளியம் ஊக்குவிக்கும் தனி நபர்வாதம் கூட்டுக் குடும்பங்களின் சிதறலுக்கும் சொந்தம், உறவு, சுற்றம் எனப்படுகிறவற்றின் பெறுமதி இறங்குவதற்கும் காரணமாகிறது. அதைவிட மாநகரங்களில் வருமானம் போதாமைக்கு மேலாக நேரமின்மை, இடவசதிக் குறைவு போன்றவை விருந்தோம்பலை மிகவும் மட்டுப்படுத்துகின்றன. ஒரு கிராமச் சூழலிற் போலன்றி யாரையும் முன்னறிவித்தலின்றிச் சந்திக்கப் போவது ஏற்புடைய நடத்தையல்ல. குடும்ப நிகழ்வுகளைக் கூடப் பொது இடங்களில் நடத்த வேண்டிய நிலைமைகளை மாநகரங்களில் வாழ்வோர் அறிவர்.

எவ்வாறாயினும் முதலாளியத்தால் மனிதரிடையிலுள்ள இயல்பான நல்லிணக்கம், மரியாதை, மனிதாபிமானம், நட்புக்கான தேவை போன்றவற்றை அழித்துவிட முடியாது. மாற்றமடைந்த சூழலுக்கு ஏற்பச் சமூக நடைமுறைகள் மாறலாம். எனினும் சமூகக் குழுக்கள் தங்களைப் பலவாறாக மீள வரையறுத்து மனித சமூக உறவைப் புதுப்பித்துக் கொள்ளுகின்றன. எனினும் கிராமச் சூழலிலிருந்து நகரத்திற்குப் பெயருகிற ஒருவருக்குப் புதிய சூழலுக்குள் தன்னைப் பொருத்திக் கொள்ளுவது எளிதல்ல. மரபிலிருந்தும் வழமையிலிருந்தும் எதைக் கொள்ளுவது எதைத் தள்ளுவது என்பதை எடுத்து எடுப்பிலேயே ஒருவர் தீர்மானிக்க இயலாது.

மனிதர் தம்மைச் சமுதாயத்தின் உறுப்பினர்களாக உணர்வுபூர்வமாகக் கருதிச் செயற்படுகிறபோது மனிதரிடையிலான உறவுகளில் மரபு சார்ந்த நற்பண்புகள் தம்மைப் புதிய வடிவில் இனங்காட்டிக் கொள்ள இயலும். மனிதர் தம்மைத் தனிமனிதர்களாக மட்டுமே கருதும் போது மற்றவர்களுடனான உறவு தனிமனித லாப நட்டக் கணக்குகளின் அடிப்படையில் அமைவதும் மனிதர் சமூகத்திலிருந்து மேலும் அந்நியப்படுத்தலும் நிகழுகிறது.

கிராமிய விருந்தோம்பற் பண்புகளைப் பற்றி நாம் ஏங்குவதிற் பயனில்லை. ஏனெனிற் கிராமங்களே மாறிவருகின்றன. சமுதாயம் முதலாளியச் சுயநலத்னிதின்று விடுபடுவதற்கான சமூகச் செயற்பாடுகள் புதிய பண்பாடொன்றுக்கும் அதனூடு சமத்துவத்தையும் பரஸ்பர மரியாதையையும் மனிதநேயத்தையும் அடிப்படையாகக் கொண்ட விருந்தோம்பலுக்கும் வழி காட்டும்.

## புதுக் குரல் போர்க்குரல் ஆகும்!

பழைய இலக்கியங்களை காட்டி **"சாந்தியும் சமதானமும் போதிப்போர்** உண்மையில் மாற்றத்தை எதிர்ப்பவர்களேயாவர் அவர்களும் இலக்கியத்தைத் தமது நோக்கிற்கு ஏற்பப் பயன்படுத்துகிறார்கள் வள்ளுவன் முதல் வள்ளலார் வரை வாழ வழி வகுத்தோர் தொகை பெரிதுதான். ஆனால் மனிதனது அடிமைத் தளைகள் தாம் பலவிடங்களில் இன்னும் அறுபடவில்லை. எவ்வளவுதான் இலட்சிய உணர்வும், இரக்க சிந்தயும் இருந்தவராயினும், பண்டைய இலக்கிய கர்த்தாக்கள் அல்லது எமக்குக் கிடைக்கும் நூல்களின் ஆசிரியர்கள் உலகை விவரித்தவரேயாவர் எமது மொழியில் பாரதி தாசன்தான் ஒரளவேனும் "புதியதோர் உலகு செய்வோம்" என்று முதலிற் பாடினான். யாழ்ப்பாணக் கவிராயரும். **"புதுவுலகம் காண்பதற்குப் புரட்சி வேண்டும் இது உலகம் எமக்களித்த பாடல் என்று விடிவுகாலம் இங்கு எமக்காம் இதை வெற்றியோ டீட்டித் தருவோம்"** என்றும் புதுக் குரலிற் பாடினார். இப்பதுக் குரல் போர்க் குரல் ஆகும். " நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை" என்பது பழைய இலக்கியக் குரல். எல்லோரையும் உழைத்துண்ணும் "நல்லவ" ராக்கும் பெருமாற்றத்தை நாடி நிற்கிறது இன்றைய உலகம்.

பேராசிரியர் க.கைலாசபதி

### விடுதலைப் போராட்டமும்

6ம் பக்க தொடர்ச்சி......

முடிவுக்குக் கொண்டு வர உறுதியான நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

தமிழ்ச் சமூகத்திற் கணிசமான பகுதியினர் போரால் அலுப்புற்றும் விடுதலைப்போராட்டம் பற்றிய எதிர்பார்ப்புக்களில் ஏமாந்து விரக்தியுற்றும் உள்ளனர். வடக்கு- கிழக்கிற்கு வெளியே ஒவ்வொருவரும் தமது சொந்தப் பாதுகாப்பை விட வேறெதையும் பற்றிக் கவலைப்படாதளவுக்குப் பலர் தம் சமூகத்திலிருந்து அந்நியப்பட்டும் போயுள்ளனர். குறிப்பாக நடுத்தர வர்க்கத்தினர் நடுவே நாட்டை விட்டு வெளியேறுகிற நோக்கம் வலுவாக உள்ளது. பேரினவாத அரசின் அடக்குமுறையும் பாரபட்சமும் அதற்கு ஒரு முக்கிய காரணமாயிருந்தாலும், தமிழ் மக்களைத் தமது உரிமைகட்காகப் போராட ஒன்றிணைய விடாமல் தடுப்பது என்ன?

இவ்விடயத்தில் விடுதலைப்போராட்ட இயக்கங்களின் வரலாற்றைச் சிறிது நினைவுகூர்வது பயனுள்ளது. தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் வெகுசனப்பாதை, வெகுசன அரசியல் வெகுசனப் போராட்டம் என்பனவற்றை ஏற்காமல் வீரசாகசமிக்க ஒரு ஆயுதப்படை மூலம் விடுதலையை வெல்லலாம் என்ற அணுகுமுறையையே கடைப்பிடித்தன. பல இளம் போரா ளிகள் குறுகிய காலத்தில் வெற்றியை எதிர்பார்த்தனர். அந்நிய உதவி மீது அளவு மீறிய நம்பிக்கை வைத்தனர். அந்நியக் குறுக்கீடு பற்றிய எதிர்பார்ப்புக்கள் தமிழ்ச் சமுதாயத்தின் தன்னம்பிக்கைக்கும் போராட்ட உணர்வுக்கும் பெருந்தீங்கு செய்தது. ஆயுதங்கள் மீது முதன்மையான நம்பிக்கை அரசி யலையும் மக்களின் பங்களிப்பையும் குறைவாக மதிப்பிடச் செய்தது. அதன் விளைவாகவே தமிழ் மக்கள் என்ற நோக்கிலன்றித் தமது குழுக்களின் ஆதிக்கம் என்ற நோக்கில் இயங்க நேர்ந்தது. அதன் விளைவாகத் தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகளுடன் சேர்ந்து நிற்கிற அவலத்தையும் நாம் கண்டிருக்கிறோம்.

நம் முன்னுள்ள பணி மிகக் கடினமாக்கப்பட்டுள்ளது. எனினும் காலங்கடந்துவிடவில்லை. தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயப்படுத்தி அதில் ஜனநாயக முறையிலான வெகுசனப் பங்குபற்றுதலுக்கு வழி செய்வதன் மூலம் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களிடையே வலுவான ஒற்றுமைக்கும் அதன் மூலம் விடுதலைப் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கும் வீணான உயிரிழப்புக்களைத் தடுப்பதற்கும் வழி ஏற்படும்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# இயற்கை அழிவுகளுக்காக கண்ணீர் வடிப்போமா? அவற்றிலிருந்து மீள வழி காண்போமா?


இயற்கை அனர்த்தங்கள் நிகழ்வதைத் தடுக்க முடியாது. என்றாலும் அவை ஏற்படுவதற்கு காரணமான சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகளைத் தவிர்ப்பதன் மூலம் பல இயற்கை அழிவுகளை தவிர்த்துக் கொள்ள முடியும். இயற்கையின் இயக்கங்களினால் ஏற்படும் அனர்த்தங்களை தடுக்க முடியாது. என்றாலும் அவ்வனர்த்தங்களினால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ள முடியும். அதற்கு சிறந்த அனர்த்த தடுப்பு, தவிர்ப்பு முகாமைத்துவம் அவசியம். அவை அரசாங்க பரிபாலன முறையின் முக்கிய அம்சமாகும்.

இலங்கையில் அனர்த்த நிவராண முகாமைத்துவ அதிகாரசபை ஜனாதிபதியின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது. அனர்த்த நிவராண அமைச்சும் இயங்குகிறது. இருந்தபோதும் வரட்சி, வெள்ளம், மண்சரிவு, புயல், காட்டுத்தீ போன்ற அனர்த்தங்களினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்கவோ குறைக்கவோ முடியாமல் இருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதிலும் அவர்களை மீள குடியேற்றுவதிலும் பாரிய பிரச்சினைகள் தொடர்கின்றன.

அண்மையில் நுவரேலியா மாவட்டத்தில் வலப்பனை ஹங்குராங்கெத்த பகுதிகளில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இன்னும் மண்சரியும் அபாயங்கள் இருக்கின்றன. வலப்பனை பதியப்பல்லவில் 18 பேர் மண்சரிவினால் மண்ணுக்குள் புதைந்து மரணமடைந்துள்ளனர். இன்னும் 50ற்கும் மேற்பட்டோரை காணவில்லை என்றும் கூறப்படுகிறது. 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இருப்பிடங்களை விட்டு வெளியேறி அகதிகளாகயுள்ளனர். தொடரும் மண்சரிவு அபாயங்களினால் இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் அவர்களின் பழைய இருப்பிடங்களுக்கு சென்று வாழமுடியாதுள்ளனர்.

அதேபோல் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 25 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இடம்பெயர்ந்துள்ளனர். மத்திய மலைகளில் பரவலாக நில வெடிப்புகள், மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. ஏற்கனவே மாத்தளை மாவட்டத்தில் ஏற்பட்ட நிலவெடிப்புகளில் வீடுகள் சில அமிழ்ந்து போயின. அவ்வெடிப்புகள் திருகோணமலைக்கான திசையில் ஏற்பட்டுள்ளன. வலப்பனை (இராகலை) தியநிலை தோட்டத்தில் ஏற்பட்ட நிலவெடிப்பால் தோட்டத்தொழிலாளர்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அவ்வெடிப்பு மகா ஊவாவரையும் நீண்டிருக்கிறது. அவ்வெடிப்பினால் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டக்காணி மண்ணுக்குள் புதையும் அபாயம் இருக்கிறத. இதனால் ஆயிரக்கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் இடம்பெயரவும் வேலை இழக்கவும் நேரிடலாம்.

ஆனால் இடம்பெயர்ந்த தியநிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்காலிக தங்குமிடங்களும் இல்லை. தோட்டப்பசளை களஞ்சிய அறையில் தங்கியிருந்த தொழிலாளர்களும் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ளனர். அதனால் நிலவெடிப்பினால் மண்ணுக்குள் மூழ்கப்போகிற இடங்களிலேயே இருக்கின்றன. இவர்களில் அதிகப்பெரும்பான்மையானோர் தமிழர்கள் என்பதால் அங்கு நிவாரணங்களை கொடுப்பதில் பாரபட்சம் காட்டப்படுகிறது. வலப்பனை பிரதேசபையும் அதனிடம் நிதியில்லை என்பதால் நிவாரணமில்லை என்று கையை விரித்துள்ளது. அவர்களை வேறு இடங்களில் குடியேற்றவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதேவேளை பதியப்பலல்லவில் பாதிக்கப்பட்டவர்கள் சிங்களவர்கள் என்பதால் குறிப்பிடத்தக்களவு அரச நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.



ஆனால் பொதுமக்களோ இனப்பாகுபாடின்றி சேகரித்த நிவராணப் பொருட்களை இனப்பாகுபாடின்றி தியநிலை பதிப்யபல்ல ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளனர்.

பேரினவாத நிகழ்ச்சி நிரலை கொண்ட அரசாங்கம் எல்லாவற்றிலும் பேரினவாத நிலைப்பாட்டையே எடுக்கிறது. இதனால் ஒரே இயற்கை அனர்த்தால் பாதிக்கப்படுகின்ற மக்களையும் பாதிக்கப்பட்ட சிங்களவர்கள் பாதிக்கப்பட்ட தமிழர்கள் என பிரித்தாள்கிறது. இது மனிதபிமானபற்ற செயலாகும். இதனால் பாதிக்கப்பட்டவர்களிடையே கூட இன முரண்பாடும் இன ரீதியான வெறுப்பும் ஏற்படுகிறது.

தியநிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிகமாக தங்குவதற்கு எவ்விடமும் ஒதுக்கப்படவில்லை. பதியப்பலல்லவில் பாதிக்கப்பட்டவர்கள் பாடசாலைகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேயிலைத் தோட்டக் காணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டு குடியேற்றப்படவிருப்பதாக கூறப்படுகிறது. அவ்வாறு தேயிலைக் காணிகளில் குடியேற்றப்படும்போது அக்காணிகளை நம்பி வேலை செய்துவரும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் வேலை இழக்க வேண்டி வருவதுடன் அத்தோட்டங்களிலிருந்து வெளியேற வேண்டிவரும். அதனால் அவர்களை குடியேற்ற வேண்டாம் என தொழிலாளர்கள் எதிர்த்தால் அங்கு பாதிக்கப்பட்ட சிங்கள மக்களுக்கும் தமிழ் தொழிலாளர்களுக்குமிடையில் முரண்பாடும் மோதலும் ஏற்படலாம் பாதிக்கப்பட்டவுடன். நிவாரணப் பொருட்களை கொண்டு சென்றவர்களுக்கும் அவற்றை பெற்றவர்களும் அதனால் ஏற்பட்ட சகோதர மனிதப்பிணைப்பும் சிதைக்கப்படலாம்.

எனவே இவ்விடத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இனப்பாகுபாடின்றி நிவாரணமளிக்கப்பட வேண்டும். அவர்கள் பாதுகாப்பான இடங்களில் மீளக்குடியேற்றப்பட வேண்டும். இதிலும் இனவாதமும் பேரின ஆதிக்கமும் ஆதிக்கம் செலுத்த அனுமதிக்கப்படக்கூடாது.

அதற்கேற்ற அனர்த்த நிவாரண முகாமைத்துவத்தை அரசாங்க மேல் மட்டத்திலிருந்து பிரதேச செயலகங்கள் மட்டம் வரை சரியாக முன்னெடுக்க வேண்டும். ஏனெனில் கடல்கோள், மழை, வெள்ளம், வரட்சி, மண்சரிவு போன்ற அனர்த்தங்கள் இலங்கையில் தொடர்ச்சியாக ஏற்படவிருப்பதாக ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். நிலத்திற்கு அடியில் இடம்பெறும் நகர்வுகள் அசைவுகள் போன்ற இயக்கங்கள் அபிவிருத்தி என்ற பேரில் மனிதர்களால் செய்யப்பட்டுள்ள நிலஅகழ்வுகள், காடுகள் மலைகள் அழிக்கின்றமை நீர்மறிப்புத்திட்டங்கள் போன்றவற்றால் பாதிக்கப்படுகின்றன. அதன் காரணமாக மலையகத்தில் தொடர்ச்சியான நிலநடுக்கம், நிலவெடிப்பு மண்சரிவுகள் ஏற்படுகின்றன. நுவரேலியா மாவட்டத்தில் ஐந்து பெரிய நீர்த்தேக்கங்கள் இருக்கின்றன. அதனால் நிலக்கீழ் இயக்கங்கள் எதிரிடையாக வித்தியாசமாக இயங்குகின்றன.

வலப்பனையில் ஏற்பட்டுள்ள மண்சரிவுகளுக்கு அப்பகுதியில் செங்குத்தான நிலச்சரிவின் அடிவாரத்தில் கண்டிமாவட்டத்தில் இருக்கும் விக்டோரியா, ரந்தனிகல ஆகிய நீர்த்தேக்கங்களின் இயக்கம் காரணமாகும் என்று நில ஆய்வாளர்களும், புவியியலாளர்களும் தெரிவித்துள்ளனர்.

அபிவிருத்திக்கு தேவையான மின்சாரத்தை பெறுவதற்குரிய பாரிய நீர்மின்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீரை தேக்கி வைக்காது ஓடவிடுகின்ற சிறிய நீர்மின்திட்டங்கள், டேர்பைன் முறை விறகு, காற்று, சூரியவெளி, இயற்கைவாயு போன்றவற்றிலிருந்து இயற்கைக்கும், சூழலுக்கும் பாதிப்பு குறைவான வழிமுறைகளில் மின்சாரத்தை பெறமுடியும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வெளிநாட்டு மூலதன ஆதிக்கத்திற்கு அடிபணிந்து பாதிப்பான திட்டங்களே இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றன. மேல்கொத்தலை நீர்தேக்க திட்டம் போன்றவற்றுக்கு மக்கள் எதிர்ப்பு தெரிவித்த போதும் அதனைக் கவனத்தில் கொள்ளாது கண்மூடித் தனமாகவும் ஏதேச்சதிகாரமாகவும் அவற்றை அரசாங்கம் மேற்கொண்டுவருகிறது.

இரத்தினக்கல் அகழ்வுகள் பாரிய பாதைகளை அமைத்தல் நீர்த்தேக்கத்திட்டம் போன்றவற்றினாலும் நிலநடுக்கம், நிலவெடிப்பு, மண்சரிவு போன்றன ஏற்படுகின்றன. அவற்றை தடுத்து நிறுத்த முடியும். அரசாங்கம் அதற்கு காரணமான "பாரிய அபிவிருத்தித்திட்டங்கள்" எனப்படுபவற்கைக் கைவிட வேண்டும்.

அத்துடன் இலங்கை தரையமைப்பு இன்னும் முதிர்ச்சியடையாமல் மென்மையாகவே இருக்கிறது. அது காலத்தாலேயே முதிர்ச்சியடையும் அதனைக் கருத்திற்கொள்ளாது செய்யப்படும் செயற்கையான மனித செயற்பாடுகளால் அத்தரையமைப்பிற்கு அழிவு ஏற்படும். அதனை தவிர்க்க திட்டமிட்ட செயற்பாடுகள் அவசியம்.

எனவே அபிவிருத்தி என்ற பேரில் செய்யப்படும் இயற்கையைப் பாதிக்கும் அழிவு வேலைகளைக் கைவிடவேண்டும். பொருத்தமான ஏற்புடைய அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் இயற்கை அனர்த்தங்களிலிருந்து மக்களை பாதுகாக்கவும், அழிவுகளை தவிர்க்கவும் திட்டமிட்ட விஞ்ஞானபூர்வமான பாதுகாப்பான நடவடிக்கைகள் அவசியம். அத்துடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரண நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

**பூமிநேசன்**

---

பெருந்தோட்டங்களில் இருந்து ....
5ம் பக்க தொடர்ச்சி

தொழிற்துறைகளை தேர்ந்தெடுக்கும் நிலைமையும் இல்லை.

அதனால் பெருந்தோட்டத்துறையிலேயே வருமானத்தை பெற்றுக்கொள்ளவும் வேலை வாய்ப்பு, சமூகப்பாதுகாப்பு என்பவற்றை பெற்றுக்கொள்ளவும் அரசியல் ரீதியாக தோட்டத்தொழிலாளர்கள் போராட வேண்டும். அதனாலேயே தோட்டத் தொழிற்துறையை விட்டு வெளியேறமுடியாத பெரும் எண்ணிக்கையான தொழிலாளர்களின் வாழ்வுரிமையை நிலைநாட்ட முடியும். மலையகத்தமிழ் தேசிய இனத்தின் தேசிய அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடிப்படைகளை பெற்றுக் கொள்ளவும் முடியும்.

**அரசியல் தொழிற்சங்க தலைமைத்துவங்கள்**

இந்த அடிப்படையிலான அரசியல்; தொழிற்சங்க கொள்கைகளும் அரசியல் தொழிற்சங்க அமைப்புகளும் தலைமைத்துவங்களும் நடைமுறைகளும் வேலைத்திட்டங்களும் வேலைமுறைகளும் அமைய வேண்டும்.

இதற்கு மக்கள் செயற்பட்டாளர்களினது. குறிப்பாக மலையகத்தின் படித்தவர்களின் பங்களிப்பு அவசியமாகிறது. படித்தவர்கள் அவர்கள் விரும்பினால் சுதந்திரமாக செயற்பட முடியும். சுதந்திரமாக செயற்படுவது என்பது அடக்குமுறைகள் அழுத்தங்களுக்கு எதிராகச் செயற்பட வேண்டும். அந்தவகையில் அவர்களது சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு அவர்கள் வாழும் சூழல் சுதந்திரமாக இருக்க வேண்டும். மலையகத்தில் படித்தவர்கள் அவர்கள் வாழும் பெருந்தோட்டத்துறையில் அதன் தொழிலாளர்களும் சுதந்திரமாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்த சமூக அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும். இன்றிருக்கும் சூழ்நிலை தோட்ட தொழிலாளர்கள் மட்டுமன்றி அவர்களை தங்கி வாழ்பவர்களும் படித்தவர்களும் தோட்டப் பகுதிகளை விட்டு வெளியேறுவதை நிர்ப்பந்திப்பதாகவே இருக்கின்றது. இது படித்தவர்களுக்கு பாதுகாப்பானதாக இராது.

**மலையகப் படித்தவர்களின் பங்களிப்பும் அர்ப்பணிப்பும்**

மலையகத்தின் படித்தவர்களின் உருவாக்கத்திலும் இன்றைய ஆகக்குறைந்த வளர்ச்சிக்கும் தோட்டத்தொழிலாளர்களின் உழைப்பும், அர்ப்பணிப்பும், போராட்டங்களும் காரணமாகும். படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பை கோரி குறிப்பாக ஆசிரியர் நியமனங்களை கோரி நடக்கும் போராட்டங்களில் முக்கிய சக்தியாக தோட்டத்தொழிலாளர்களே இருக்கின்றனர். படித்தவர்களின் இருப்பு தோட்டத்தொழிலாளர்களின் இருப்பிலேயே தங்கி இருக்கிறது. அதனால் தோட்டத்தொழிலாளர்களின் இருப்பை பாதுகாப்பதில் படித்தவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். படித்தவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் வழித்தோன்றல்களே.

2006 நவம்பர், டிசம்பர் மாதங்களில் சம்பளஉயர்வு கோரி தோட்டத்தொழிலாளர்கள் நடத்திய போராட்டங்களில் மலையக மாவட்டங்களில் அதிகமாக படித்தவர்கள் வாழும் நுவரேலியா மாவட்டத்தில் படித்தவர்களின் பங்கு குறிப்பிடக் கூடியளவாகவும் அமைப்பு ரீதியானதாகவும் இருக்கவில்லை என்று பொதுவாகவே விமர்சிக்கப்படுகிறது. அதற்கு காரணம் படித்தவர்கள் தோட்டத்தொழிலாளர்களிலிருந்து அந்நியப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பள உயர்வுப் போராட்டத்தை தங்களது சமூகப் பிரச்சினையாகக் கொள்ளாமல் அவர்கள் தோட்டத்தொழிலாளர்களினது பிரச்சினையாக மட்டும் கொள்ளும் நிலையே இருந்துள்ளது.

இந்த நிலைமையை மாற்றி படித்தவர்கள் அவர்களது கல்வியறிவை கொண்டு சமூகத்திற்காகவும் இருப்பிற்காகவும் முன்னுதாரணமான பங்களிப்பு செய்ய வேண்டும். அதற்கான திட்டங்களை உருவாக்கி மக்களுடன் சேர்ந்து செயற்பட வேண்டும். இல்லாவிட்டால் படித்தவர்களின் இருப்பு சிதைக்கப்படும். எதிர்காலத்தில் தோட்டதொழிலாளர் சமூகத்திலிருந்து படித்தவர்கள் தோன்றவும் முடியாத நிலை ஏற்படும்.

படித்தவர்கள் அவர்களுக்கு சம்பளத்தை கொடுக்கும் தொழிலை செய்வதை மட்டும் சேவையாக கொள்ள முடியாது. தொழிலினூடாக மக்களுக்கு சேவை செய்யலாம் என்பதுடன் தொழிலுக்கு அப்பால் சமூக முன்னேற்றத்திற்கும் இருப்பிற்காகவும் பங்களிப்பு செய்ய வேண்டும். அதனை அவரவர்களுக்கு ஏற்றவகையில் அவர்களது ஆளுமையை வளர்க்கும் வகையிலும் பங்களிப்பு செய்ய முடியும். பாராளுமன்ற அரசியல்வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் இலங்கையின் ஆளும் பேரினவாத முதலாளித்துவத்திற்கு மிகவும் கீழ்ப்படிவானவர்களாக இருக்கின்ற இன்றைய காலகட்டத்தில் பேரினவாத முதலாளித்துவ கட்டமைப்பிற்கு வெளியில் நீண்டகால நோக்கில் செயல்படுவது அவசியம். தோட்டத்தொழிலாளர்களினதும் மலையகத் தமிழ் தேசிய இனத்தினதும் விடுதலைக்காகவும், உடனடியான நாளாந்த பிரச்சினைகளை தீர்க்கவும் தேவையான அரசியல், சமூக, பொருளாதார பண்பாட்டு வழிமுறைகளை படித்தவர்கள் ஆழ்ந்து சிந்திப்பதும் அதற்கு பங்களிப்பு செய்வதும் அவசியமாகிறது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்



# தோட்ட நிர்வாகங்களின் கெடுபிடிகள்

அன்புக்குரிய அனைவருக்கும் வணக்கங்கள்,

தோட்டத்தொழிலாளர்களின் சம்பளவுயர்வுப் போராட்டம் பல குளறுபடிகளுக்கும் காட்டிக்கொடுப்புகளுக்கும் மத்தியில் ஏற்கனவே முடிவடைந்து விட்டது. இந்தப் போராட்டத்தின் பின்பு தோட்டப் புறங்களில் சிறிது சலசலப்பாகத்தான் இருக்கிறது, வேலை நிறுத்தப் போராட்டத்தால் கோபம் கொண்டுள்ள கம்பெனிகள் தமது சுயத்தை சில தோட்டங்களில் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமது வெறுப்புகளை கோபங்களை ஆங்காங்கே உமிழ்ந்து கொண்டிருக்கின்றன.

சம்பளவுயர்வுப் போராட்டத்தின் உச்சகட்டமாக நடைபெற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலமாக தோட்டக்கம்பெனிகள் தமக்கு சுமார் நானூறு கோடிக்கும் அதிகமான தொகை நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன. ஒரு சிறு துரும்பையேனும் இழக்க விரும்பாத முதலாளிய பிசாசுகளுக்கு இது பேரிடிதானே.

பேரிடியை வாங்கியவர்கள் சும்மா இருப்பார்களா? தமது சுரண்டலை மேலும் விரிவுபடுத்தி நட்டத்தொகையை தொழிலாளர்கள் மூலம் மீண்டும் பெறுவதற்கான நடவடிக்கைகளை தோட்ட நிர்வாகங்கள் முன்னெடுக்கின்றன.

கெட்டபுலா தோட்டத்தில் இது போன்றதொரு நடவடிக்கையை கேள்விப்படவும் பத்திரிகையில் பார்க்கவும் முடிந்தது. அங்கு சம்பளம் தொடர்பான ஓர் அறிவித்தல் தோட்ட அலுவலகத்திலும் தோட்டப் பொது இடங்களிலும் காணப்படுகிறது. அதில் 18 கிலோ கொழுந்து எடுத்தால் தான் ரூபா 170/= எனவும் அதற்கு குறைவாக எடுக்கும் நிறைக்கு ஏற்றவாறு சம்பளம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுவரையிலும் தோட்டங்களில் இம்மாதிரியான செயற்பாடுகள் இருந்ததில்லை. புதிய ஒப்பந்தத்திலும் இம்மாதிரியான சம்பளத்திட்டம் பற்றியும் குறிப்பிடப்படவில்லை. தோட்டங்களில் வழமையாகவே தேயிலைக் கொழுந்துகள் அதிகமாக வளரும் பருவங்களில் (Crop Season) 14 அல்லது 15 கிலோ இற்கு ஒரு பெயர் வழங்குவார்கள். கொழுந்து குறையும் காலத்தில் (Offseason) 8-12 வரையான கிலோவிற்கு வேறு பெயர் வழங்குவார்கள். இதுவே வழமையான நடைமுறை.

சம்பளத்தை கூட்டியவுடன் தொழிலாளர்கள் எடுக்கும் கொழுந்தின் நிறையையும் அதிகரிக்கிறார்கள். இதன் மூலம் தொழிலாளர்களுக்கு கிடைக்கும் மேலதிக நிறைக்கான பெறுமதி இல்லாமல் செய்யப்படுகிறது.

அது மாத்திரமின்றி தற்போது தேயிலைத் தோட்டங்கள் எல்லாம் மோசமாகத்தானே இருக்கும். தொடர்ச்சியான வேலை நிறுத்தத்தால் மோசமடைந்து இருக்கும் தேயிலை மரங்களை திருத்துதல் தோட்டங்களை சுத்தப்படுத்தல் போன்ற வேலைகளுக்கு கொடுப்பனவு செய்து செலவழிக்கவிரும்பாத கம்பெனிகள் அதை தொழிலாளர்களை சிரமதான முறையில் செய்து தரப் பணிகிறார்களாம். ஏனெனில் போராட்டத்தின் மூலமே இவ்வாறான நிலைமை வந்தது எனவும் குற்றஞ்சாட்டுகிறார்கள். இப்படியான வேலைகளுக்கு அரைப்பெயர் அல்லது கைக்காசுக்கு வேலை செய்யுமாறும் கோருகிறார்கள். இதன் மூலம் மொத்தச் சம்பளத்தொகையை குறைத்து விடலாந்தானே. தோட்டங்களில் வேலை கொடுக்கும் நாட்களில் 75% அல்லது 80% நாட்கள் வேலைசெய்தால் தான் அடிமொத்த சம்பளத்தில் மாற்றமில்லாமல் அப்படியே கிடைக்கும். எனவே வேலை நாட்களை குறைத்து சம்பளத்தை குறைக்கவும் முயற்சிக்கிறார்கள்.

அத்துடன் தோட்ட நிர்வாகம் அநியாயத்திலும் அநியாயமாக தொழிற்சங்க நடவடிக்கைகளையும் அச்சுறுத்துகிறது. வேலை நிறுத்தத்தை தொடரச் சொன்ன எல்லாத் தொழிற்சங்கங்களுககும் உறுப்பினர்களை சேர்ப்பதில் பெரும் தடங்கலாக இருக்கிறது.

இது இ. தொ. காவுடன் இணைந்து செய்யும் வேலை. தொழிலாளர்கள் தமது சந்தாவை நிறுத்தி விட்டதால் அவர்கள் கடுப்பில் இருக்கிறார்கள். இவர்களைப் போன்றவர்களையும் இவர்களது பாசறையில் வளர்ந்த தொழிற்சங்க வாதிகளையும் நாம் இனம் கண்டு தூக்கி வீசிட வேண்டும்.

நாம் இப்போது ஒன்றை நன்றாக புரிந்து கொள்ளத்தான் வேண்டும். தோட்டக் கம்பெனிக்கு தமது சுரண்டல் நலனை தவிர வேறு எதிலும் அக்கறை இல்லை. தொழிலாளர்களின் வாழ்வைப் பற்றியோ வயிற்றுப்பசியைப் பற்றியோ அவர்களுக்கு கிஞ்சித்தும் அக்கறை இல்லை. தொழிலாளர்களின் இரத்தத்தை உறிஞ்சி தாம் நலமாக வாழவே எண்ணுகிறார்கள். அவர்களின் தாளத்துக்கு ஆட்டம் போடும் பிற்போக்கு தொழிற்சங்கங்களின் முகத்தை அடையாளங்கண்டு தகுந்த பதிலடியை கொடுக்கவேண்டும்.

எந்தவொரு போராட்டமும் முடிவடைந்தவுடன் அதன் பிரதிபலனை எதிர்ப்பார்க்கலாம். அதற்கு அஞ்சாது தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொள்ள வேண்டும். அப்படிச் செய்வதினூடாக இந்தச் சுரண்டற்காரர்களை தோல்வியடையச் செய்து தொழிலாளர் இயக்கத்தை கட்டிஎழுப்பும் பாதையிலான எமது பயணத்தை வலுப்பெறச் செய்ய வேண்டும். அதற்காக நாம் புரட்சிகர அணியை உருவாக்கும் பணியை முன்னெடுக்கப்பாடுபட வேண்டும்.

இப்படிக்கு

கிட்டு

# மலையக அரசியலை முன்னெடுக்க ஆய்வுமையம் வேண்டுமாம்

## அழிவுகர ஆலோசனை தருகிறார் சி. அ. யோதிலிங்கம்

“மலையகஅரசியல் முற்றுமுழுதான இன அரசியலாக முன்னெடுக்கப்பட வேண்டும். வர்க்க அரசியலாக இருக்கக் கூடாது. இவ் இன அரசியலை முன்னெடுப் பதில் இ.தொ.கா.வும். ம.ம.முவும் தவறிவிட்டன. அத னாலேயே அண்மைய வேலை நிறுத்தம் வெற்றி பெற முடியவில்லை. ஆதலால் மலையகத் தேசிய அரசியலை இன அரசியலாகவும் அதனையே தேசிய அபிலாஷை யாகவும் கொண்ட அரசியலாக வளர்த்தெடுக்கவும் வேண்டும். அதற்கான அமைப்பும் செயற்பாடும் அவசி யம்” மேற்குறித்த கருத்தை வலியுறுத்தி சி. அ. யோதிலிங்கம் என்பவர் கடந்த 31-12- 2006 அன்று வெளிவந்த தினக்குரல் வார இதழில் “மலையக தேசியம் மேற்கொள்ள வேண்டிய பணிகள்” என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்.

மேலும் அக் கட்டுரையில் “மலையக அரசியல் பிரச்சினை என்பது ஒரு வர்க்கப் பிரச்சினை அல்ல. அது ஒரு தேசிய இனப் பிரச்சினை. அதனால் அங்கு வர்க்கப் போராட்டம் நடாத்தும் சாத்தியம் இல்லை. எனவே தேசிய அரசியலென்பது வந்துவிட்டால் சம்மந்தப்பட்ட தேசிய இனத்தின் வளங்களனைத்தும் தேசியத்தினை நோக்கியதாக இருக்க வேண்டும். தேசியத்திற்கு வெளியில் எதுவும் இருக்கக் கூடாது. தேசியத்திற்கு எதிராகவும் எதுவுமிருக்கக் சுடாது” இவ்வாறு வரையகக்கப்படுத்தி முடித்திருக்கிறார் யோதிலிங்கம். அத்துடன் அவர் கூறும் மலையகத்தின் இன அரசியல் முன்னெடுப்பிற்கு புத்திஜீவிகள் இணைந்து ஒரு “ஆய்வு மையத்தை” ஏற்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்திக் கூறி உள்ளார்.

மேற்குறித்த கருத்துகளைச் சாராம்சமாகக் கொண்ட அக்கட்டுரை மிகவும் நச்சுத்தனம் கொண்ட ஒன்றாகவே காணவேண்டியுள்ளது. கட்டுரையின் ஊடாக யோதிலிங்கம் வற்புறுத்தும் பிரதான அம்சம் மலையகத்தில் வர்க்கப் போராட்ட அரசியல் முன்னெடுக்கப்படவோ அல்லது வளரவோ கூடாது என்பதாகும். கடந்த ஆண்டு டிசம்பரில் இடம்பெற்ற தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தப் போராட்டம் வர்க்க உணர்வையும் வர்க்கப் போராட்ட எழுச்சியையும் வெளிப்படுத்திய வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஒரு போராட்டமாகும். இதில் சிங்களத் தொழிலாளர்கள் உள்ளிட்ட சாதாரண சிங்கள மக்களின் பங்களிப்பும் ஆதரவும் இருந்தது கவனத்திற்குரியதாகும். எனவே அப் போராட்டம்

தொடர்ச்சி 13ம் பக்கம்


# பேரெழுச்சி குறித்து!

முன்பொருநாள்
மொஸ்கோ பெத்தோகிராத் கிரம்ளின் வீதிகளில்
காய்ந்தும் வாடியும்
கந்தல் உடையிலும்
காய்ந்த ரொட்டிக்கும் கோப்பைத் தேநீருக்குமாயலைந்த
கடும் உழைப்பாளர்..........



போர்க்குணம் கொண்டு
பொங்கியெழுந்ததாயும்- அவர்
கையில்
செங்கொடியும் வீர நடையும் பூண்டு
எல்லா வீதியிலும் நடந்ததாயும்
அழகிய சரவிளக்குகள் தொங்கும்
எசமானர் மாளிகை
கோட்டை கொத்தளங்கள்
குளிர்கால அரண்மனையெங்கும் புகுந்து
அரசன் ஜாரின் கொடிகள் வீழ்த்தி
எவரும் வியக்கும் ஆட்சி புரிந்ததாயும்
வண்டு ஈ கொசு மொய்க்கும்
ஒளி வராத ஒழுகும்
லயக் கூரையின் கீழிருந்து வாசித்தேன்!

இரவு ஒரு மணி.............
கால்கள் சூம்பி கறுத்து
கன்னம் ஒட்டி
காலொன்று ஒடிந்த கட்டிலில் தாத்தா!
ஒட்டிய வயிறும் ஒடுங்கிய உடலும்
கட்டிய சாரத்தில்
ஆயிரம் பொத்தல்களுடனும் அப்பா!



எட்டு மணிநேர உழைப்புக்குப் பின்னும்
எட்டாத
மூன்று வேளைச் சோறும்
முழுசாய் மூட துணியும் கேட்டழும் அக்கா
ஆறுதல் கூறும் அம்மா!

இவ்விதமாய்
எங்கள் வீட்டில் பத்துப்பேர்
எங்கள் வீதியில் ஆயிரம் பேர்!

புழுகர்களினதும் எத்தர்களினதும்
பேச்சில் மயங்கி
இம் மலைச் சாரல் வழியே லட்சம் பேர்!

சிந்தையின்றி
ஓர் பொழுதும் ஒளிபரவாத வாழ்வுள் பதுங்கி
இன்பமற்று ஏங்கியோரைக் காண
மனம் நொந்து
மலை கடந்த ஞானப் பெரு வெளியில்
மூழ்கினேன்!



அந்தோ.........
அழகிய மலைச் சாரலெங்கும்
அல்லுற்று ஆறாத் துயர் கொண்டு மூழ்கி
எழாதிருந்தோர் மலை நடுங்க
பொங்கும் கடல் போல் திரண்டு
புயலாய்
பாதை. குறுக்கு. படிகள் எங்கும் நடந்து
ஊதியம் உயர்த்தென
உரத்து முழக்க
ஒன்றாய் வருதல் கண்டு களிப்புற்றேன்!

எல்லாப் புழுகர்களும் எத்தர்களும்
இனி வீழும் காலம் தொலைவில்லை என்பதால்
இன்புற்றேன்!

அதிகார பலம் கொண்டு
அடக்கி
எவ்வேளையும் ஒளிகிட்டா தொடுக்கிய
ஓடுகாலிகளின்
ஆணிவேர் பிடுங்கும் இப் பேரெழுச்சிக் கண்டு
உவகை பூண்டு பாடலுற்றேன்!

இராகலை பன்னீர்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# மக்கள் எழுச்சிகளினூடாகவே இலங்கையில் அனைத்து மக்களின் விடுதலை சாத்தியம்

**சமூக மாற்றத்திற்கான மாக்சிச லெனினிச தமிழ் சிங்கள ஆர்வலர்களினால் நடாத்தப்பட்ட கலந்துரையாடலில் இருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையிலேயே இக் கட்டுரை தொகுத்து எழுதப்பட்டது. இக் கட்டுரை மேலும் விரிவுபடுத்தப்பட்டு முழுமை பெறுவதற்கு மாச்சிச லெனினிச ஆர்வலர்கள் மற்றும் வாசகர்களிடமிருந்து ஆக்க பூர்வமான கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. [ஆசிரியர் குழு]**

2002 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ரணில் விக்கிரம சிங்ஹவிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வும் யுத்த நிறுத்தமும் நடைமுறையில் இருந்து வந்தது. ஆனால் கடந்த ஒரு வருடமாக இடம்பெற்று வரும் மோதல்கள், கிளைமோர் தாக்குதல்கள், குண்டுவெடிப்புகள், ஆட்கடத்தல்கள் கொலைகள் கைதுகள் காணாமல் போதல்கள் போன்றன அவற்றை செல்லும்படி அற்றதாக்கிவிட்டன.

## இனப்பிரச்சினையும் அந்நிய சக்திகளும்

பயங்கரவாதத்திற்கு எதிரான போருக்கு உதவி செய்வது என்ற பேரிலும் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவுவது என்றபேரிலும் ஏகாதிபத்திய, மேலாதிக்க சக்திகள் எங்கள் நாட்டின் நாளாந்த நடவடிக்கைகளை தீர்மானித்து வருகின்றன. அதன் வழியில் அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், ஜப்பானும் இந்தியாவும் மேலாதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்தியாவுக்கு நன்மை பயக்கும் ஒருபக்க வர்த்தக ஒப்பந்தமும் இலங்கையில் இந்திய முதலீடுகளும் எமது நாட்டை இந்திய பொருளாதாரத்திற்கு அடிமையாக்கிவிட்டது. அத்துடன் அமெரிக்காவிடமிருந்தும் பாகிஸ்தானிடமிருந்தும், இஸ்ரேலிடமிருந்தும் இராணுவ உதவிகளைப் பெற்று வருகிறது இலங்கை. இங்கு சி.ஐ.ஏ, எப்.பி.ஐ, றோ, மொஸாட் போன்ற வெளிநாட்டு உளவு நிறுவனங்கள் தத்தமது காரியங்களை கச்சிதமாகச் செய்தும் வருகின்றன.

சிங்கள பேரினவாதத்தின் நிலைப்பாடுகள் காரணமாகவும், தமிழ்த் தேசியவாதிகளின் தவறுகளினாலும் சமாதான நடவடிக்கைகள் என்ற பேரில் வெளிநாட்டு சக்திகளின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது.

இன்று தேசிய இனப்பிரச்சினை பிரதானமாக்கப்பட்டு வெளிநாட்டு சக்திகளின் கைகளில் விடப்பட்டுள்ளது. சிங்கள மேலாதிக்கத்தினாலும் அதன் ஒடுக்குமுறை அணுகுமுறைகளாலும் தமிழ். முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மீதும் பறங்கியர், வேடர்கள் ஆகிய சிறிய சமூகங்கள் மீதும் சொல்லொணா துயரங்களும், கொடுமைகளும் ஒடுக்குமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அடக்கப்பட்ட தமிழ்மக்களின் போராட்டங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் மையப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன் ஆயுத நடவடிக்கைகளும் மிகவும் மேலோங்கியே வந்துள்ளன.

மறுபுறத்தில் விவசாயத்துறையிலும் நவ தாராள பொருளாதாரத்திட்டங்கள் ஏகாதிபத்திய உலகமயமாதலின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. அவற்றின் பாதிப்புகள் காரணமாக மக்கள் தொடர்ச்சியாக அவற்றை எதிர்த்து வருகின்ற போதும் ஆளும் வர்க்கங்கள் அவற்றை நிறுத்தாது முன்னெடுத்தும் வருகின்றன.

தன்னிறைவை அடிப்படையாகக் கொண்ட தேசியப் பொருளாதாரத்தின் உயிரணுக்களை உலகமயமாதல் என்ற நிகழ்ச்சி நிரல் அழித்துவிட்டது.

அடக்கப்படுகின்ற விவசாயிகள், தொழிலாளிகள் நடுத்தரவர்க்கத்தினர் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் மோசமடைந்து கொண்டிருக்கும் தாராள தனியார்மய சூழ்நிலையானது எதிர்கால பரம்பரையினர்களுக்கு இந் நாட்டு வளங்கள் விட்டு வைக்கப்படுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது.

## மக்கள் மத்தியில் அதிருப்தியும் எதிர்ப்பும்

இந்த சூழ்நிலையில் ஆளும் வர்க்கத்தினரால் முன்னெடுக்கப்படுகின்ற ஆட்சிமுறையை எந்தவொரு நியாயமான மனிதரும் குறை கூறவே செய்வர். இன்றைய மக்கள் விரோத ஆட்சிமுறைக்கு மாறான மக்கள் நலன்களை முதன்மைப்படுத்தும் மாற்று ஆட்சிமுறை தேவை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ளும் நிலையிலேயே உள்ளனர்.

இலங்கை மக்களின் நல் வாழ்க்கை, சுயகௌரவம் சுயமரியாதை, சொத்துக்கள் மற்றும் ஜனநாயகம் மனித உரிமைகள் போன்றவற்றைப் பாதுகாப்பதில் அரசியல் யாப்பு, ஜனாதிபதி ஆட்சிமுறை பாராளுமன்ற ஆட்சிமுறை போன்றன முழுமையாகத் தோல்வியடைந்துள்ளன. பொலிஸ் இராணுவம், நீதித்துறை போன்றன ஆளும் வர்க்கங்களுக்கு சேவை செய்வதிலும் அவர்களின் அக்கறைகளை பாதுகாப்பனவையாகவும் உயர் வர்க்க சிங்கள மேலாதிக்கத்தை பாதுகாத்துப் பேணுவதாகவும் இருக்கின்றன.

அதேவேளை தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் உழைக்கும் நடுத்தரவர்க்கத்தினர் ஏனைய சுரண்டும் வர்க்கங்களுக்கு எதிராக எழுந்து நின்று சவால்களை முன்னெடுக்க தயாராகி வருகின்றனர்.

இலங்கையின் இன்றைய நிலைமை ஆளும் வர்க்கங்களிடமிருக்கும் அதிகாரங்கள் உண்மையான மக்கள் பிரதிநிதிகளின் கைகளுக்கு மாற்றப்படுவதற்கான தேவையை நிர்ப்பந்திக்கிறது, அதிகாரத்தில் உடனடியான பாரிய மாற்றங்கள் தேவைப்படுகின்றன. மக்கள் காய்ந்த சருகாக மாறி வருகிறார்கள். அதன் மீது சிறிய தீப்பொறி பட்டாலேயே பெரிய காட்டுத்தீயை உண்டாக்கி விடும். மக்கள் ஆளும் வர்க்கங்களின் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர். ஆளும்வர்க்கத்தின் பழைய ஆட்சிமுறையும், நிர்வாகமுறையும் அவற்றின் இயலாத எல்லையை அடைந்துள்ளன. ஆளும் வர்க்கங்கள் தொடர்ந்து மக்களை ஆள்வதற்குரிய தகுதிகளை இழந்தும் விட்டன. இந்த சூழ்நிலையில் இலங்கை மக்கள் எதிரிடையாகவும் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ளனர். சொகுசாக இருக்கும் உயர் மத்தியதர வர்க்கத்தினருக்கும் பெரும் சொத்துப்படைத்த சிலருக்கும் கூட பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது.

## புதிய போராட்ட அணுகு முறை

அதனால் சாதாரண மக்கள் மட்டுமன்றி ஓரளவிற்கு வசதிவாய்ப்புகளுடன் வாழ்கின்றவர்கள் கூட மாற்று அரசியல் நடவடிக்கைகள் மூலமான மாற்றங்களை தேர்ந்தெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். அத்தகைய மாற்று அரசியல் புரட்சிகர அரசியலாகவே அமைத்தல் வேண்டும்.

இலங்கையின் ஆளும் வர்க்கங்களின் பண்பு ஏகாதிபத்தியத்தின் வாடிக்கையாளர்களாக செயற்படுவதாக இருக்கின்றன. அரசியல் சமூகத் தளங்களில் அரசின் கொள்கைகள், வன்முறை, யுத்தம் என்பனவற்றையே பிரதான அணுகுமுறையாகக் கொண்டுள்ளன. நிலைமைகளை சீர்செய்வதற்கான சீர்திருத்தங்களையோ இணக்கபாடுகளையோ ஏற்படுத்திக் கொள்ளும் நிலையில் இன்றைய ஆளும் வர்க்கங்களின் தலைமைகள் இல்லை.

> **சிங்கள மேலாதிக்கத்தினாலும் அதன் ஒடுக்குமுறை அணுகுமுறைகளாலும் தமிழ், முஸ்லீம் மலையகத் தமிழ்த் தேசிய இனங்கள் மீதும் பறங்கியர், வேடர்கள் ஆகிய சிறிய சமூகங்கள் மீதும் சொல்லொணா துயரங்களும், கொடுமைகளும் ஒடுக்குமுறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.**

இத்தகைய ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான உறுதியாக முன்னெடுக்கப்பட வேண்டிய போராட்ட வழிமுறைகளுக்கும் பழைய அரசியல் ஸ்தாபனங்களின் நடைமுறைகளுக்குமிடையில் வித்தியாசங்கள் இருக்கின்றன. பழைய சுரண்டுகின்ற பிற்போக்கு வர்க்கங்களுக்கும் இன்றைய கொள்ளைக்கார பயங்கரவாத ஆளும் வர்க்கங்களுக்குமிடையே அவற்றின் ஆட்சிமுறை மூலோபாயம் தந்திரோபாயம் போன்றவற்றில் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. அவ் வித்தியாசங்களைப் பார்க்கின்ற போது மக்கள் சார்பான இன்றைய போராட்ட அணுகுமுறைகள் பொருத்தமானவை என்று திருப்திப்பட முடியாது.

எனவே மக்களது பழைய அணுகுமுறைகளை முற்றாக மாற்றி புதிய முயற்சிகளும் புதிய திசையில் புதியமாதிரியான போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகளின் தொழிற்சங்க இயக்கங்கள், வேலைநிறுத்தப்போராட்டங்கள் தேர்தல் அரசியல்கள், கூட்டங்கள், ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்பு போராட்டங்கள் போன்றவை இன்றைய ஆளும் வர்க்கங்களின் வக்கிரம் நிறைந்த வன்முறைகளுடன் கூடிய அணுகுமுறைகள் எதிரிடையான விளைவுகளையே தந்துள்ளன.

எனவே இதுவரை மேற்கொள்ளப்பட்ட விதங்களிலிருந்து மாறுபட்ட விதத்தில் தேர்தல் களங்களுக்கு வெளியிலும் தொழிற்சங்க வரையறைகளுக்கு வெளியிலும் (கடந்த காலங்களில் தேர்தல் களங்களின் உள்ளும் வெளியிலும் செய்யப்பட்ட போராட்டங்கள் போலன்றன்றி) பல போராட்டங்கள் பாரம்பரிய பிரசார ரீதியான விதத்திலன்றி முன்னெடுக்கப்பட வேண்டும். என்.ஜி. ஒக்கள் போன்று குறிப்பிட்ட திட்டவரையறைகளுக்குட்பட்ட விதத்திலன்றியும் செயற்படுவது வரலாற்றுத் தேவையாகிறது.

தேர்தல்களினாலும், தேர்தல்களின் உச்சத்தினாலும் ஆளும் வர்க்கங்கள் மேலும் மேலும் சிறப்புரிமைகள் கொண்டவையாக்கப்பட்டுள்ளன. அதேவேளை ஆளப்படும் வர்க்கங்களின் சாதாரண உரிமைகளே மறுக்கப்பட்டு வரும் நிலையே காணப்படுகிறது.

1971, 1988 ஜே.வி.பி யின் ஆயுத நடவடிக்கைகளும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக நடைபெறும் ஆயுத ரீதியான நடவடிக்கைகளும் இனிமேல் ஒரு போதும் அவ்வாறான போராட்டங்கள் உருவாகக் கூடாது என்ற விரக்தி நிலையை மக்கள் சக்தியில் தோற்றுவித்துள்ளன. இதில் ஏகாதிபத்திய பிற்போக்கு ஆளும்வர்க்க சக்திகள் வெற்றிபெற்றுள்ளதை மறுக்க முடியாது. ஆனால் சரியான போராட்டத்தால் தற்போதைய ஆட்சிமுறையும் ஆளும் வர்க்கங்களும் செயலிழக்கச் செய்யப்பட்டு இலங்கையில் அர்த்தமுள்ள ஜனநாயக ஆட்சிமுறையொன்றை ஏற்படுத்துவதைத் தவிர வேறு தெரிவோ மாற்றுத்திட்டமோ ஒடுக்கப்பட்டுள்ள மக்களுக்கு இல்லை. அதற்கு தொடர்ச்சியான வெகுஜனப் போராட்டங்கள் புதிய விதத்தில் புதிய அர்த்தத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த வகையிலேயே இன்று உலகலாவிய ரீதியில் மகத்தான வெகுஜனப்போராட்டங்களும். எழுச்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

## பழைய போராட்டங்களின் படிப்பினைகள்

தலைமைத்துவங்களின் தவறுகளினால் 1953 ஆகஸ்ட் 12 ல் நடைபெற்ற மக்கள் பெருமளவில் பங்கெடுத்த ஹர்த்தால் போராட்டம் வெகுஜன எழுச்சியாக வளரமுடியாமல் போனது பற்றி எமக்கு பட்டறிவிருக்கிறது. 1980 யூலை வேலை நிறுத்தப் போராட்டம் உட்பட பல விதமான வேலைநிறுத்தப் போராட்டங்களும் மக்களின் எதிர்ப்பு இயக்கங்களும், ஆர்ப்பாட்டங்களும் எதிர்விளைவுகளைத் தந்த போலி இடதுசாரி சக்திகளினதும் துஷ்ட என்.ஜி.ஓ அமைப்புகளினதும் நடவடிக்கைகளினால் எதிரிடையாக ஆளும்வர்க்கங்களுக்கு உதவி புரிந்துள்ளன. சுரண்டப்படும், ஆளப்படும் வர்க்கங்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து பாடங்களை நாம் படித்து முன்செல்லவேண்டும்.

வெகுஜன இயக்கங்களினாலும் எதிர்ப்பு போராட்டங்களினாலும் சில உரிமைகள் மக்களுக்கு கிடைத்துள்ளன என்பதையும் குறிப்பிடத்தக்களவான சில அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் அவற்றின் தலைமைத்துவங்கள் மக்கள் விரோத சக்திகளின் ஏகபோகத்திற்குள் மாட்டுப்பட்டே இருந்தன. பொதுவாக ஐ. தே. கட்சியினதும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினதும் அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு பொதுவாக இப் போராட்டங்கள் பாவிக்கப்பட்டன. தமக்கு வாய்ப்பளிக்கும் வரை அப்போராட்டங்கள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன.

## புதிய மக்கள் எழுச்சி அவசியமாகிறது.

இன்றைய சூழ்நிலையில் பொதுமக்கள் அவர்களின் அரசியல் எதிரியான ஆளும் வர்க்கங்களுக்கு நேருக்கு நேரெதிராக நிற்கும் அரசியல் சூழ்நிலையே நிலவுகிறது. அந்த எதிர்ப்பு அடிப்படையான சமூகமாற்றத்திற்கு குறையாத மாற்றத்தை வேண்டி அதற்கான தீவிரமான அரசியல் தலைமைத்துவ மாற்றத்தின் கீழ் வெகுவிரைவில் புதிய மக்கள் எழுச்சியை வேண்டிநிற்கிறது. இந்த நிலைமை முதிர்ச்சியடைந்து வெற்றிகரமான சூழ்நிலை ஏற்படுவது அனைத்து இலங்கை மக்களிலும் தான் தங்கியுள்ளது.

தொடர்ச்சி 11 ம் பக்கம



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# கடந்த காலப் போராட்டங்களிலிருந்து படிப்பினை பெற்று புதிய வெகுஜன எழுச்சிகளுக்கு தயாராக வேண்டும்

*மக்கள் எழுச்சியின்*

10ம் பக்க தொடர்ச்சி ...

வெகுஜன எழுச்சி, வெகுஜனப் போராட்டம் என்றவுடனே பயங்கரவாத ஆளும் வர்க்கங்களினாலும் இனவாதிகளினாலும் பாசிச வாதிகளினாலும் மிகவும் மோசமாக அடக்கி ஒடுக்கப்பட்டு விடுவதுடன் என்றுமில்லாதவாறு மேலும் அரச அதிகாரம் பலப்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கும் என்று சிலர் விவாதிப்பர். அதன் விளைவாக மக்களின் வாழ்க்கையில் எதிரிடையான கஷ்டங்களே ஏற்படும் என்றும் கூறுவர். அவ்வாறு வாதிடுபவர்களுக்கு மக்கள் எழுச்சியென்பது மக்களைப் பாதுகாக்கும் சரியான போராட்ட மார்க்கமாகத் தெரிவதில்லை.

வெகுஜன எழுச்சியை போராட்ட மார்க்கமாக ஏற்றுக்கொள்ளும் நாம் சமூகமாற்றத்திற்கான மக்கள் எழுச்சியின் புதிய அர்த்தத்தை புதிய வடிவத்தை புதிய இயங்கு முறையை பற்றி எமது கவனத்தை செலுத்த வேண்டியவர்களாகின்றோம். மக்கள் எழுச்சியை முறியடிக்க முடியாதளவிற்கு மாற்று பொருளாதார தற்காப்பு, வினை எதிர்வினை, போராட்டத்தின் நியாயத்தை வலியுறுத்தும் பண்பாட்டு முறைமை போன்றனவற்றை தயார் செய்து வருவது அவசியம். ஆகக்கூடுதலான மக்களின் பங்களிப்புடன் முன்னெடுக்க செய்யப்படும் வெகுஜன எழுச்சி, மக்களின் நலன்களுக்கா ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களைக் கொண்டதானதாக அமைய முடியும். இவ்வாறான எழுச்சியில் நிராயுதபாணிகளான மக்கள் கொன்றொழிக்கப்படுவார்கள் என்று வெகுஜன எழுச்சி ஏற்படுவது மிகவும் சிரமமானது எனக் கொள்ளும் சோம்பேறிகளும் மக்கள் எழுச்சியை அங்கீகரிக்க மறுப்பவர்களும் கருதுகின்றனர். இவ்வாறானவர்கள் மக்கள் சக்தி மீது நம்பிக்கை அற்றவர்களேயாவர்.

வெகுஜன எழுச்சியொன்றை முற்றாக ஆளும் வர்க்கம் ஆயுத ரீதியில் அடக்குமுறை அழிக்கக் கூடியதாக இருந்தால் அது சரியான வெகுஜன எழுச்சியாக இராது என்பதே அர்த்தமாகும். வெகுஜனப் போராட்டங்கள் தொடர்ச்சியையும் கோர்வையையும் கொண்டதே வெகுஜன எழுச்சியாகும். அத்தகைய சரியான வெகுஜன எழுச்சியில் சமூகமாற்றத்திற்கான நடவடிக்கைகளுக்கு முன்தயாரிப்பு நடவடிக்கைகளும் இருக்கின்றன. அவற்றிலும் தந்திரோபாயம் மூலோபாயம் போன்றன இருக்கின்றன. வெகுஜனப் போராட்டங்கள் சமகாலத்தில் பயிற்சிகளாகவும் மக்களுக்கு நம்பிக்கை தரும் போராட்டங்களாகவும் அமையும்.

## எழுச்சிகள் கவனமாக முன்னெடுக்கப்படல் வேண்டும்

தயாரில்லாத நிலையில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு வெகுஜன எழுச்சியும் தற்கொலைக்கு ஒப்பானதாகும். வெகுஜன எழுச்சிகளை எவரும் வலுக்கட்டாயமாக ஏற்படுத்த முடியாது. ஒரு வெறும் அறிவிப்பின் மூலம் அல்லது துண்டுப்பிரசுர சுவரொட்டி வேண்டுகோள்கள் அறைகூவல்களின் மூலம் வெகுஜனப் போராட்டங்களை வெகுஜன எழுச்சியாக ஏற்படுத்த முடியாது. வெகுஜன எழுச்சிகளை குறிப்பிட்ட திகதி இடம் சம்பவம் எனத் தீர்மானிக்க முடியாது. தேவையான அடிப்படையான நிலைமைகள் ஏற்படும் போது முரண்பாடுகள் கூர்மையடையும் போது நிலத்திலிருந்து வெகுஜன எழுச்சிமேலெழும்புவது தவிர்க்கவியலாது. சமூகமாற்றத்திற்கான வெகுஜன எழுச்சியை எவரும் வலுக்கட்டாயமாக ஏற்படுத்த முடியதாது போன்று வெகுஜன எழுச்சி ஏற்பட்டத் தொடங்கிவிட்டால் அதனை தடுத்து நிறுத்தவும் முடியாது. அதன் இலக்கை எய்தும் வரை அது தொடரும் அதன் பிறகு அதன் வெற்றியைத்தக்க வைத்துக் கொள்ள எழுச்சி தொடர வேண்டும்.

எனவே அவ்வாறான வெகுஜன எழுச்சி ஏற்படும் சாத்தியக்கூறுகள் பற்றி கண்ணும் கருத்துமாக நாம் இருக்க வேண்டும். அத்துடன் நாம் அச்சூழ் நிலைக்கு நின்று பிடிக்கக்கூடிய அரசியல், அமைப்பு ரீதியான தயார் நிலையையும் அதற்குரிய மக்களின் உணர்வு சார், அறிவுசார் தராதரங்களையும் ஏற்படுத்தியாக வேண்டும். அவ்வாறான தயார் நிலையானது மக்களின் தானெழுந்தவாரியான எழுச்சிகளை உரியவாறு பயன்படுத்தி மக்களுக்கு வழிகாட்ட முடியும்.

அவ்வாறான தயாரான சூழ்நிலை இல்லாத போது மக்களின் எதிரிகள் வெகுஜனப்போராட்டங்களை அவர்களுக்கு சார்பாக பயன்படுத்திக் கொண்டு அவற்றை செயலிழக்கச் செய்து அவற்றின் இலக்கான சமூக மாற்றத்திற்கு தடையாக இருப்பார்கள். இலங்கை வரலாற்றின் அதிகமான வெகுஜனப்போராட்டங்கள் இரண்டு பெரிய கட்சிகளான ஐ.தே. யையும் சுதந்திரக்கட்சியையும் மாறி மாறி ஆட்சிக்கு கொண்டுவரவே பயன்படுத்தப்பட்டுள்ளன. என். ஜி. ஓக்கள் அவற்றின் நிகழ்ச்சி நிரலுக்கு வெகுஜனப்போராட்டங்களை உட்படுத்திக் கொண்டுள்ளன. அதுவும் ஆளும்வர்க்கங்களுக்கு உதவுவதாக முடிந்துள்ளன.

## வெகுஜன எழுச்சியின் அரசியல் இலக்கு

வெகுஜனப்போராட்டங்களும் அதற்கான காரணங்களும் அதன் தலைமைகளுக்கு உரியதாக அன்றி மக்களின் கைகளிலேயே இருப்பது (மக்களின் நலனுக்காக இருப்பது) உறுதி செய்யப்படுவது அவசியம். அது சமூகமாற்றம் என்ற அடிப்படை அரசியல் இலக்கு இல்லாதவிடத்து அர்த்தமற்றதாகும்.

இந்த நாட்டு மக்கள் இரண்டு கட்சிகளினது ஆட்சியாலும் பாதிக்கப்பட்டவர்கள். அக்கட்சிகளால் மக்களின் அபிலாஷைகள் பூர்த்தி செய்யமுடியாது என்பதுடன் அக்கட்சிகளை மக்கள் சார்புக் கட்சிகளாக மறுசீரமைக்கவும் மாற்றவும் முடியாது. அக்கட்சிகளுக்கு பதிலீடாக வேறு கட்சிகளை உருவாக்குவதும் மாற்றாகாக இருக்க முடியாது. தேர்தல்களுக்காக பொருளாதார கோரிக்கைகளுக்காக மட்டும் வரையறுக்கப்படுகின்ற வெகுஜன நடவடிக்கைகளால் பயன் இல்லை என்பது மக்களுக்குப் புரிய வேண்டும். வெளி வெளியாக தெரிகின்ற பிரச்சினைகளை தீர்க்க சில கோரிக்கைகளுக்கு அவற்றை வரையறுக்கலாம் என்று தென்பட்டாலும் உண்மை அதுவல்ல. அடிப்படை காரணங்களைக் களைவதில் உடன்பாடும் அக்கறையும் ஏற்படவேண்டும்.

> தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்கலும் சிங்கள மக்களுக்கு எதிரான மறைமுக நேரடி ஏகாதிபத்திய அடக்கு முறைகளும் ஒன்றல்ல. அதனால் அவை வெவ்வேறு தளத்தில் பார்க்கப்படலாம். ஆனால் இரண்டு தேசிய இனங்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய மேலாதிக்க நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் ஒன்றேதான். அவற்றை இரண்டு தேசிய இனங்களும் தத்தமது தளங்களிலிருந்து வேறு வேறாக எதிர்க்கும் சூழ்நிலை இருந்தாலும் எதிர்க்கும் விடயமும் வெற்றி கொள்ளப்பட வேண்டிய அடிப்படை விடயங்களும் இரண்டிற்கும் பொதுவானவையே.

தமிழ் மக்களுக்கு எதிரான இன ஒடுக்கலும் சிங்கள மக்களுக்கு எதிரான மறைமுக நேரடி ஏகாதிபத்திய அடக்கு முறைகளும் ஒன்றல்ல. அதனால் அவை வெவ்வேறு தளத்தில் பார்க்கப்படலாம். ஆனால் இரண்டு தேசிய இனங்களுக்கும் எதிரான ஏகாதிபத்திய மேலாதிக்க நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் ஒன்றேதான். அவற்றை இரண்டு தேசிய இனங்களும் தத்தமது தளங்களிலிருந்து வேறு வேறாக எதிர்க்கும் சூழ்நிலை இருந்தாலும் எதிர்க்கும் விடயமும் வெற்றி கொள்ளப்பட வேண்டிய விடயங்களும் இரண்டிற்கும் பொதுவானவையே. இவ்விடத்தில் இரண்டு தேசிய இனங்களினது போராட்டங்களும் ஒருங்கிணைக்கப்படவேண்டும். போராட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு தேசிய ரீதியாக பொது எதிரியான பயங்கரவாத ஆளும்வர்க்கங்களுக்கு சர்வதேச ரீதியாக ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக முன்னெடுக்கப்படவேண்டும். அதேபோன்று பெருந்தோட்டத் தொழிலாளர் அரச துறை தொழிலாளர்களினது பொருளாதார கோரிக்கைக்கான வெகுஜன நடவடிக்கைகளுடன் மீனவர்களின் விவசாயிகளின் போராட்டங்கள் இணைக்கப்படல் வேண்டும்.

அத்துடன் மேல் கொத்மலைத்திட்டம், நுரைச்சோலை சம்பூர் அனல் மின்திட்டங்கள் வீரவில விமான நிலையத்திட்டம், அதிகவேக பாதை போன்றவற்றுக்கு எதிரான வெகுஜன நடவடிக்கைகளும் ஆளும் வர்க்க, ஏகாதிபத்திய பொது எதிரிகளுக்கு எதிராக ஒருங்கிணைக்கப்பட முடியும்.

## போராட்டங்களின் கூட்டிணைவு

வெகுஜனப் போராட்டங்களை சமூகமாற்றத்தை அடிப்படையாக கொள்ளாமல் அந்தந்த தளங்களில் அந்தந்த கோரிக்கைகளுக்கு வரையறுக்கப்பட்டு முன்னெடுக்கப்படுவதாக மட்டும் இருந்தால் பிரயோசனமற்றதாகும். அவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். ஒருங்கிணைக்கப்படுதல் என்பது ஒரு வெகுஜன நடவடிக்கையின் முக்கியத்துவத்தை குறைத்து இலக்கை மாற்றுவதோ ஆகாது. அந்தந்தப் போராட்டங்களை அந்தந்த தளங்களில் உயிர்ப்பாகவும் உரமாகவும் முன்னெடுக்கும் அதேவேளை வெகுஜனப் போராட்டங்களிடையேயும், தலைமைகளுக்கிடையேயும் கூட்டிணைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அவை சுதந்திரம்- பொது இணக்கம்- அர்ப்பணிப்பு என்ற அடிப்படையில் கூட்டிணைக்கப்படலாம். இவ்வாறு போராட்டங்களிடையே கூட்டிணைப்பு ஏற்படாவிட்டால் ஒரு போராட்டம் இன்னொரு போராட்டத்திற்கு எதிராக ஆளும்வர்க்கங்களால் திசைதிருப்பப்படுவது இலகுவாகிவிடும். குறிப்பாகத் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சிங்களமக்களுக்கும் முஸ்லீம் மக்களுக்கும் எதிரானதாக காட்டுவதில் இலங்கையின் பேரினவாத ஆளும் வர்க்கங்கள் வெற்றியடைந்திருப்பது தெரிந்ததே. இவற்றை முறியடிக்க போராட்டங்களிடையே கூட்டிணைப்பும் பொது எதிரிகளுக்கு எதிரான பொதுப்போக்கும் பொது வேலைத்திட்டமும் உருவாக்கப்பட வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட வெகுஜனப் போராட்டத்தில் ஐக்கியப்படுத்தப்படக்கூடிய அனைத்து சக்திகளும் ஐக்கியப்படுத்தப்படுவது போன்று வெவ்வேறு போராட்டங்களிடையேயும், அவற்றின் தலைமைத்துவங்களிடையேயும் கூட்டிமைவு அவசியம்.

வெகுஜனப்போராட்டங்களில் ஐக்கியம் அவசியம் என்பதன் அர்த்தம் ஆளும்வர்க்க கட்சிகளின் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களுடனும், போலி இடதுசாரிகள், சந்தர்ப்பவாதிகளுடனும் என். ஜி. ஓ க்களுடனும் ஐக்கியப்படுவது என்பதாகாது. அதாவது வெளிவெளியாகத் தெரிகின்ற வெளிவெளியாகத் தெரியாத மக்கள் விரோத சக்திகளுடன் ஐக்கியப்பட முடியாது. தேசிய இனப்பிரச்சினையில் பேரினவாதத்திற்கு எதிராக பரந்துபட்ட ஐக்கியம் தேவை என்பது பேரினவாத அடக்கு முறையாளர்களுடன் கைகோர்த்து கொண்டிருப்பவர்களுடன் ஐக்கியப்படுவதாகாது என்பது புரிந்துகொள்ளப்பட வேண்டும். ஒரு போராட்டத்தின் வெற்றிக்கு அதிகப் பெரும்பான்மை மக்களின் பங்களிப்பும் அதிகமான நட்பு சக்திகளும் குறைவான எதிரிகளும் இருக்குமாறு பார்த்துக் கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

## ஐக்கியமும் கூட்டிணைவும் போராட்டமும்.

அதேபோன்று குறிப்பிட்ட போராட்டத்திற்கு வெளியில் இருப்பவர்களின் ஆதரவை வெளியிலிருப்பவர்களின் போராட்ட நடவடிக்கையுடன் இணைவதன் மூலம் பெற்றுக் கொள்வது மிகவும் காத்திரமானதாக இருக்கும். வெளியில் இருப்பவர்களின் ஆதரவு வெறும் தார்மிக ஆதரவாகவன்றி அர்ப்பணிப்புமிக்க ஆதரவாக இருக்குமாறு விடயங்களை கையாள வேண்டும். உதாரணமாக தமிழ் மக்களின் போராட்டத்திற்கான சிங்கள மக்களின் ஆதரவு இரண்டு மக்கள் பிரிவினரதும் பொதுப் போராட்டங்களின் பரஸ்பர கூட்டிணைவாக இருக்கும் போது அது மிகவும் பலமானதாகவும் நீடிக்கத்தக்கதாகவும் இருக்கும்.

ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான பலமான சக்தி மக்கள் சக்திதான். அந்த மக்கள் சக்தி வெகுஜன போராட்டங்களினூடாக கட்டப்பட முடியும். அத்துடன் குறித்த வெகுஜனப் போராட்டத்தில் சம்பந்தப்படாதவர்களினது அதாவது ஆளும் வர்க்கங்களினால் பாதிக்கப்படுகின்ற ஏனைய பிரிவினரின் ஆதரவை அவர்களது போராட்டங்களுடன் கூட்டிணைப்பதன் மூலம் உறுதி செய்வது சரியானதாகும்.

குறித்த போராட்டங்களினுள் ஐக்கியமும், போராட்டங்களிடையே ஐக்கியமும் அவசியம். அந்த ஐக்கியம் கூட்டிணைவின் அடிப்படையில் இருப்பது ஜனநாயக பூர்வமானதாக இருக்க வேண்டும். கூட்டிணைவ கருத்து ரீதியானதாக மட்டுமன்றி நடைமுறை ரீதியாக அமைப்பு பொறிமுறை ரீதியாகவும் இருப்பது மிகவும் அவசியமானதாகும்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பின்நவீனத்துவமும் உலகமயமாதலும்

முதலாளித்துவத்தின தொடர்ச்சியான வளர்ச்சியானது, கவர்ச்சியூட்டப் பெற்ற பல்வேறு எண்ணக்கருக்களால் முலாம் பூசப்பட்டுள்ளது. நுகர்வோர் பொருளாதாரம் (Consumer Economics) நுகர்வோர் இறைமை. உலக சந்தைக்கான பொருளாதார நடவடிக்கைகள், என்றவாறான விபரிப்புக்கள் இடம் பெற்று வருகின்றன. மனிதவளம், இயற்கைவளம் முதலியவற்றைத் தீவிர சுரண்டலுக்கு உள்ளாக்கி மிகை இலாப மீட்டும் தொழிற்பாடுகளிலே பல்தேசியக் கம்பனிகள் ஈடுபட்டு வருகின்ற நிலையில் மிகை லாப மீட்டும் பொருளாதாரச் செயற்பாடுகளினால் மனித வாழ்க்கை அவலங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றது. சாமானியர்கள் பருகும் பானங்களிலே கிருமி நாசினிகள் கலந்து விற்கப்படுமளவுக்கு இலாபம் பெருக்கும் நடவடிக்கைகள் விரிவாக்கம் பெற்று வருகின்றன. நுகர்வோர் இறைமை, நுகர்வோர் மேலாண்மை, நுகர்வோரே உற்பத்தி பற்றிய தீர்மானங்களை எடுக்கும் விசைகளாக இயங்குகின்றனர் என்று விளக்கும் பொருளாதார நிபுணர்கள், நுகர்வோரின் உயிர்களே சுரண்டப்படுகின்ற அவலங்களை வெளிக் காட்டாதிருத்தல் வியப்பானது அன்று!

நவீன முதலாளித்துவ விரிவையும் சந்தைப் பொருளாதாரத்தையும் நுகர்ச்சிக் கோலங்களையும், சுரண்டல்களையும் கோட்பாட்டு நிலையில் நியாயப்படுத்தும் தத்துவமாக பின்நவீனத்துவம் உருவாக்கப்பட்டுள்ளது. அதன் பிரதான குறிக்கோள்களாக மார்க்சியத்தின் மீதும் அதன் சமூகம் பற்றிய தீவிர விளக்கத்தின் மீதும் சந்தேகங்களை எழுப்புவதுடன் தொழிலாளர்கள், ஒடுக்குமுறைக்கு உட்பட்டோர் ஆகியவர்களை ஒன்றுதிரட்டும் முறைகளை (Totalising Methods) மறுதலிப்பதுமாகும். நவீன முதலாளித்துவத்துக்கு எதிரான வலுக்கள் ஒன்று திரள்வதைச் சிதறடிப்பதற்கும். உதிரிகளாக்குவதற்கும் பின்நவீனத்துவக் கருத்தியல் முண்டுகொடுக்கின்றது. பெரும் உரையங்கள் (Meta narratives) விரிந்த கோட்பா ட்டு ஆக்கங்கள் (Grand Theories) என்றவாறு பின்நவீனத்துவாதிகளால் சிறப்பு எண்ணக் கருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. (Fox. N. F (2003) The new Sartre, Explorations in post Modernism, London, Continuum) இந்த எண்ணக்கருக்களின் உட்பொருளாகவும் மறைபொருளாகவும் அமைவது சுரண்டலுக்கு உள்ளாகிய மக்கள் அனுபவ நிலையிலும் கருத்தியல் நிலையிலும் ஒன்றிணைதலைத் தடுத்தலாகும்.


கோளமயமாக்கலுக்கு அனுசரணையான பல எண்ணக்கருக்கள் பின்நவீனத்துவ வாதிகளால் முன்வைக்கப்படுகின்றன. அவை:

(1) வர்க்கம் என்ற நிலையில் சமூகத்தைச் சுருக்கி விடுதல் (Class Reductionism) என்றவாதம் பொருத்தமற்றது என்று கூறுதல்.

(2) சமூக நிர்ணயிப்பில் பொருண மிய வாதம் (Economism) பொருந்தாது என்று முன்மொழிதல்.

(3) மாறிவரும் பொருளாதார நிலைமைகளில் ஒருவரது வாழ்க்கைத் தெரிவுகளில் (Lite Choices) உறுதியற்ற நிலையும் தளம்பும் நிலையும் காணப்படுவதனால் தொழிலாளி வர்க்கம் என்பதைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாது என்று குறிப்பிடுதல்.

பின் நவீனத்துவவாதிகளின் மேற்கூறிய வாதங்களில் பல அடிப்படையான கருத்து வறுமை காணப்படுகிறது. சுரண்டுவோர், சுரண்டலுக்கு உள்ளாக்கப்படுவோர் என்ற தெளிவான பாகுபாடு காணப்படுதல் யதார்த்தமானது. இந் நிலையில் தெளிவாக இனங்காணக் கூடிய ஒரு தோற்றப்பாட்டினை "சுருக்கல் வாதம்" என்ற சொற்கோவையினால் வலுவிழக்கச் செய்து விடமுடியாது. கல்வி வர்க்கக் கோடுகளினுள்ளே அசைவுகளை ஏற்படுத்துமன்றி, வர்க்கங்களை மீறி ஒருவரை சமூக நிரலமைப்பின் சிகரத்துக்கு மேலுயர்த்திக் கொண்டு செல்லாது. உதாரணமாக ஜப்பானில் எழுத்தறிவு உச்ச நிலையில் இருந்தாலும் அது வர்க்கக் கட்டமைப்புக்களைச் சிதைக்காது மேலும் வலுவூட்டி வருவதாகவே காணப்படுகின்றது. வர்க்க எல்லைகளுக்கு உட்பட்ட நிலையிலேதான் அங்கு வாழ்க்கைத் தெரிவுகளிலும் தொழில் தெரிவுகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்தவண்ணமுள்ளன.




உதிரியாக கைவிடப்பட்டு நிராகரிப்புக்கு உள்ளானவர் மீது கவனத்தைத் திருப்பியுள்ள பின்நவீனத்துவம் சுரண்டல் மிக்க சமூக பொருளாதாரத் தளத்திலே தான் அவை நிகழ்கின்றன என்ற நடப்பியலைக் குறிப்பிடத் தவறிவிட்டது. கோளமாக்கலுக்கும் கல்விக்குமுள்ள தொடர்பு பால் நிலை (Gender Basis) யிலும் ஆராயத்தக்கது, பெண்களின் நிலையைப் பொறுத்தவரை தொழிற்சந்தையில் இருமைநிலை காணப்படுவதாக (The Dual Labour market thesis) ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். (Mike Col, (2000)) சமகாலநிலவரங்களைப் பொறுத்தவரை மொத்தத் தொழிற்சந்தையில் ஐம்பது சதவீதமானவர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் ஆண்கள் பெறும் உழைப்பு ஊதியத்தோடு ஒப்பிடும்பொழுது அவர்கள் 72.7 சதவீத உழைப்பு ஊதியத்தையே பெற்றுக் கொள்ளும் முரண்பாடான நிலை காணப்படுகின்றது. பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ள பெரும்பாலான தொழில்கள் போராடி சம்பளத்தை அதிகரிக்க முடியாத தொழில்களாகவும் ஆற்றல் மிக்க தொழிற்சங்கப் பலத்தைக் கொண்டிராத தொழில்களாகவும் காணப்படுகின்றன. இதற்கு உதாரணமாக இலங்கையின் முன்பள்ளி ஆசிரியர் தொழிலைக் குறிப்பிடலாம். இது பெண்களுக்குரிய பாரம்பரியமான குடும்ப வகிபங்குடன் (Traditional domestic Role) இணைந்தது. முற்று முழுதாகப் பெண்களால் மட்டுமே இலங்கையில் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் வேதனம் மிகவும் குறைந்த தொழிலாக இது விளங் குகின்றது.

வர்க்க நிலைப்பட்ட சுரண்டலுடன் பால் நிலைப்பட்ட சுரண்டலும் இணைந்து செல்வதைக் காண முடியும். பொருள்களை மீள் உற்பத்தி செய்வதிலே மேற்கொள்ளப்படும் சிக்கன நடவடிக்கைகள் (Cost Effectiveness) போன்று மனிதவளத்தை மீள் உற்பத்தி செய்யும் சிக்கன நடவடிக்கையில் பெண்களே ஈடுபடுத்தப்படுகின்றனர். அதேவேளை இல்லத்துக்கு வெளியில் குறைந்த வேதனத்துக்குத் தொழில் புரியும் நிலை சமாந்தரமான இரண்டு வகையான சுரண்டலுக்குப் பெண்களை உள்ளாக்கி விடுகின்றது.

கோளமயமாக்கலால் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் பெண்களே அதிக தாக்கத்துக்கு உள்ளாகின்றனர். வறிய பெண்கள் கல்விச் செயல் முறையில் இருந்து இலகுவாக வெளிவீசப்பட்டு விடுகின்றனர். உலகமயமாக்கல் விரிவுக்கு முற்பட்ட இலங்கையின் பாரம்பரியமான கல்வியில் நிலவுடைமைப் பொருளாதாரப் பண்புகளும், காலனித்துவப் பண்புகளும் கலந்த செயல்வடிவத்தைக் கொண்டிருந்தது.

உறைந்து இறுகிய ஒருதலைப்பட்சமான வார்ப்புச் சிந்தனைகளை வளர்த்தல், போட்டியால் முன்னேறலாம் என்ற நம்பிக்கையை தனியார் நிறுவனங்களில் சேர்ந்து மாதாந்த ஊதியம் பெறும் கவர்ச்சியை ஊட்டுதல். தாம் தொழிற்படும் நிறுவனங்கள் எதிர் மானிடப் பண்புகளைக் கொண்டிருந்தாலும் அவற்றுக்கு விசுவாசமாக இணங்கித் தொழிற்படுதல். சமூக நிரலமைப்பை ஏற்று இசைந்து செல்லல். மத்தியதர வகுப்பினருக்குரிய உளப்பாங்குகளைக் கட்டியெழுப்புதல். அநீதிகளை எடுத்துரைக்காது அடங்கிவாழ முனைதல். மௌனப் பண்பாட்டைப் பராமரித்தல். உன்னதமானது என்ற உளப்பாங்கைப் பராமரித்தல், ஒடுங்கிய சுய இலாபங்களை நோக்கிய ஊக்க முனைப்புடன் தொழிற்படுதல். ஆக்கச் சிந்தனைகளுக்கு வளமூட்டாது பொறி முறையாகச் சிந்திக்கும் செயல் முறைகளுக்கு வலிவூட்டுதல் முதலியவை காலனித்துவ நவகாலனித்துவ கல்வி முறைமையின் பண்புகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

மேற்படி விடையம் கோளமயமாக்கலும் இலங்கையின் கல்வியும் பேராசிரியர் சபா. ஜெயராசாவின் நூலில் இருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

# கல்வியின் உலகமயமாதலை அம்பலப்படுத்தும் நூல்

**பேராசியர் சபா ஜெயராசா: "கோளமயமாக்கலும் இலங்கையின் கல்வியும்" பேராசான் கார்த்திகேசன் நினைவுரை, நூல்பற்றிய மதிப்புரை இலங்கை முற்போக்கு கலை இலக்கியப் பேரவை கார்த்திகேசன் நினைவுக்குழு, கொழும்பு. ஐப்பசி 2006. ப. 35. ரூ. 40.00**

தமிழ்ப் புத்தஜீவிகளிடையும் தம்மைப் புத்திஜீவிகளாகக் காட் டிக் கொள்கிற உதிரிகளிடையும் இன்னமும் பின் நவீனத்து வம், உலகமயமாதல் என்பன பற்றிய குழப்பமான ஈடுபாடு தொடர்கிறது. அதற்கான காரணங்களுள் முக்கியமான ஒன்று, அவர்கள் எதையும் ஊன்றிப்படிப்பதில்லை. மற்றவர்களிடம் தங்களை அறிஞர்களாகக் காட்டிக்கொள்கிறதற்காக, விளங்காததை எல்லாம் விளங்கியது போல பாசாங்கு செய்வதில் அவர்கள் சமர்த்தர்கள். எளிய உண்மைகளைக் கூட மக்களிடம் சொல்வதில் அவர்கட்கிருந்து வந்த தயக்க த்தின் விளைவாக ஏகாதிபத்தியமும் அதன் எடுபிடிகளும் சொல்லி வந்த பொய்களை அம்பலப்படுத்துவதற்கு முற்போக் குச் சக்திகள் மேலுங்கடுமையாக உழைக்க வேண்டியுள்ளது.

இன்றைக்கும் உலகமயமாதலின் நன்மைகள் பற்றிப் பேசுகிற சில பேராசிரியர்கள் இருக்கிறார்கள். உலகமயமாதலின் விளைவுகளை நேரடியாகவே கண்டு அனுபவித்த லத்தின் அமெரிக்காவின் மக்கள் தமது ஆட்சியாளர்களை நிராகரித்து ஏகாதிபத்திய விரோத ஆட்சிகளை உருவாக்கத் துணிந்துள்ளனர். எனினும் நம்மிடையே இன்னமும் உலகமயமாதல் பற்றிய மயக்கங்கள் தொடருகின்றன.

உலகமயமாதல் என்பது முழு உலகையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தலைமையின் கீழான ஏகாதிபத்திய அணியின் அதிகாரத்தின் கீழ்க் கொண்டு வருவது தான். அது வெறு மனே பொருளாதார ஆதிக்கம் மட்டுமல்ல. அதன் வேலைத் திட்டம் ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்தை நிரந்தரமாக்கும் நோக்குடன் மூன்றாமுலக நாடுகளையும் சுரண்டப்படும் உலக மக்கள் அனைவரையும் எல்லா வழிகளிலும் ஏகாதிபத் தியத்திற்குக் கீழ்ப்படியக் கூடியவர்களாக்கும் இலக்கையும் உள்ளடக்குகிறது. பண்பாட்டுச் சீரழிவும் சமூகங்களின் சிதைவும் அதற்கு உடன்படானவை. எனவே அது மூன்றா முலக நாடுகளின் கல்வியை இலக்கு வைக்கிறது. இதுபற்றித் தமிழ்க் கல்வியியலாளர்கள் போதியளவுக்கு எழுதவில்லை. எனவே பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்திய பேராசான் மு.கார்த்திகேசன் நினைவுப் பேருரை மிகவும் வரவேற்கத்த க்க ஒரு பிரசுரமாக அமைகிறது.

உலகமயமாக்கல் (கோளமயமாக்கல்) எவ்வாறு கல்வியை ஒரு பண்டமாக்கிக் கல்வியின் நோக்கத்தை அறிவு என்ற திசைகளிலிருந்து திருப்பி வெறுமனே ஏகாதிபத்திய, பெரு முதலாளியத் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்கிலான திசையில் திருப்பப்படுகிறது. கல்வி தனது சமூகப் பரிமாணத்தை இழக்கிறது. அரசு கல்வியைத் தனது சமூகப் பொறுப்பாகக் கொள்ளாமல் தட்டிக்கழித்து அதை லாபநோக்கில் தொழில்சார் கல் வியை விற்பனை செய்கிற நிறுவனங்களின் கையில் ஒப்படைக்கிறது. இதனால் எவ்வாறு ஆசிரியர்களிடையும் மாணவ ர்களிடையும் கல்வி பற்றிய பார்வை விகாரமடைகிறது என்பது உட்பட்ட பல வேறு விடயங்களை சபா ஜெயராசா விவரித் துள்ளார்.

கல்வி என்பது சுரண்டும் வர்க்க ஆட்சி தொடர்வதற்கான ஒரு கருவியாகி வருவதை அவர் விளக்கியுள்ளதோடு ஆரோக் கியமான சமூகப்பார்வையுடைய கல்வியின் பரவலாக்கமே மக்களை விடுவிக்கும் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

இந்த நூலின் பின்னிணைப்பாக தோழர் கார்த்திகேசனின் கட்டுரைகள் இரண்டு தரப்பட்டுள்ளன. கல்வி பற்றிய பார்வை வர்க்க சமூகத்திலும் சோஷலிஸத்திலும் எப்படி வேறுபடுகிறது என்பதை அவை அழகாகப் படம் பிடித்துக் காட்டுகின்றன. இன்று உலகமயமாதலின் கீழ் கல்வியின் சீரழிவை விளங்கிக் கொள்ள அக்கட்டுரைகள் மிகவும் உதவும்.

சீனாவின் கல்வி முறையைப் பற்றி நூலாசிரியர் பாராட்டி எழுதியுள்ளவை பொதுப்படச் சீனாவின் பழைய சோஷலிஸ சமூகத்தின் அடிப்படையிலான தகவல்களுடன் பொருந்துமள வுக்கு இன்றைய சீனாவுக்கும் பொருந்துமா என்பது கவனத் துக்குரியது. இன்று சீனா இலவசக் கல்விக்கு ஆப்பு வைத்து ள்ளது. கல்வியின் தேவை பற்றிய பார்வை மாறியுள்ளது. 1987ல் தோற்றத்தில் சோஷலிஸப் பாங்கான கருத்துக்கள் வற்புறுத்தப்பட்டிருந்தாலும் சீனாவின் இன்றைய ஆட்சியாளர்கள் சீனாவை அதற்கு எதிரான திசையிலேயே நகர்த்துவது பற்றி அவர் கூடிய கவனஞ் செலுத்தியிருக்கலாம்.

பின் நவீனத்துவவாதிகள் எவ்வாறு ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைவதை மறித்து மக்களை உதிரிகளாக்கச் செயற்படுகின்றனர் என்பதை அவர் தெளிவாக எச்சரித்துள்ளார். மிஷேல் ஃபூக்கோ சுரண்டலுக்கான கருவியாக அறிவு அமைவதைப் பற்றிக் கூறியதை எடுத்துக் காட்டுகிற நூலாசிரியர் ஃபூக்கோவின் பின் நவீனத்துவத் தடுமாற்றங்களையும் சிறிது குறிப்பிட்டிருக்கலாம். இந்த நூலின் முக்கியமான ஒரு குறைபாடு அதன் மொழிநடை. ஆங்கில த்திற் சொல்ல நினைத்ததைத் தமிழ்ப்படுத்திச் சொல்லுவது போன்ற எண்ணம் பல இடங்களில் ஏற்படுகிறது. பல ஆங்கிலப் பதங்களைக் கலைச் சொற்களாகக் கருதித் தமிழில் விளங்கிக் கொள்ளக் கடினமான மாற்றுச் சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்தியிருப்பாராயின் நூல் மேலும் பலரை எட்டக்கூடியதாயிருக்கும். இந் நூல் சற்று எளிமைப் படுத்தப்பட்ட மொழிநடையில் உள்ளடக்கத்திற்கு எவ்வித ஊறுமில்லாமல் திருத்தி எழுதப்பட்டு மேலும் பரவலான வாசிப்பிற்கு உட்படுத்தப்படுமாயின் இன்றைய சூழலில் தமிழருக்கு மிகவும் நன்மையாயிருக்கும். அத்துடன் இதன் ஆங்கில மொழி வடிவம் பயன் தருவதாக அமையும்.

–சிவா–

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# சாதிகளின் தாய் நாட்டிலிருந்து ஒரு சம்பவம்

பாண்ட் சிங்.
பஞ்சாப் மாநிலத்தின் தலித்.
விவசாய தொழிலாளி.
வாழ்க்கை முறையில் கம்யூனிஸ்ட்.

மேல்சாதி ஆதிக்க திமிர்
அவர் மகளை
பாலியல் வன்முறைக்கு ஆளாக்குகிறது.
தாழ்த்தப்பட்ட சமூகத்தின் தலைவிதி என
தலையில் கைவைத்துக் கொண்டு
உட்கார்ந்து விடுவார் என எதிர்பார்த்தார்கள்.

பாண்ட் சிங் நீதிமன்றத்துக்கு போனார்.
போராடினார். எம். எல். கட்சியும் கூட நின்றது,
குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டார்கள்.

மேல்சாதி ஆதிக்கம் பார்த்துக்
கொண்டிருக்குமா?
இரும்புக் குழாய்க் கொண்டு
பாண்ட் சிங்கின் கைகளும் கால்களும்
கூழாய் போகும்வரை தாக்கினார்கள்.
அரசு மருத்துவமனைக்கும் சாதி உண்டு.
உடனடி சிகிச்சை மறுக்கப்பட்டது.
மக்கள் போராட்டத்துக்குப் பிறகு
சிகிச்சை துவங்கியது.
விளைவு, கைகளையும், கால்களையும்
துண்டித்து எடுத்தார்கள்.

இப்போது பாண்டசிங்
வாழ்வா, சாவா, கேள்வியை எதிர்கொள்கிறார்.
வாழ வேண்டுமென்றால்
செயற்கை கை, கால்கள் பொருத்த வேண்டும்.

அந்த போராட்ட சின்னத்தின்
மேல்சாதி ஆதிக்க எதிர்ப்பு சின்னத்தின்
நிலவுடைமை ஆதிக்க எதிர்ப்பு சின்னத்தின்
ஒடுக்கப்படுகிற, சுரண்டப்படுகிற
விவசாய தொழிலாளர்களின் எதிர்ப்பு குரலின்
உயிரைக் காப்பது, வலுப்படுத்துவது
நமது கடமை.

அதில் முதல் நடவடிக்கை கொஞ்சம் நிதி
ரூ. 5ல் இருந்து எவ்வளவு வேண்டுமானாலும்...
நாடெங்கும் உள்ள மக்கள்
ஜனநாயகம் வேண்டுபவர்கள்
முற்போக்கு சிந்தனையாளர்கள்
போராளிகள் பங்களிக்கிறார்கள்.


நீங்களும் உங்கள் பங்கை
உறுதி செய்யுங்கள்.
மேல்சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக
நிலவுடைமை ஆதிக்கத்திற்கு எதிராக
விவசாய தொழிலாளர்களின்
உரிமைக்காக குரல் எழுப்புங்கள்.

**"அவர்களால் என் கை கால்களைத் தான் எடுக்க முடிந்தது.
என் குரல் இருக்கிறது. அவர்களுக்கு எதிராக நான் பாடுவேன்"**

**பாண்ட் சிங்**

நன்றி: மா.லெ.தீப்பொறி
7 நவம்பர் 2006 சென்னை.

# அஜித் சமரநாயக்க- மனிதநேயமிக்க ஒரு பத்திரிகைத்துறைப் பண்பாளன்



இலங்கையின் ஆங்கிலப் பத்திரிகையாளர்களில் பல திறப்புலமைவாய்ந்த- முழுநிறைவான எழுத்தாளர் என்று பாராட்டப்பட்ட அஜித் சமரநாயக்கவின் மரணம் பத்திரிகைத் துறைக்கு மாத்திரமல்ல மனிதநேயத்தை மதிக்கும் சகலருக்குமே ஒரு பேரிழப்பாகும்.

கடந்த வருடம் நவம்பர் இறுதிப் பகுதியில் திடீர் சுகவீனத்திற்குப் பின்னர் அஜித் சமரநாயக்க காலமான செய்தி எம்மெல்லோரையும் பேரதிர்ச்சிக்கும் பெரு வேதனைக்கும் உள்ளாக்கியது. அந்த மரணம் சுயநலத் தேவைகளுக்காக அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு துதிபாடுவதற்கு பேனாவைப் பயன்படுத்தாத- மனச்சாட்சியின் ஆணைப்படி எழுதிய உன்னதமான ஒரு பத்திரிகையாளனை எம் மத்தியிலிருந்து அபகரித்துச் சென்றுவிட்டது. அஜித் சமரநாயக்க மரணமடையும் போது அவருக்கு 52 வயது. ஒப்பீட்டளவில் அவர் இளமைக்காலத்திலேயே எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். என்றாலும் பத்திரிகைத்துறையில் ஆரோக்கியமான போக்குகளின் விருத்திக்கு அவர் ஆற்றிய சேவையும் வழங்கிய பங்களிப்பும் அளப்பரியவை, என்றென்றைக்குமே மறக்கமுடியாதவை.

கண்டி திருத்துவக் கல்லூரியின் மாணவரான சமரநாயக்க மிகவும் இளவயதில் 1975 ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் நிறுவனத்தில் ஒரு நிருபராக தனது பத்திரிகைத்துறை வாழ்வை ஆரம்பித்தார். தனது ஆர்வம், திறமை, அர்ப்பணிப்புச் சிந்தை, மனித குல மேம்பாட்டின் மீதான பற்றுறுதி ஆகியவை காரணமாக மிகவும் குறுகியதொரு காலத்துக்குள்ளாகவே பிரபல்யமான ஒரு ஆங்கிலப் பத்திரிகையாளராக மிளிர அவரால் முடிந்தது. சமரநாயக்காவின் ஆற்றலும் புலமையும் பல மூத்த பத்திரிகையாளர்களை வியக்கவைத்தன. இலங்கையின் தலை சிறந்த பாராளுமன்றச் செய்தியாளார்களில் ஒருவராக சமரநாயக்க திகழ்ந்தார், பாராளுமன்ற அமர்வுகள் பற்றி கூரறிவுடன் கூடிய சொல் நயத்தையும் நகைச்சுவையுணர்வையும் கலந்து சமரநாயக்க செய்த வர்ணனைகளுக்கு வாசகர்கள் ஏராளம், அரசியல்வாதிகள் அவரின் எழுத்துக்கள் மீது பயம் நிறைந்த ஒரு மரியாதை வைத்திருந்தனர். பாராளுமன்றத்தில் தாங்கள் நிகழ்த்திய உரைகள் தொடர்பில் மறுநாள் சமரநாயக்க ஆங்கிலப் பத்திரிகையில் எத்தகைய விமர்சனத்தை எழுதியிருக்கிறார் என்பதை அறிவதில் சிரேஷ்ட பாராளுமன்றவாதிகள் கூட அச்சம் கொண்ட அக்கறையுடன் நோக்கிக் கொண்டிருந்தனர்.

சிலோன் ஒப்சேவர் பத்திரிகையில் பணியாற்றிய சமரநாயக்க, காலஞ்சென்ற உபாலி விஜேவர்த்தன, ஆரம்பித்த பத்திரிகை நிறுவனத்தில் 1981 ஆம் ஆண்டு இணைந்து நாளடைவில் 'த ஜலண்ட' பத்திரிகையின் ஞாயிறு இதழின் ஆசிரியரானார். 1994 ஆம் ஆண்டு மீண்டும் லேக்ஹவுஸ் நிறுவனத்துக்குத் திரும்பிய சமரநாயக்க, அந்நிறுவனத்தின் சகல ஆங்கிலப் பிரசுரங்களினதும் பிரதம பொறுப்பாசிரியராக உயர்ந்தார். இறுதியாக லேக்ஹவுஸ் நிறுவனம் ஆரம்பித்த 'பிறைடே' பத்திரிகையின் ஆசிரியராக சமரநாயக்க பதவி வகித்தார். தனது பத்திரிகைத்துறை வாழ்வில் அவர் எழுதாத துறைகளே இல்லை. அரசியல் கலை இலக்கியம், சினிமா, அரசியல் ஆய்வுகள், ஆசிரிய தலையங்கங்கள் என்று அவர் கைவரிசையைக் காட்டிய அம்சங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். மிகவும் சிறந்ததொரு அரசியல் அவதானியான சமரநாயக்க, சமகால அரசியல் நிக ழ்வுப் போக்குகளைப் பற்றி எழுதியபோது சரித்திரத்தின் பின்புலத்தில் சிந்தனைகளை வரவழைக்கும் உன்னிப்பான ஞாபகசக்தியைக் கொண்டிருந்தார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் சமரநாயக்கவை ஒரு சிந்தனாவாதி என்றே கூறலாம். அவரது தந்தையார் உறுதியான ஒரு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவாளராக இருந்த போதிலும், இளவயதிலிருந்தே சமரநாயக்க மாக்சிசச் சிந்தனைகளினால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். குறிப்பிட்ட எந்தவொரு கட்சியுடனும் அவருக்கு அரசியல் பிணைப்பு இருந்ததில்லையென்றாலும் இறுதிவரை இடதுசாரிச் சிந்தனைகளின் செல்வாக்கிலிருந்து அவர்விடுபடவில்லை. சகல வற்றுக்கும் மேலாக சமரநாயக்க சிறந்த ஒரு மனிதநேயவாதி. சக பத்திரிகையாளர்களினால் பெரிதும் மதிக்கப்பட்டவர். தனது அருமையை அறியாதவர் என்று குற்றஞ்சாட்டப்படக் கூடிய அளவுக்கு தற்பெருமையோ படாடோபமோ இல்லாதவர் சமரநாயக்க.

பழைய அரசியல்வாதிகள் குறிப்பாக இடதுசாரிகள் இறந்துவிட்டால் அடுத்த இதழிலேயே அவர்களைப் பற்றி சமரநாயக்க அஞ்சலி மதிப்புரை எழுதிவிடுவார். பத்திரிகைத்துறைச் சகபாடிகளைப் பொறுத்துதவரையிலும் கூட அவர்களில் எவராவது மரணமடைந்துவிட்டால் முதல் அஞ்சலி மதிப்புரை சமரநாயக்கவினுடையதாகவே இருக்கும். காலஞ்சென்ற றெஜி சிறிவர்தன ஒருதடவை சமரநாயக்காவை 'இறந்தவர்கள் பற்றிய மதிப்புரை எழுதுபவர்களில் இளவரசர்' என்று வர்ணித்திருந்தார். இன்று பெரும்பாலான பத்திரிகையாளர்கள் மனச்சாட்சியைத் துறந்தெறிந்து விட்டுத்தான் பேனாவைப் பிடிக்கிறார்கள். பதவிக்காகவும் பணத்திற்காகவும் சொகுசுக்காகவும் ஆலாய்ப்பறக்கிறார்கள். வெளிநாட்டுப் பயணங்களுக்கு

தொடர்ச்சி 14 ம் பக்கம்

-பாலன்-

## மலையக அரசியலை

9ம் பக்க தொடர்ச்சி.....

எதிர் கால வர்க்க சக்திகளின் ஐக்கியத்திற்கும் வெகுஜனப் போராட்ட அரசியலுக்கும் ஒரு முன்னுதாரணமாகி விடுமோ என்ற அச்சத்தை யோதிலிங்கத்தின் கட்டுரை வெளிப்படுத்தி நிற்கின்றது,

மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்றும் அவர்களது தேசிய அபிலாஷைகள் இன வர்க்க தனித்துவங்களுடன் கூடிய மலையகத்தின் பிரத்தியேக புவியியல் அமைவிடச் சூழலுக்கு ஏற்றவாறு முன்னெடுக்கப்படல் வேண்டும் என்பதை மாக்சிச லெனினிசக் கட் சியான புதிய- ஜனநாயக கட்சி கொள்கை வேலைத்தி ட்டங்களின் மூலம் முன்பிருந்தே முன்னெடுத்து வருகின்றது, வர்க்கப் போராட்ட அடிப்படையில் முன்னெடு க்கப்பட்டு வரும் வெகுஜனப் அரசியல் போராட்ட மார்க்கத்தை அண்மைய தொழிலாளர் போராட்டமானது உறுதிப்படுத்திக் கொண்டது. அதேநேரம் இனவாத அரசியலை தொழிலாளர்கள் நிராகரித்தே வேலை நிறுத்தத்தில் போராடினர். மலையக மக்களுக்கு இன அரசியல் முகமூடியையும் ஆளும் பேரினவாத ஆட்சிகளுக்கு உண்மையான தமது உயர் வர்க்க நிலைப்பாட்டையும் காட்டி நிற்கும் தொண்டைமான்- சந்திரசேகரன் தலைமைகளை நிராகரித்தே தோட்டத் தொழிலா ளர்கள் வர்க்கத் துணிவுடனும் வீரத்துடனும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனவே தோட்டத்தொழிலாளர்களின் மலையக மக்களின் இன- வர்க்க விடுதலைக்கும் விமோசனத்திற்கும் வர்க்கப் போராட்டத்தை சாராம்சமாகக் கொண்ட வெகுஜன அரசியல் போராட்டப் பாதை தான் ஒரே வழி என்பதையே மலையக யாதார்த்த சமூகச் சூழல் வற்புறுத்தி நிற்கின்றது. ஆனால் யோதிலிங்கம் யதார்த்தத்தை திசை திருப்பி மலையகத்தின் அழிவுகரமான ஒரு அரசியல் பாதைக்கு ஆலோசனை வழங்குகிறார். அவர் அவ்வாறு ஆலோசனை வழங்குவது புதிதல்ல. ஏனெனில் முன்பு ஈ. பி. ஆர். எல். எவ் என்ற தமிழ்த் தேசிய இளைஞர் இயக்கத்தில் இருந்து வடக்கு கிழக்கு இளைஞர்களின் அழிவுக்கு குறுந்தேசிய இன அரசியல் பாதை காட்டியவர்களில் அவரும் ஒருவர். பின்பு கொழும்பில் இருந்து கொண்டு குறுந் தமிழ்க் தேசியத்திற்கு "தத்துவார்த்த விளக்கம்" அளித்து மனோகணேசனின் யூ. என்.பி- தமிழ் இன ஏமாற்று அரசியலுக்கு ஆலோசனை வழங்கி வருபவர். அத்துடன் ஏகாதிபத்திய உலகமயமாதலுக்கு சேவை செய்து வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு எழுதியும் ஆலோசனை வழங்கியும் பணம்பண்ணி வருபவர் இந்த யோதிலிங்கம்.

ஆதலால் மலையகத்திற்கு ஒரு "அரசியல் ஆய்வுமையம்" வேண்டும் எனக் கேட்பதும் அதில் மலையகப் புத்திஜீவிகளை பங்களிப்பு வழங்குமாறு கோருவதும் இரட்டை நோக்கத்தை நிறைவேற்றவேயாகும். ஒன்று வடக்கு கிழக்கில் இன அரசியலை அழிவுகரமான தமிழ்க் குறுந்தேசிய அரசியலாக்கி வைத்த அதே கைங்கரியத்தை மலையகத்திலும் நடைமுறைப்படுத்த முற்படுதல். இரண்டாவது அதற்குரிய அரச சார்பாற்ற நிறுவனத்தை "ஆய்வுமையம்" என்ற பெயரில் உருவாக்கி அந்நிய சக்திகளின் மூலம் பணம் பண்ணலாம். இவ்விரண்டு விடயங்களையும் முன்னெடுப்பதற்கு மலையகத்தில் சிலரை பொறுக்கி எடுக்கவே யோதிலிங்கம் மேற்படி தினக்குரல் கட்டுரையின் மூலம் கயிறு எறிந்து நிற்கிறார். ஆனால் அவரது கடந்த கால சமகால செயற்பாடுகளின் நச்சுத்தன சுயரூபத்தை தெரிந்தவர்கள் நிறையவே இருக்கிறார்கள். அதனால் அவர் விரும்புவது போன்று மலையகத்தில் இனவாத குறும் தேசிய வாத அரசியலை முன்னெடுக்க முடியாது. அதற்கு வர்க்கப் போராட்ட அரசியலில் அணிதிரண்டு வரும் புத்திஜீவிகளோ தொழிலாளர்களோ இளந்தலை முறையினரோ இடமளிக்கமாட்டார்கள்.

சி.அ. யோதிலிங்கம் என்பவருக்கு மலையக மக்கள் சார்பாகத் தெரியப்படுத்துவது தயவு செய்து உங்களுடைய அழிவுகரமான குறுந்தேசியவாத அரசியலையும் பணம் சம்பாதிக்கும் என்.ஜீ.ஓ வழிமுறையையும் மலையகத்திற்கு நச்சுக் கருத்துக்களாகத் திணிக்க வேண்டாம் என்பதேயாகும்.

**மாரி. தனபாலன்** -மஸ்கெலியா-

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# பெண்களின் நடனமாடும் உரிமை
## பெண்நிலைவாதமா? பெண்விடுதலையா?
### (FEMINISM) (WOMEN LIBERATION)

என்னுடைய அம்மா ஒரு பழைமைவாதியென்பதால் தான் கற்ற நாட்டியக் கலையை காட்சிப்படுத்த அனுமதிக்கவில்லை. ஆனால் என் கணவன் நாட்டிய நிகழ்ச்சிகளை செய்ய தடைவிதிக்கவில்லை. காரணம் அவர் பெண்நிலைவாதி. அதனால் எனது திருமணத்திற்குப் பிறகு தான் எனது நாட்டிய நிகழ்ச்சிகளை தொழில்ரீதியாகச் செய்ய முடிகிறது என்று ஒரு பெண் நாட்டிய கலைஞர் தெரிவித்திருந் தார்.

அவரின் கூற்றின்படி அவரின் கணவர் ஒரு பெண்நிலைவாதியாக இருக்கலாம். பெண்களின் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்துவதன் நோக்கங்களிலிருந்து அதன் முற்போக்கான தன்மை பற்றி விளங்கிக்கொள்ள முடியும். நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது என்ற தடைக்கு எதிராக நடத்துவது என்ற நோக்கத்தை கொண்டிருந்தால் அம் மீறல் முற்போக்கானதாகும்.

பெண்களின் நடனக்காட்சிகள் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின்படி சந்தையில் நன்றாக விலைபோகும் என்ற எதிர்பார்ப்பில் நடத்தப்படுமாக இருந்தால் அதில் சுரண்டலும் ஒடுக்கலும் அடிப்படையாக இருப்பதை அவதானிக்க முடியும்.

பெண்கள் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தக்கூடாது என்பது நிலப்பிரபுத்துவ கண்ணோட்டம். இது மிகவும் பிற்போக்குத்தனமான கண்ணோட்டமுமாகும். நடனங்களை நடத்தலாம் என்ற முதலாளித்துவ பணம் பண்ணும் கண்ணோட்டமும் முற்போக்கானதல்ல. முதலாளித்துவ களியாட்டங்களில் நட்சத்திரஹகாட்டல்களில் நடனமாடும் பெண்களின் கணவன்மாரோ தகப்பன்மாரோ சகோதரர்களோ அப் பெண்கள் அங்கு நடனமாடுவதை ஏற்கிறார்கள் என்பதற்காக அவர்கள் முற்போக்கு வாதிகளாவதில்லை. அவர்கள் பெண்நிலைவாதி களாக இருக்கலாம்.

ஆணாதிக்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒரு நிலைப்பாடாக பெண்நிலைவாதம் இருக்கலாம். பெண்கள் செய்யக்கூடாது என்று பொதுவாக நிராகரிக்கப்படும் அடக்குமுறை ஆதிக்கம் சுரண்டல் போன்றவற்றை பெண்கள் செய்வதற்கு சுதந்திரம் வேண்டுமென்பது அடிப்படையில் பெண்விடுதலை அல்ல. பெண்விடுதலை என்பது ஆண்கள் பெண்களை சுரண்டுவது ஆதிக்கம் செய்வது ஒடுக்குவது போன்றவற்றை மட்டுமன்றி ஆணாதிக்க கொள்கையிலிருந்தும் நடைமுறையிலிருந்தும் பெண்களுக்கு விடுதலை வேண்டுமென்பதாகும்.

பெண்நிலைவாதம் என்பது ஆணாதிக்கத்திற்கு எதிர்ப்பை தெரிவிக்கும் கொள்கைகளையும் மீறல் நடவடிக்கைகளையும் மட்டுமே கொண்டவையாக தெரிகிறது. அந்த அடிப்படையில் பெண்களின் நடன நிகழ்ச்சிகளை நடத்துவது என்பது நடத்தக்கூடாது என்பதற்கான எதிர்ப்பு நடவடிக்கையாக இருக்கலாம். அந்த நடவடிக்கை பணம் பண்ணும் நோக்கத்தை மட்டும் கொண்டிருக்கும்போது உலகமயமாதலின் கீழான கலையை சந்தைப்படுத்தும் நடவடிக்கையாக இருக்கும் போது அது முற்போக்கானதாகவோ பெண்விடுதலையாகவோ கொள்ளமுடியாது.

அதேவேளைமாக்சிய பெண் நிலைவாதம் என்ற பதமும் பிரயோகிக்கப்படுவது மேலும் குழப்பத் தையே ஏற்படுத்துகிறது. மாக்சியம் பெண்விடுதலையையும் உள்ளடக்கிய விரிவான தத்துவமா கும். அது பொருளாதார அரசியல் சமூகப் பண்பாட்டு விடுதலையை அடிப்படையாகக் கொண்டது.

எதிர்ப்பு நிலைப்பாடான பெண்ணிலைவாதத்திற்கும், அடிப்படை மாற்றத்தை வலியுறுத்தப் பெண் விடுதலைக்கும் வேறுபாடிருக்கிறது. பெண்நிலைவாதத்தை விட பெண் விடுதலை விரிவானதும் முற் போக்கானதுமாகும். பெண்ணிலைவாதம் எல்லா சந்தர்ப்பங்களிலும் முற்போக்கானதாக இருப்பதில்லை. ஆண்களுக்கு இருக்கின்ற பிற்போக்கான விடயங்களும் பெண்களுக்குப் வேண்டும் என்பதை வற்புறுத்தி அதையே ஆண் பெண் சமத்துவம் என்ற நிலைப்பாடாக்கிக் கொண்டதே பெண் நிலைவாதம்.

பெண்கள் நாட்டியமாடுவதும் நாட்டியத்தை அரங்கேற்றுவதும் ஆண்களுக்குரிய உரிமைபோன்று பெண்ணுக்குள்ள உரிமையுமாகும். எதற்காக நாட்டியம் கற்கப்படுகிறது. எதற்காக அரங்கேற்றப்படுகிறது என்பதை பொறுத்தே அது பெண் நிலைவாதமா, பெண் விடுதலையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். நாட்டியத்தை மரபு வழியில் மீள்நடுகை செய்வதும் அதற்கான உரிமை கோருவதும் வெறும் பெண்ணியவாதக் கண்ணோட்டமாகும். ஆனால் நாட்டியத்தை மக்கள் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதற்கும். சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வு அறிவூட்டல் செயற்பாட்டிற்கும் பயன்படுத்துவது பெண் விடுதலைக் கண்ணோட்டம் சார்ந்த விடயமாகும்.

பெண்களின் நாட்டியமும் அரங்கேற்றமும் நிலப்பிரபுத்துவ பிடியிலிருந்தும் ஆணாதிக்கப் பிடியிலிருந்தும் விடுதலையடைய வேண்டியது மட்டுமல்ல, முதலாளித்துவம் ஏகாதிபத்திய உலகமயமாதலினுள் மூழ்குவதிலிருந்தும் விடுதலையடைய வேண்டும். அதற்கான வழிகளில் சிந்திப்பதும் செயலாற்றுவதும் பெண்விடுதலையின் சாராம்சமாகும்.

-நிவர்த்தினி-

தோழர் நா.சண்முகதாசனின் 14வது ஆண்டு நினைவாக



1963ம் ஆண்டில் 21கோரிக்கைகளுக்காக காலிமுகத்திடலில் இடம்பெற்ற கூட்டத்தில் தோழர் சண்

அஜித் சமரநாயக்க
13 பக்க தொடர்ச்சி

வாய்ப்புக்கிடைக்காதா என்று கேட்டுத்திரிகிறார்கள். ஆனால் அஜித் சமரநாயக்க இத்தகைய பிற்போக்குத்தனமான- சுயநல நோக்குடனான எந்தவொரு குணாதிசயமுமே இல்லாதவராக இறுதிவரை வாழ்ந்தார். பத்திரிகையாளர் சமூகத்தைப் பொறுத்தவரை சமரநாயக்க ஒரு கலங்கரை விளக்கம், பத்திரிகைத்துறைசார்ந்தவர்களுக்கு இருக்கவேண்டிய சமூகத்தின் பொதுவான நலன்கள் மீதான அக்கறை இன்று ஊடகத்துறையில் பணிபுரிபவர்களில் அநேகரிடம் காண முடிவதில்லை. ஆனால், சமரநாயக்க இவர்கள் சகலரையும் விட வேறுபட்ட ஒரு ‘புனிதராகவே' தனது பத்திரிகைத்துறை வாழ்வில் மிளிர்ந்தார். இனவாதச் சிந்தனை என்று வர்ணிக்கப்படக் கூடிய எந்தவொரு சம்பவத்தையும் தனது எழுத்துக்களில் சமரநாயக்க ஒரு போதும் கையாண்டதில்லை. அரசியல் விமரிசனங்களை மலினதனமான சிந்தனைகளின் வழியில் எழுதுவதென்பது அஜித் சமரநாயக்கவுக்கு அறவே பிடிக்காத விடயம். தனது எழுத்துக்கள் சமூகத்துக்கு நன்மை பயப்பனவாக இருக்க வேண்டுமென்பதில் மிகவும் உன்னிப்பான அக்கறையுடன் செயற்பட்டவர். அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகை நிறுவனத்தில் பணியாற்றிய போதிலும் கூட அவர் நம்பிக்கை கொண்டிருந்த மனிதப் பண்பு விழுமியங்களில் இருந்து விலகிச் செயற்பட்டதில்லை. உண்மையில் அஜித் சமரநாயக்க ஒரு பண்பான மனித நேயம் மிக்க பத்திரிகையாளன்.

சாதாமின் எழுச்சிக்கு .........
15ம் பக்க தொடர்ச்சி ..

மீதான வெறுப்பைக் கூட ஓரமாக வைத்து சதாமின் ஆட்சிக்கு ஆதரவாக மக்கள் திரளக்கூடிய சூழ்நிலை உருவாகியிருந்தது.

ஈராக் மீளவும் வலுப்பெறுவது அமெரிக்காவின் மத்திய கிழக்கு எண்ணெய் உற்பத்தி மீதான ஆதிக்கத்திற்குப் பாதகமானது என்பதாலும் அமெரிக்காவின் ஏவல்நாயாக அரபு மக்களை மிரட்டியும் பலஸ்தீன மக்களைத் துன்புறுத்தியும் வந்த இஸ்ரேலின் அதிகாரத்திற்கு ஆப்பு வைக்கும் என்பதாலும் பொதுப்பட அமெரிக்கா திட்டமிட்ட மேற்காசிய மேலாதிக்கத்திற்குத் தடையாயிருக்கும் என்பதாலேயே ஈராக் மீது இரண்டாவது போர் தொடுக்கப்பட்டது. அதற்கான காரணங்களாகக் கூறப்பட்ட பேரழிவு ஆயுதங்கள் பற்றிய கதைகளெல்லாம் முழுமையான பொய்கள் என்பது எல்லாருக்கும் தெரியவந்த நிலையில் தொடுக்கப்பட்ட போர் பற்றி அமெரிக்காவும் பிரித்தானியாவும் தமது மக்களுக்குப் பெரிய பொய்களைச் சொல்லின. போருக்கான காரணம் மட்டுமில்லாமல் போரின் நோக்கம் பற்றியும் போர் எப்போது முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பது பற்றியும் பெரும்பொய்கள் சொல்லப்பட்டன.

ஈராக்கிலிருந்து படைகளை விரைவில் விலக்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை. சதாமின் ஆட்சிக் கவிழ்ப்பை விட முக்கியமாக ஈராக்கின் எண்ணெய் மீதான பூரண ஆதிக்கமே நோக்கமாக இருந்ததனால் அமெரிக்காவுக்கு விசுவாசமான ஒரு ஆட்சியை ஈராக்கில் நிறுவும்வரை நேரடியான அமெரிக்க ராணுவக் குறுக்கீடு தொடர்ந்திருக்கும் என்பதில் அமெரிக்க ஆட்சி பீடம் தெளிவாகவே இருந்தது. வியந்நாம் முடிய லெபனான் அனுபவங்களின் பின்பு அமெரிக்கப் படையினரது உயிரிழப்புக் கள் மிகுதியாயிருக்கும் என்பதும் அவர்கள் அறியாததல்ல. எனினும் அவையெல்லாம் அமெரிக்க மக்களிடமிருந்து மறைக்கப்பட்டன.

சதாமின் முறைகேடான வழக்கு விசாரணையும் அவசர அவசரமான தூக்குத் தண்டனையும் அமெரிக்கா தனது தோல்விகளை மறைக்க எடுத்த நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை. சதாமின் மரண தண்டனை ஈராக்கில் ஷியா- சுன்னி முஸ்லீம் பகைமைக்கு மேலும் உரமூட்டுவதால் எந்த நிலையிலும் மறுபடியும் பலமான ஒரு ஈராக் உருவாகாது என்பதும் அமெரிக்க ஆட்சியாளர்களின் கணிப்பாகும். எனினும் சதாம் ஹுஸேன் குர்திய மக்களைக் கொன்றது பற்றிய விசாரணையை நடத்தாமலே சதாம் தூக்கிலிடப்பட்டது வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது. அந்த விசாரணை நீதிமன்றத்திற்கு வந்திருந்தால் சதாமின் மீதான பல்வேறு குற்றச்சாட்டுக்களில் அமெரிக்காவின் பங்களிப்புப் பற்றிய விவரங்களையும் தூழாவ வேண்டிய ஒரு தேவையை ஏற்படுத்தியிருக்கும். எனவே தான் சதாமுக்கு அமெரிக்க ஆதரவு விலக்கப்பட்ட காலத்தில் நடந்தவற்றை மட்டும் வைத்து ஒரு நீதிமன்ற நாடகம் ஆடப்பட்டு சதாம் தூக்கிலிடப்பட்டார்.

சிலியின் ∴பாஸிச சர்வாதிகாரியான பினோஷேயைத் தண்டனையிலிருந்து காக்கப் பலவேறு முயற்சிகளையும் மேற்கொண்ட அமெரிக்கா அதற்கு எதிர்மாறான விதமாகவே ஈராக்கில் நடந்ததுடன் விரைவாகவே சதாமைத் தண்டிக்குமாறு ஈராக்கின் ஆட்சியார்களை வற்புறுத்தியது. சதாமின் தூக்குத்தண்டனையும் அது நிறைவேற்றப்பட்ட விதமும் உலகநாடுகளில் கடும் எதிர்ப்பை ஏற்படுத்தியதன் விளைவாக சதாமைத் தூக்கிலிட்டதற்காக ஈராக்கிய ஆட்சியாளர்களின் நீதி முறையை மெச்சிய ஜோஜ் புஷ் இப்போது ஈராக்கிய ஆட்சியாளர்களைக் கடிந்து பேசியிருக்கிறார்.

சதாமின் தூக்குத்தண்டனை மூலம் ஈராக் மேலுங் குழப்பத்தில் மூழ்கும் சாத்தியப்பாடுகள் அதிகம். எனினும் அமெரிக்கா மேலும் பெரும் இழப்புக்குடனும் அவமானத்துடனும் ஈராக்கிலிருந்து வெளியேறும் நாளைச் சதாமின் தூக்குமேடை மேலும் அண்மைக்குக் கொண்டுவந்துள்ளது.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகேரன்

## மனிதாபிமான உதவி

மனிதாபிமான உதவிகளை செய்வது, உலகை இரட்சிப்பது என்றெல்லாம் உலக மக்களின் நல்வாழ்க்கைக்காக உழைத்துக் கொண்டிருக்கின்ற அமெரிக்கா பனாமாவில் மனிதாபிமான உதவிகளுக்காக 1,400 அமெரிக்கப் படைவீரர்களை நவீன இரக ஆயுதங்களுடன் அனுப்பி வைத்துள்ளது. எனக்குத் தெரிந்தவரை உணவுப் பொருட்கள், மருத்துவ உதவிகள், தொழில் நுட்ப உதவிகள் என்றுதான் மனிதாபிமான உதவிகள் நடைபெற்றிருக்கின்றன. இப்போது ஆயுதந்தாங்கிய படைவீரர்களும் மனிதாபிமான உதவி என்ற வகைப்படுத்தலுக்குள் வருகிறார்கள் போலும்.

கவனம்: வாகரையிலும் யாழ்ப்பாணத்திலும் மனிதாபிமான உதவிகள் வந்திறங்கி தமிழ் மக்களை இரட்சிக்கவும் கூடும்.

## இயேசு ஒரு பயங்கரவாதி

"பெத்தலகேமில் பிறந்தவர்கள் எல்லோரும் பயங்கரவாதிகள். பயங்கரவாதம் அவர்களின் பிறவிக்குணம்." என்று விளம்புகிறார் இஸ்ரேலிய பிரதமர். இதனால் இயேசுவால் சுதந்திரமாக நடமாட முடியவில்லை, இயேசுவால் தொழிலுக்குப் போக முடியவில்லை. இயேசுவிற்கு அவரது உயிர் நிச்சயமில்லை. ஏனெனில் இஸ்ரேலிய நீதிமன்றம் பெத்தலகேம் உள்ளிட்ட பாலஸ்தீனத்தில் உள்ளவர்களை கொல்வதை சட்டபூர்வமாக்கியுள்ளது. இயேசு செய்த ஒரே குற்றம் பெத்தலகேமில் பிறந்தது தான்.

ஆக இஸ்ரேலியக் கண்களுக்கு இயேசு ஒரு பயங்கரவாதி தான், பெத்தலகேமில் பிறந்ததனால்...

## நல்லதொரு ஜனநாயக தேசம்

ஜோர்ஜ் புஷ்சும் டொனி பிளேயரும் சான்றிதழ் தயாரித்து கையொப்பம் வைத்து ஒரு விழா எடுத்து கௌரவிக்காதது ஒன்றுதான் குறை. மற்றப்படி புஷ்சினுடையதும் பிளேயருடையதும் உதாரணத்துக்கும் பாராட்டுக்குரிய நல்லதொரு ஜனநாயக தேசம் சவுதி அரேபியா. சவுதி அரேபியாவில் பெண்களுக்கு வாக்குரிமை கிடையாது, குற்றம் செய்தவர்களை கல்லால் அடித்துக் கொல்வது சர்வசாதாரணம், களவெடுத்தவர்களுக்கு கை, கால் எடுக்கப்படுவதெல்லாம் வழமையான நடைமுறை. இங்கே இப்படி இருக்க 2.2 மில்லியன் பேர் அமெரிக்கச் சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் 7 மில்லியன் இளைஞர்கள் (32 பேருக்கு ஒருவர் என்ற விகிதத்தில்) தண்டிக்கப்படுகிறார்கள். சர்வதேச தரப்படுத்தலில் மிகக் கொடூரமாக தண்டனைகளை அள்ளி வழங்கும் நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் இருக்கிறது அமெரிக்கா.

அமெரிக்காவுக்கு சவுதி அரேபியாதான் நல்லதொரு ஜனநாயக தேசமாக இருக்க முடியும்.

## நல்லதொரு நியாயம்

சோமாலியாவில் அமெரிக்க விமானப்படைகள் தாக்குதலை நடாத்தி அங்கிருந்த பழங்குடிமக்களின் குடியிருப்புக்களை அழித்துவிட்டு அல்கைடா தளம் மீது தாக்குதல் நடாத்தியதாகப் பொய் சொன்னது அமெரிக்கா. உண்மையில் அமெரிக்க சார்பு ஆட்சியை எதிர்ப்பவர்களையே குண்டு வீசிக் கொன்றுவிட்டு அல்கைடா உறுப்பினர்களை கொன்று விட்டதாக பெருமையடித்துக் கொண்டது. இது போதாதென்று சோமாலிய அதிபர் ஒரு அருமையான நியாயத்தை முன்வைத்திருக்கிறார். "உலகின் எந்த மூலையில் உள்ள அல்கைடா பயங்கரவாதிகளையும் தாக்கி அழிக்கும் உரிமை அமெரிக்காவுக்கு உண்டு.

கவனம்: நாளை இலங்கையின் ஏதாவது ஒரு பகுதியில் குண்டுகளை வீசி விட்டு ' அல்கைடா பயங்கரவாதிகளை கொன்றுவிட்டதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் வெளி யாகலாம்.

## உரிமைகளைக் கொல்பவர்கள்

பழங்குடி மக்களுக்கு உரிமைகளை உறுதிப்படுத்தும் ஐ.நாவின் பழங்குடி மக்களுக்கான சர்வதேச பட்டயத்தை ஐக்கிய நாடுகள் சபையில் நிறைவேற்ற இயலாமல் சேடம் இழுத்துக் கிடக்கிறது. இந்தப் பட்டயத்தை நிறைவேற்ற விடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது அமெரிக்கா. அவுஸ்ரேலியாவும் நியூசிலா ந்தும் அமெரிக்காவுக்கு முண்டு கொடுக்கின்றன. உலக வரலாற்றில் பழங்குடி மக்களை கொன்று பூண்டோடு அழித்த புண்ணிய செயலைச் செய்தவர்கள் இந்த மூன்று நாடுகளிலும் வந்து குடியேறிய வெள்ளையர்களே. 500 ஆண்டுகளுக்கும் மேலாக சொந்த இடங்களிலேயே உரிமைகள் எதுவுமற்று வாழ்பவர்கள் இந்தப் பழங்குடிகள்.

பார்க்கப் போனால் சேடம் இழுத்துக் கிடப்பது பழங்குடி மக்களுக்கான சர்வதேச பட்டயம் அல்ல. ஐ.நா தான். ஐ.நாவிற்கு செத்த வீடு நடக்கப் போவதெப்போ?

# சாதாமின் எழுச்சிக்கு கயிறு கொடுத்ததும் கழுத்தில் கயிறு இறுக்கியதும் அமெரிக்கா

சாதாம் ஹுஸேன் பற்றிய எதிர்பார்ப்புக்கள் அமெரிக்க ஆட்சியாளர்கட்கு இருந்திருக்கலாம். ஆனால் மாக்ஸியவாதிகட்கு என்றுமே சாதாம் ஹுஸேன் தமது நண்பரல்ல என்று தெரியும். அமெரிக்காவின் சி. ஐ. ஏயின் உதவியுடன் அதிகாரத்துக்கு வந்த சதாமைக் கொண்டு ஈராக்கிய கம்யூனிஸ்ற்றுக்களைக் கொன்று குவித்த அமெரிக்கா சதாமின் ஈராக்கிய, அராபிய தேசியவாத அரசியலை அப்போது அங்கீகரித்தது. ஏனெனில் அன்று அது சோவியத் யூனியனுடனான அமெரிக்கப் போட்டியிலும் பொதுப்பட உலகின் இடதுசாரி, புரட்சிகர இயக்கங்களை அழிப்பதிலும் அமெரிக்காவின் நோக்கங்கட்கு வசதியாயிருந்தது. சோவியத் யூனியனின் செல்வாக்கு மத்திய கிழக்கிலும் பொதுவாக மூன்றாமுலகிலும் வலுவாக இருந்த ஒரு சூழலில் சதாம் ஹுஸேன் சோவியத் யூனியனுடன் நல்லுறவைப் பேணினாலும் அமெரிக்காவைப் பகைக்காமலே நடந்து கொண்டார். 1974ல் ஏற்பட்ட எண்ணெய் நெருக்கடியின் பின்பு மத்திய கிழக்கின் எண்ணெய் மீதான ஆதிக்கத்தை முழுமைப்படுத்துகிற தேவை அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அது வரை அமெரிக்காவுக்கும் தலையாட்டுகிற சர்வாதிகார ஈரானிய முடியாட்சியின் கொடுமையின் விளைவாக அங்கு கொமெய்னியின் தலைமையில் இஸ்லாமியப் புரட்சி ஆட்சியைப் பிடித்தது. பிற்போக்கான நிலப்பிரபுத்துவச் சிந்தனை வழிப்பட்ட மதவாத ஆட்சியாக இருந்த போதும் கொமெய்னி அந்நிய பொருளாதார ஆதிக்கத்திற்கும், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான உறுதியான நிலைப்பாட்டை எடுத்தது. ஈரானின் எண்ணெய்வளம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டை விட்டு நிரந்தரமாகவே நழுவவதைத் தடுக்கவும் அமெரிக்காவிற்குக் கட்டுப்பட மறுக்கும் ஒரு வலிய ஈரானின் செல்வாக்கு மத்திய கிழக்கில் விரிவு பெற்றால் அமெரிக்க ஆதரவான அரபு ஆட்சிகள் பலவும் கவிழும் அபாயத்தைத் தவிர்க்கவும் ஈரான் வலுப்பெற முன்னமே ஈரானைப் பலவீனப்படுத்தும் நோக்கத்திற்காக அமெரிக்கா சதாம் ஹுஸேனை ஈரான் மீது போர் தொடுக்குமாறு ஏவிவிட்டது.


நீண்டகாலமாக இருந்து வந்த எல்லைத் தகராறு ஒன்றை முகாந்தரமாக வைத்து ஈரானுடன்



தொடங்கப்பட்ட போர் பத்தாண்டுகளாகத் தொடர்ந்து இரண்டு நாடுகளுக்கும் பெரும் அழிவை ஏற்படுத்தியது. இப்போரில் அமெரிக்கா ஈராக்கிற்கு முழுமையான இராணுவ உதவி வழங்கிய போதும் ஈரான் தொடக்க நிலையில் கண்ட இழப்புக்களை ஈடு செய்ததன் மூலம் ஈராக் அரசாங்கம் சமாதானத்திற்கு உடன் படவேண்டிய ஒரு சூழ்நிலை உருவானது.

அமெரிக்கா தூண்டிவிட்ட போரால் ஈராக் கண்ட பெரும் பொருளாதார இழப்பை ஈடு செய்ய ஈராக் எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான "ஒபெக்" கில் எண்ணெய் உற்பத்தியை மட்டு ப்படுத்துவதன் மூலம் எண்ணெய்க்கு ஒரு குறைந்தபட்ச விலையை உறுதி செய்ய விரும்பியது. எனினும் அமெரிக்காவின் நேரடியான கட்டுப்பாட்டிலிருந்த சவூதி அராபியாவும் குவைத்தும் அமெரிக்காவின் ஆலோசனைக்கமைய எண்ணெய் உற்பத்தியைக் குறைக்கும் ஆலோசனையை எதிர்த்தன. இந்தப் பின்னணியிலேயே சதாம் ஹுஸேனின் ஆணைப்படி குவைத் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுக்கப்பட்டது. இப்போரில் ஈராக்கியப் படைகள் ஒரே நாளில் குவைத்தைப் பிடித்தாலும் சில நாட்களிலேயே அமெரிக்கப்படைகள் ஈராக்கியப் படைகளை விரட்டியடித்தன. அத்துடன் ஈராக்கிற்குள்ளும் தமது போரை விஸ்தரித்து வடக்கில் குர்தியப் பிரதேசத்திலும் ஷியா முஸ்லீம் பெரும்பான்மையினர் வாழும் தென் ஈராக்கிலும் ஈராக்கின் இராணுவ நடவடிக்கைகட்குத் தடை விதித்தன.

ஈராக்கில் சதாம் ஆட்சிக்கு எதிரான உணர்வுகள் ஈரானுடனான போரின் போது தெற்கில் இருந்த ஷியா முஸ்லீம்களிடையே வலுப்பெறத் தொடங்கியது. வடக்கில் குர்திய விடுதலை இயக்கங்களும் வலுப்பெறத் தொடங்கின. தனக்கெதிரான எதிர்ப்பைச் சமாளிக்க சதாம் ஹுஸேன் கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டார்.



அதற்கு அமெரிக்காவும் பிரித்தானியாவும் உடந்தையாக இருந்தன. குர்தியக் கிராமம் ஒன்றின் மீது நச்சுவாயுக் குண்டு வீசி நூற்றுக்கணக்கானோரைக் கொன்றழித்தார். அதற்கான நச்சுவாயுத் தொழில்நுட்பம் அமெரிக்காவால் வழங்கப்பட்டது தான் ஷியா முஸ்லீம்களின் ஒரு பகுதியினரான சதுப்பு நிலப்பகுதி வாழ் அராபியரது (மாஷ் அராப்ஸ்) வாழிடத்துச் சுற்றுச் சூழலைத் திட்டமிட்ட முறையில் சதாம் அழித்தபோதெல்லாம் அவை அமெரிக்காவினால் குற்றச் செயல்களாகக் காணப்படவில்லை. முதலாவது போரில் தோற்கடிக்கப்பட்ட சதாமின் ஆட்சியைக் கவிழ்க்க அமெரிக்கா விரும்பவில்லை. ஏனெனில் அந்த நிலையில் சதாமின் வீழ்ச்சி ஈரானுக்குச் சாதகமான ஒரு சூழ்நிலையையும் ஈராக்கில் ஷியா முஸ்லீம்களின் அதிகாரம் வலுப்பெறுவதற்கும் அது காரணமாகும் என அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் அஞ்சினர். எனவே பன்னிரண்டு ஆண்டுகட்கும் மேலாக ஒருபுறம் ஈராக் மீதான விமானக் கண்காணிப்பும் வணிகத்தடையும் நடைமுறையிலிருக்கையில் சதாமைப் படிப்படியாகப் பலவீனப்படுத்தி சதாமுக்கு எதிரான ஒரு ஈராக்கிய அரசியல் அணியைக் கட்டியெழுப்புவதில் அமெரிக்காவின் கவனம் குவிந்தது.

இதை அறிந்து கொண்டு தன்னை விரைவிற் கவிழ்க்கும் எண்ணம் அமெரிக்காவுக்கு இல்லை என்ற கணிப்பின் அடிப்படையில் சதாம் தனது ராணுவ வலிமையை அதிகரிக்கிற செயல்களில் ஈடுபட்டார். ஆயினும் அமெரிக்கா குற்றஞ் சாட்டியது போல ஈராக் அணு ஆயுதங்களையோ எவ் விதமான பேரழிவு ஆயுதங்களையோ கொண்டிருக்கவுமில்லை. உற்பத்தி செய்ய ஆயத்தப்படுத்தவுமில்லை. சதாம் ஹுஸேன் தனது மக்களை அடக்குமுறை ஆட்சிக்கு உட்படுத்தினாலும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் சேர்ந்து தாக்கி ஈராக்கைப் பலவீனப்படுத்தி பணியவைக்கும் பின்னணியில் சதாம்

தொடர்ச்சி 14 ம் பக்கம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்



# காட்டிக் கொடுப்பது தொண்டைமான் பரம்பரைக்குரிய குடும்ப பாரம்பரியம்

## ஒரு வரலாற்றுக் குறிப்பு

"ஆங்கிலக் கம்பெனியின் நற்பேறாலும் உங்களின் நற்பேறாலும் ஆங்கிலக் கம்பெனி அதிகாரிகளின் வீரத்தாலும் சிறந்த கொள்கைகளாலும் அந்தக் காட்டுநாய் சின்ன மருது அவனது சகோதரன் மற்றும் குடும்பத்தார் கைது செய்யப்பட்டு அவர்கள் இழைத்த சதிக்காகச் சாவின் மூலம் பலன் அடைந்தார்கள். மகாபிரபுவே! நான் வெகுகாலமாகப் பார்த்து வந்ததில் பிரெஞ்சுக்காரர்கள், சந்தாசாகிபு, திப்பு சுல்தான் முதலியோர் ஆங்கிலேயரை எதிர்த்து வெற்றிபெற முடியவில்லை. அவர்கள் அழிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் ஆங்கிலக் கம்பெனியை நம்பி வாழ்ந்தவர்கள் பேரும் புகழும் பெற்றிருக்கிறார்கள். அந்த அயோக்கியன் மருது எதை எதிர்பார்த்துக் கலகம் செய்தான் என்பது விளங்கவில்லை."

**-25-10-1801-ஆம் நாளன்று புதுக்கோட்டை மன்னன் விஜயரகுநாதத் தொண்டைமான் ஆங்கிலக் கம்பெனியின் சென்னை நிர்வாகத்துக்கு எழுதிய கடிதம்.**

கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த விஜய ரகுநாதத் தொண்டைமானுக்கு இந்த அவப்பெயர் வந்து விடவில்லை. 18, 19 மற்றும் 20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த தொண்டைமான் பரம்பரையே துரோகத்தின் இழையொற்றித் தான் வாழ்ந்து வந்திருக்கிறது.

திப்பு சுல்தான் மற்றும் மருதுவின் வீரமும், நாட்டுப்பற்றும், தியாகமும் தொண்டைமானுக்கு விளங்காததில் வியப்பில்லை. வீரத்தைப் போலவே வரலாறு நெடுகிலும் அழுத்தமாகத் தடம் பதித்திருக்கும் துரோகம் எப்போதும் தன்னை உயர்வாகவே கருதிக் கொள்கிறது. கருங்காலித்தனம். காரியவாதம் ஆகியவற்றையே புத்திசாலித்தனம் என்று கருதி தன்னை மெச்சிக்கொள்ளும் துரோகம் தான் பிழைத்திருப்பதையே புகழுக்குரியவன் என்பதற்கான ஆதாரமாய்க் காட்டுகிறது.

ஆயினும் வரலாறு எதிர்காலத்தில் தான் மதிப்பீடு செய்யப்படுகிறது. சுரண்டி வந்த ஆங்கிலேயரை அண்டிப்பிழைத்தும் போராளிகளைக் காட்டிக்கொடுத்தும் சுகபோகிகளாய் வாழ்ந்த தொண்டைமான்கள் மற்றும் எட்டப்பன்களை இன்றும் தமிழக மக்கள் தம் அன்றாட வழக்கில் அருவருப்புடன் துரோகத்தின் இலக்கணமாய் மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

1751-இல் ஆற்காட்டு நவாப் பதவிக்காக சந்தாசாகிப்பும் முகம்மது அலியும் மோதிக்கொண்டபோது ஆங்கிலேயர்கள் முகம்மது அலிக்கு ஆதரவாகவும் பிரெஞ்சுக்காரர்கள் சந்தாசாகிப்பை ஆதரித்தும் களம் இறங்குகிறார்கள். இந்தப் போரிலேயே ஆங்கிலேயப் படைக்கு ஆதரவாக 400 குதிரைப்படையினர், 3000 காலாட் படையினரையும் தொண்டைமான் அனுப்புகின்றான். "இனி இந்தியாவின் எதிர்காலம் ஆங்கிலேயர் வசம்தான்" என்று தொண்டைமான் யூகித்திருக்கக் கூடும்.

வெள்ளையர்களும் தனது அடிவருடியைக் கண்டு கொண்டார்கள். 28.9.1755 அன்று சென்னையிலிருந்த கவர்னர் ஜார்ஜ் பகாட் தனது தலைமையகத்துக்கு எழுதிய கடிதமொன்றில் "புதுக்கோட்டை தொண்டைமான் கம்பெனியின் நேசமான நண்பர். தற்போதும் இனிவரும் காலங்களிலும் தொண்டைமானின் பாதுகாப்புக்கு ஆங்கிலேயர்கள் உதவி செய்வார்கள். அதுபோல தொண்டைமானும் ஆங்கிலேயருக்கு உதவி செய்யவேண்டும். தொண்டைமானின் அந்தஸ்திற்கு ஏற்ப அவருக்குரிய மரியாதையையும் கௌரவத்தையும் ஆங்கில அரசு அளித்து வரும்" என்று குறிப்பிடுகிறான்.

1957-ல் சென்னைக்கோட்டையைக் கைப்பற்ற பிரெஞ்சுக்காரர்கள் முயன்ற போது ஆங்கிலேயரைக் காப்பாற்ற 200 குதிரைப்படையினர். 1500 காலாட் படையினர் மற்றும் 250 பணியாட்களையும் தொண்டைமான் அனுப்பினான். புலித்தேவன் முதலான பாளையக்காரர்களை அடக்குவதற்குச் சென்ற கம்பெனியின் படையில் தொண்டைமானது வீரர்களும் இருந்தனர். 1772-ல் இராமநாதபுரம் சிவகங்கை மீது படையெடுத்து முத்து வடுகநாதரைக் கொலை செய்த கம்பெனிப் படையில் தொண்டைமானது 5000 வீரர்களும் இருந்தனர்.

இக்காலத்தில் ஆங்கிலேயருக்குச் சிம்மசொப்பனமாக எழுந்த ஹைதர் அலி தனக்கு உதவுமாறு தொண்டைமானைக் கேட்கிறார். அவன் துரோகிக்கே உரிய ராஜ விசுவாசத்துடன் மறுக்கிறான். சினம் கொண்ட ஹைதரலி தஞ்சாவூரைக் கைப்பற்றிய பிறகு புதுக்கோட்டையின் மீது படையெடுக்கிறார். அப்போதும் ஆங்கிலேய விசுவாசத்தில் தொண்டைமான் உறுதியாக இருக்கிறான். நாயினும் மேலான இந்த நன்றிப் பெருக்கைக் கண்டு வெள்ளையர்களே சிலிர்த்திருக்கக் கூடும். இச் சமயத்தில்தான் கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த 'வரலாற்றுச் சிறப்பு மிக்க' விஜயரகுநாதத் தொண்டைமான் 1789-ல் பட்டத்திற்கு வருகிறான். திப்பு கொலை செய்யப்பட்ட நான்காவது மைசூர் போரில் ஆங்கிலேயர்களுக்குப் பெரும் படையனுப்பி உதவவும் செய்கிறான்.



தொண்டைமான் மாளிகை, புதுக்கோட்டை

1799- ஆம் ஆண்டு நடந்த முதல் பாஞ்சாலங்குறிச்சிப் போரில் தோற்ற கட்டபொம்மன் போரைத் தொடர்வதற்காக மருதிருவரைச் சந்திக்கச் செல்கிறார். கட்டபொம்மனைப் பிடிப்பதற்கு விழிப்புடன் கண்காணிக்குமாறு திருநெல்வேலி கலெக்டர் லூசிங்டன் தொண்டைமானுக்கு கடிதம் எழுதுகிறான். அதன்படி திருமயம் அருகே திருக்களம் பூர் காட்டிலிருந்த கட்டபொம்மனைப் பிடித்துக் கொடுத்து ஆணையை நிறைவேற்றுகிறான் தொண்டைமான். கட்டப்பொம்மனைத் தூக்கிலேற்றிய பிறகு. தொண்டைமானுக்கு விலையுயர்ந்த குதிரை மற்றும் அலங்கார வேலைப்பாடு மிகுந்த பட்டாடையை வெள்ளையர்கள் பரிசாக வழங்கினர்.

எட்டப்பனுக்கு கட்டபொம்மனது பாளையத்தின் 114 ஊர்களும், திப்புவின் அரண்மனையில் கொள்ளையடித்த தொட்டிப் பல்லக்கு. தங்கக் கலசம் வைத்த கூடாரம். குதிரைகள், போர்முரசு முதலான எலும்புத் துண்டுகளும் பரிசுகளாய்த் தரப்பட்டன. எட்டப்பனை விடத் தொண்டைமானுக்கு பரிசு குறைவு தான். எனினும் அதனால் தொண்டைமானின் பிரிட்டிஷ் விசுவாசம் கடுகளவும் குறைந்து விடவில்லை.

மருது சகோதரர்களை ஒழிக்க காளையார் கோவில் மீது வெள்ளையர்கள் 1801- ஆம் ஆண்டு படையெடுத்த போது 6667 வீரர்களையும். காட்டையழித்துச் சாலை போடுவதற்கு பணியாட்களையும் அனுப்பினதுடன் தனது திருமயம் கோட்டையையும் தொண்டைமான் வெள்ளையர்களுக்குக் கொடுத்தான். வெல்லமுடியாமல் தளர்வுற்றிருந்த வெள்ளையர்களுக்கு "தொண்டித்துறைமுகம் வழியாக மருதுவுக்கு வரும் பொருள், ஆயுத உதவிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும். மழைக்காலத்திற்கு முன் காளையார் கோவிலை மூன்று திசைகளிலிருந்தும் தாக்கினால்தான் வெல்லமுடியும்" என ஆலோசனை கூறி வழிநடத்தினான். காடுகளில் தலைமறைவாயிருந்த மருதுவின் வீரர்களில் நூற்றுக்கும் மேற்பட்டோரைப் பிடித்துக் கொடுத்து அவர்களைத் தூக்கிலேற்ற வைத்தான் தொண்டைமான்.

விகாரமான இந்த துரோகத்துக்குப் பரிசாக, ஆங்கிலேயர்கள் இரண்டு ஐந்தடி தங்கச் செங்கோல்களைத் தொண்டைமானுக்குப் பரிசளித்தார்கள். ஆனால் தொண்டைமானோ "மதிப்பு மிக்க" இந்தத் துரோகத்துக்கு 'மகாராஜா பட்டம்' வேண்டுமென்று கேட்டான். வெள்ளையர்கள் மறுத்து விட்டனர். தனக்கு எடுபிடி வேலை பார்க்கும் ஒரு பாளையக்காரன் மகாராசா பட்டத்துக்கு ஏங்குவதை எண்ணி ஆங்கிலேயர்கள் நகைத்திருக்கக் கூடும்.

பட்டம் தராவிட்டாலும் பரவாயில்லை. தென்னிந்தியா முழுவதும் படையனுப்பித் தொண்டு செய்த தன் அடிமைக்கு செலவுக் காசைக்கூட வெள்ளையன் தரவில்லை. புதுக்கோட்டை எனும் வானம் பார்த்த பூமியின் வறிய விவசாயிகளைக் கசக்கிப் பிழிந்து பறிக்கப்பட்ட தொகையை வெள்ளையனுக்குப் படையனுப்ப செலவழித்து விட்டு, புதுக்கோட்டை சமஸ்தானத்துக்கு 60,400 பகோடா கடனும் வைத்துவிட்டு 1807-இல் செத்தான் இந்தத் தொண்டைமான்.

அடுத்து பட்டத்துக்கு வந்த தொண்டைமான் (10வயது) காலத்தில் ஆட்சி நேரடியாக கம்பெனியின் 'ரெசிடென்ட்' கைக்குப் போய்விட்டது. மருதுவின் படையால் தஞ்சையில் தோற்கடிக்கப்பட்ட வில்லியம் பிளாக்பர்ன் என்ற அந்த அதிகாரியை 'அப்பா' என்று தான் அழைப்பானாம் சிறுவன் தொண்டைமான். இவர்களை "ஐரோப்பியனுக்குக் கூட்டிக் கொடுத்துப் பெற்ற பிள்ளைகள்" என்று தனது திருச்சி பிரகடனத்தில் சரியாகத்தான் குறிப்பிடுகிறார் மருது!

1833- ல் தொண்டைமானுக்கு 'ஹிஸ் எக்ஸலன்சி' விருது வழங்கப்பட்டது. 1857- இல் இந்த விருது ரத்து செய்யப்பட்டது. கடனில் மூழ்கிய மன்னனுக்கு இந்த விருது வைத்துக் கொள்ள தகுதியில்லை என ஆங்கிலேய அரசு தெரிவித்துவிட்டது. விருதைத் திரும்பப் பெறுவதற்குகாக விவசாயிகளை மேலும் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்து கடனை அடைத்து. 1870- இல் மறுபடியும் விருதைப் பெற்று 'கவுரவத்தை' நிலைநாட்டிக் கொண்டான் அந்த இளம் தொண்டைமான்.

1875- ஆம் ஆண்டு மதுரை வந்த வேல்ஸ் இளவரசன் தொண்டைமானுக்கு ஏதோ ஒரு மெடலைக் குத்திவிட்டான். 1877- ஆம் ஆண்டு விக்டோரியா ராணி, மகாராணியாகப் பட்டம் சூட்டிக்கொண்டபோது புதுக்கோட்டையில் சிறப்பு தர்பார் கூட்டப்பட்டு கொண்டாடப்படுகிறது. 1911- ஆம் ஆண்டு ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் பட்டம் சூட்டிக் கொண்ட வேளை (வ.உ.சி சிறையில் செக்கிழுத்துக் கொண்டிருந்த போது) தொண்டைமான் லண்டன் சென்று அதில் கலந்து கொள்ளும் "பாக்கியத்தையும்" பெறுகிறான்.

அதே ஆண்டில் தில்லி வந்த ஐந்தாம் ஜார்ஜ். தொண்டைமானுக்கு 'பிரிட்டிஷ் இந்தியப் பேரரசின் தளபதி' எனும் விருதை வழங்குகிறான்.

1914- இல் முதல் உலகப்போர் துவங்கியபோது இந்தத் தளபதியிடம் உதவுவதற்குப் படை இல்லை. ஆகவே பிரிட்டனுக்கு 14,000 ரூபாய் மொய் எழுதுகிறான். இரண்டாம் உலகப் போரின் போது 1, 60, 000 ரூபாய் மொய் எழுதுகிறான்.

**அன்றிலிருந்து இன்றுவரை தொடரும் இக் காட்டிக் கொடுப்பு இலங்கையிலும் நீடித்து வருகின்றது**

1915- ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா சென்ற தொண்டைமான் அங்கு மோலி எனும் வெள்ளையினப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான். 20 லட்சம் ரூபாயை எடுத்துக் கொண்டு 1920- ஆம் ஆண்டு பாரிசில் குடியேறுகிறான். அவர்களுக்குப் பிறந்த மகனின் பெயர் சிட்னி மார்த்தாண்டன்.

'ராஜாதிராஜ ராஜகுலதிலக ராஜகம்பீர சீறி சீறி சீறி' விஜயரகுநாதத் தொண்டைமானின் பரம்பரை தங்களுடைய துரோக வரலாற்றுக்காக கடுகளவும் கூச்சமோ, குற்றவுணர்வோ கொள்ளவில்லை. தொண்டைமான் என்ற பட்டத்துடன் கம்பீரமாகப் பவனி வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்தான் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருச்சி மாநகர மேயர் சாருபாலா.

நன்றி: புதிய கலாச்சாரம்
நவம்பர் 2006 காலனியாதிக்க எதிர்ப்புச் சிறப்பிதழ். சென்னை.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## சிறுகதை

# கூண்டுக்குள் இருந்து

பாமரன்

பிரான்சிலிருந்து தனது தாயாரின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பத்து நாட்களில் திரும்பும் நோக்குடன் யாழ். குடா நாட்டுக்கு வந்த குமாரால் ஒரு மாதத்திற்கு மேலாகியும் அதற்குள்ளிருந்து வெளியேற முடியவில்லை.

கொழும்பில் உள்ள விமான சேவை நிறுவனமொன்றில் பணிபுரியும் அவனது நண்பன் விமல் தான் அவன் வந்து செல்வதற்கான பயண ஒழுங்குகளை ஏற்பாடு செய்திருந்தான். அதனால் தான் அந்த நெருக்கடி நிறைந்த சூழலிலும் தாயாரின் இறுதிச் சடங்கில் உரிய நேரத்தில் அவனால் கலந்து கொள்ள முடிந்தது. மீளத் திரும்புதலுக்கான பயணச்சீட்டில் பதியப் பட்டிருந்த திகதியில் குமாரின் கிராமம் இராணுவச் சுற்றி வளைப்புக்கு உட்பட்டிருந்ததால் அவனால் அன்று பயணிக்க முடியவில்லை. அன்று ஏற்பட்ட பயணக் குழப்பம் இன்று வரை அவனை அலைத்துக் கொண்டேயிருந்தது. இடையில் பயணப் பொதியையும் இழுத்துக் கொண்டு கப்பலுக்கான நீண்ட கியூவிலும் ஒரு நாள் முழுவதும் நின்று தூங்கிப் பார்த்தான், அதுவும் பயன் தரவில்லை.

இன்றும் தனது தாயாரின் அந்திரட்டி உணவை முடித்துக் கொண்டு யாழ் நகரப் பகுதியில் அமைந்திருந்த அந்த விமானப் பயணமுகவர் நிலையத்துக்குச் சென்று முகவரைச் சந்திக்கும் தனது முறைக்காகக் காத்திருந்தான். அங்கு அமர்ந்திருந்தவர்களின் உரையாடல்கள் பெரும்பாலும் அச்சத்தையும் நம்பிக்கையீனத்தையுமே வெளிப்படுத்தின. ஆனால் தடைப்படுத்தப்பட்டிருக்கும் மிகக் குறைவான வளங்களுக்குள்ளும் தமது அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்வதற்கான முயற்சியில் ஒவ்வொருவரும் உயிர்ப்புடன் இருப்பதை அவனால் அவதானிக்க முடிந்தது.

அவன் கூட அங்கு வந்ததிலிருந்து கண்ணால் கண்டும் கேட்டும் அனுபவிதித்தும் வரும் மனதை நெருடும் வாழ்க்கைச் சூழலைக் கண்டு அதிருப்தியடைந்திருந்தான். பாரிஸில் அவனது நண்பர்கள் வரும் பொழுது அவனை எச்சரித்தது போல தானாகவே வந்து அந்த இறுகிய கூண்டுக்குள் அகப்பட்டு விட்டதாக நினைத்து நேற்றுவரை மனம் நொந்திருந்தான். அவனோடு இளமமைக் காலத்தில் ஒன்றாக இணைந்து அரசியல் பொதுப் பணிகளில் ஈடுபட்ட பரமுவின் எதிர்பாராத சந்திப்பின் பின்னர் தான் அவனது அந்தக் கருத்தில் மாற்றம் ஏற்பட்டது.

முதல் நாட்காலை தாயாரின் அந்தியேட்டிக் கிரிகைக்காக குமாரும் அவனது உறவினர்கள் சிலரும் சாமான்கள் வாங்க சந்தைக்குப் போன போது தான் பரமுவை அவன் சந்தித்தான். காய்கறி வாங்க வந்த பரமு கத்தரிக்காயை குவியலோடு விலை கேட்ட குமாரை திரும்பிப் பார்த்த போது அவனை அடையாளங் கண்டு கொண்டார். குமாரின் முகத்தை இவர் உற்றுப் பார்த்த போது குமாரும் அவரைப் பார்த்தான்.

"தம்பி நீர் குமாரெல்லே"

"ஓம் ஓம் நீங்கள் பரமண்ணை தானே, சந்திச்சு இருபது வருசத்துக்கு மேலை........ உருவங்கள் மாறிப்போனோம்..... எப்பிடி இருக்கிறியள்.

கரங்களைப் பற்றி இருவரும் அன்பைப் பரிமாறிக் கொண்டதுடன் ஒதுக்குப் புறமாக நின்றபடி நடந்த அரைமணி நேர உரையாடல் மீண்டும் அவனை அந்த மண்ணோடும் மக்களோடும் இறுகப் பிணைக்க உதவியதை அவன் உணர்ந்தான். உரையாடும் போது அவரது நெற்றியில் தெரிந்த அந்தப் பழைய தழும்பு அப்படியே இருப்பதை குமார் அவதானித்தான். தடையை மீறி நடந்த அந்த மேதின ஊர்வலத்தில் பொலிசாரோடு மோதல் ஏற்பட்டது. அதில் பொலிசாரின் குண்டாந்தடி அடிபட்டு நெற்றி உடைந்து இரத்தத்தில் தோய்ந்த பரமுவை தனது கைக்குட்டையால் தலையில் கட்டி குமார் தான் அன்று மருத்துவமனையில் சேர்த்திருந்தான்.

அந்த நினைவு இப்போது பசுமையாக அவன் மனதில் வந்து போனது.

"முந்தி எண்டா அரிசி பாணுக்கு விலை ஏறினால் அரச ஒடுக்குமுறை எண்டால் யாழ்ப்பாணம் முழுக்க போஸ்ரர் இயக்கம், எதிர்ப்புக் கூட்டம், ஊர்வலம் எண்டு நடத்தின நாங்கள் பத்துமடங்கு விலை ஏறியும் சனத்தின்ரை ஓலங்களைக் கேட்டுக் கொண்டும் சும்மா இருக்க வேண்டியுள்ளது."

"தம்பி இதுக்காண்டி நாங்கள் நம்பிக்கை இழக்கேலாது. போராட்டத்தின் வடிவம் மாறிப்போச்சு. இனி அதின்ர வெற்றி தோல்வி தான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும்.

"அண்ணை அதிலை நிக்கிறவங்களின்ரை பார்வை பிழையாக்கிடக்கு"

ஓம், நானும் அவதானிச்சனான். உம்மடை தோற்றம் ஒரு மாதிரி இருக்கு. பார்த்து என்ன செய்யிறது.... எண்டாலும் நீர் கவனமாப் போய்ச் சேரவேனும்."

சாமன் வாங்கச் சென்ற உறவினர்கள் பொதிகளுடன் வர அதைச் சாட்டாக வைத்து இருவரும் பிரிகின்றனர்.

இருபது ஆண்டுகளுக்குப் பின்னும் அதே துடிப்பு, அதே உறுதி. தெளிவான நம்பிக்கை அளிக்கும் வார்த்தைகள். அவன் இள மையில் படித்த நாவல்களில் வரும் கதாபா த்திரங்களைப் போல அந்த மண்ணில் உயிர்ப்புடன் ஊன்றி நிற்கும் அவரைப்போ ன்று சாதாரண மனிதர்களை நினைத்த போது அவன் தனது இடைக்கால வாழ் வை மதிப்பீடு செய்து கொண்டான். பாரீஸ் நகரத்தில் யந்திர வாழ்க்கைக்குள் தன் னைப் புதைத்துக் கொண்ட காலங்களை விட சமூகப் பற்றோடும் அக்கறையோடும் சுயநலமற்று உழைத்த அந்த இளமைக் கால நாட்களே வாழ்வின் அர்த்தமும் ஜீவத் துடிப்புமுள்ள நாட்களாக அவனுக்குப்பட் டது.

யுத்தத்தால் குழப்பிப் போயிருந்த நாட்டுச் சூழல், குடும்ப நிலைமைகளால் புலம் பெயர்ந்து வெளிநாடு சென்ற போதும் சொந்த மண்ணையும் அதில் அவன் கண்ட கனவுகளையும் விட்டுச் சென்ற ஒரு குற்ற உணர்வு அவனது இதயத்தின் ஒரு மூலையில் இருந்ததை அவன் உணர்ந்தான். பரீஸ் நகருக்குச் சென்றதும் அவன் மனதில் ஏற்பட்ட முதன்மையான ஆவலாக இருந்தவை பிரெஞ்சுப் புரட்சி விண்ணுலகக் கனவை விடுத்து மண்ணில் மனித விடுதலை பற்றிப் பேசிய இடங்களைப் பார்த்திருந்தான். பஸ்லீல் சிறைக்கூடம், பரீஸ் கம்யூன் புரட்சி வீரர்கள் இறுதியாகத் தங்களது உயிர்களை அர்ப்பணித்த எல்லைப் புறமயானம், அங்கு அமைந்திருந்த அவர்களது நினைவுத்தூபிகள்– அவைகளுக்கு மத்தியில் நின்று வரலாற்றைப் பின்னோக்கிப்பார்த்து புத்துணர்வு பெற்றிருந்தான். இன விடுதலைக்கான போராட்டம் கூர்மை அடைந்த பின்னர் எல்லோரையும் போல கூட்டங்களில் கலந்து கொள்வது– பண உதவி செய்வது என்பதுடன் நின்று கொண்டான். குடும்ப நலன் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கான உழைப்பு என்பதே வாழ்வாக மாறியிருந்தது. இங்கு அவனது தாயாரின் இறுதிச் சடங்கில் கூட சிறு சலசலப்பு எழுந்தது.

"குமார் கொம்மாவுக்கு கடன் செய்யக் கஸ்ரப்பட்டு வந்தனி தோஞ்சிட்டு நிக்கிற தம்பிக்குப் பக்கத்திலை போய் இரன்ராப்பா"

"நானும் உதைத்தான் சொல்ல நினைச்சனான்." என்றவாறு சிவஜோதி குமாரின் மனப் போக்கை நன்றாக அறிந்திருந்தும் ஊர்ச் சடங்கு சம்பிரதாயங்களின் காப்பாளன் தானே என்பதை வெளிக்காட்டும் நோக்குடன் அவனது கரங்களைப் பற்றி இழுக்கிறான்.

"இஞ்சை... எல்லாம் தீர்மானிச்ச படிதான் நடக்குது. அவற்றை விருப்பப்படி நடக்கட்டும் குழப்பம் வேண்டாம்." நிலைமையை உணர்ந்து கொண்ட குமாரின் மைத்துணன் உறுதியாகச் சொல்ல.... எல்லோரும் அமைதியாகினர்.

"அட அங்கை போயும் நீ உதுகளை விடேல்லையே. நல்ல விஷயந்தான்."

பேரம்பலம் வாத்தியார் அருகே வந்து அவனது நிலைப் பாட்டை ஆதரித்துக் கூறினார். தாயாருக்குத் தம்பியருடன் இணைந்து குமார் கொள்ளி வைத்தது. அங்கு கூடியிருந்தவர்களுக்கு ஆறுதலை அளித்தது, அந்த அளவுக்காவது தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தமையை எண்ணி அவன் திருப்தி அடைந்தான்.

முகவர் நிலையத்தில் குமாருக்கு முதலாவதாக கதிரையில் இருந்த பெண் எழுந்து முகவரின் மேசையை நோக்கிச் செல்கிறாள். நகைகள் அணிவதற்குத் தயங்கும் அந்தச் சூழலில் அவள் குடும்பப் பெண்ணா அல்லது மணமாகாத இளம் பெண்ணா என அடையாளம் காண்பது சிரமமாக இருந்தது.

அவள் இருக்கையில் இருந்து எழுந்து வர குமார் எழுந்து முகவருக்கு முன்னால் சென்று அமர்ந்தான். எழுந்து சென்ற பெண் மீண்டும் முகவரது மேசையை நோக்கித் திரும்பிய போது அவளது உணர்விலும் நடத்தையிலும் ஏற்பட்ட திடீர் மாற்றம் முகவரின் முன்னால் அமர்ந்திருந்த குமாரை மட்டுமல்ல அங்கு கூடியிருந்தவர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

"உங்கடை காலிலை விழுந்து கேக்கிறன். ஒரு சீற் போட்டுத் தாங்கோ சுகமில்லாத குழந்தையோடை ஒரு மாதமா அலையிறன்."

திடீரென அழத் தொடங்கிய அந்தப் பெண் கன்னங்களில் கண்ணீர் வழிய கெஞ்சிக் கேட்டுக் கொண்டே குனிந்து முகவரின் முழங்காலைத் தொட முனைகிறாள். முகவர் அதிர்ச்சியுடன் இருக்கையை விட்டு எழுந்து "சீ என்ன இது இந்தப் பொம்பிளையளே இப்பிடித்தான். குழந்தையோட வீணா அலக்கழிக்கக் கூடாது எண்டுதான் அடுத்த கிழமை எண்டு சொன்னனான். சரி நாளைக்கு ஏழரை மணிக்கு வந்து பாருங்கோ கிடைக்காட்டி பேந்து அங்கை நிண்டு அழக்கூடாது."

அந்தப் பெண்ணைப் பார்த்து கோபங்கலந்த தொனியில் உரத்துக் கூறிவிட்டு மீண்டும் கதிரையில் அமர்ந்து கொண்டு எனது முகத்தைப் பார்க்கிறார். அந்த முகவர்.

"ஐயா உங்கடை பிரச்சனை என்ன"

சம்பவங்களின் அதிர்ச்சியில் இருந்து இன்னும் விடுபடாத குமார் மௌனமாக தனது மீள்பயண ரிக்கற்றை பதிவுக்காக நீட்டுகிறான்.

"ஓ நீங்களா. காலமை விமல் கதைச்சவர். எண்டாலும் நாளைக்குப் போகேலாது. புதன்கிழமை சுவறா போட்டுத்தரலாம்"

"நாளைக் கெண்டுதானே சொன்ன நீங்கள்"

"கண்ணாலை பாக்கிறயள் தானே நிலைமையை. நீங்கள் இறுக்கமா நிண்டால் உங்களை நாளைக்கு வந்து பாக்கச் சொல்லுவம் எண்டுதான் நினைச்சனான். அதுக் கிடையிலை அந்தப்பிள்ளை அழுது சாதிச்சுப்போட்டுது பாத்தியளே நம்பிக்கையில்லாத சீற்றுக்கே இவளவு போட்டி"

குமார் தனக்குக் கிடைக்க இருந்த நம்பிக்கையில்லாத ஒரு சீற் ஒன்றாவது ஆற்றாமல் அழுது துடித்த அந்தப் பெண்ணுக்குக் கிடைத்ததில் ஆறுதல் அடைந்தான்.

"சரி புதன்கிழமை போடுங்கோ"

விமானப் பயணம் என்பதே வாழ்க்கையின் ஒரு கனவுபோல எல்லோருக்கும் கிடைக்காத ஒன்றாக ஆடம்பரமும் மகிழ்சியும் நிறைந்ததாக அமைந்திருந்த நிலைமாறி வெறும் பணத்தை மட்டுமே அள்ளும் ஒன்றாக மாறியிருந்ததை அவன் கண்டான். இதற்குத் இந்தக் கதியானால் சரக்குக் கப்பலில் பயணிக்கும் மக்களின் நிலை– இரவு கூட வெளிநாட்டு வானொலி ஒன்றில் சற்றுமுன் கேட்ட பெண்ணின் அழுகுரலை ஒத்த பலகுரல்கள் முகவர் சொன்னது போல சாதிப்பதற்கான அழுகையாக அப்பெண்ணின் அழுகைய அவன் கருதவில்லை. மௌனித்துப் போயிருக்கும் அங்குள்ள மக்களின் மனக்குமுறல்களின் ஒரு வெடிப்பாகவே அதனை அவன் கருதினான்.

பயணமுகவர் நிலையத்திலிருந்து வெளியேறும் போதே அங்கு நிற்கப்போகும் ஒரு நாளை பரமு குறிப்பிட்டிருந்த அந்த பழைய தோழர்களில் சிலரையாவது சந்திப்பதற்கு பயன்படுத்துவது என தீர்மானித்துக் கொண்டான் குமார்.

மறுநாள் தனது மைத்துனரின் மோட்டார் சயிக்கிளை எடுத்துக்கொண்டு குமார் புறப்பட்டான். மறுநாள் பயணம் செய்ய இருப்பவனை தனியே விடமனமின்றி மைத்துனரும் பின்னால் ஏறிக்கொண்டார். முதலில் தூரத்தில் இருந்த முன்பு போராட்டங்கள் நடைபெற்ற அந்த கிராமத்தை நோக்கி அவன் சென்றான். பல இராணுவ முகாம்கள் சென்றிகளைத் தாண்டியே அங்கு செல்ல வேண்டி இருந்தது, பிரதான வீதியில் இருந்த ஒழுங்கைக்கு திரும்பிய போதே இருபது வருடத்தின் பின் ஏற்பட்ட மாற்றங்கள் தெரிந்தன. ஒழுங்கை வேலிகள் மதில்களாக மாறியிருந்ததால் வீட்டின் குறிப்பை குமாரால் சரியாக அறியமுடியவில்லை.

"தம்பி நவசோதியற்றை வீடு எது"

"சோதியப்புவின்ரை வீடே உங்கை உந்த வீடுதான்."

சிறுவனின் வழிகாட்டலுடன் மோட்டார் சயிக்கிளை உருட்டிச் சென்று கேற்றுக்கு முன்னால் நின்று உள்ளே பார்க்கிறான்.

"ஆரைத் தேடுறியள் தம்பி"

"சோதியப்புவை"

கேற்றைத் திறந்தபடி கேட்ட நடுத்தர வயதுப் பெண் குமார் அப்படிக் கூறியதை கேட்டு கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு திரும்புகிறாள்.

"சோதியப்புவை ஆரோ தேடி வந்திருக்கினம்."

வீட்டு முற்றத்தின் தூரத்தில் நின்று வேப்பமர நிழலில் சாய்மனைக் கட்டிலில் அமர்ந்து கண்ணாடிக் கூடாக பேப்பரை துளாவிக் கொண்டிருந்த வயோதியர் பேப்பரை மடித்துக் கொண்டு மெல்ல எழும்புகிறார்.

தொடர்ச்சி 18 ம் பக்கம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# வாயு

தூங்கிக் கிடந்தது காற்று- மிகத
தூசு படிந்து தெரிந்தது பூமி
ஓங்கி உயர் தெடு வானில் மெல்ல
ஓய்ந்து சரிந்து படுத்தது மேகம்.
சாய்ந்து தெரிந்தது குன்று ஒரு
சத்த மிலாது வழிந்தது கங்கை.
சோம்பித் துயின்றது ஆழி- அலை
செய்யுந் தொழிலை மறந்தது போல.

தேய்ந்து சிதைந்தது தேசம்- உயர்
தென்பை இழந்து நலிந்தனர் மாந்தர்
ஏங்கிக் கிடந்தனர் மாற்றம்- இனி
என்று வருமென் றிருந்தனர் மாந்தர்.

அந்நியர் போயின தாலே- முழு
ஆட்சி உரிமை தமதெனச் சொல்லி
முந்தினர் ஆண்டைகள் எல்லாம்- முன்னர்
ஆண்ட கதைபல ஆயிரஞ் சொன்னார்;
வேதத் திருமொழி என்றார்- மண்ணில்
வேற்றுமை என்றைக்கும் வேண்டுவ தென்றார்
பெண்ணிலும் ஆண் உயர்வென்றார்- இன்னும்
அந்தணர் சாதியில் ஓங்கினர் என்றார்.
போர்க்குல மாந்தரும் மேலோர்- பின்
வைசியர் சூத்திரர்க்கே இடம் என்றார்
பஞ்சமர் கீழென்று சொன்னார்- பசு
மாடுகள் ஓர்படி மேலென்று சொன்னார்
சாதிக்குட் சாதிகள் கண்டார்- குலச்
சண்டையை மூட்டி நம் சாத்திரம் என்றார்
தீட்டுத் துடக்கென்றும் சொன்னார்- விரல்
தீண்டத் தகாதவர் பஞ்சமர், அன்னார்
பேர் சொல்லிப் பேசுதல் குற்றம்- தம்
தோளிற் துணியுடன் முன்னிற்றல் குற்றம்
வீட்டுக்குள் வந்திடல் குற்றம்- கோவில்
வாசலைத் தாண்டி வருவதுங் குற்றம்
நீரைப் பகிர்தலும் குற்றம், நல்ல
கோப்பையில் தேநீர் உறுஞ்சுதல் குற்றம்
ஈனக் குலத்தரைத் தொட்ட- இளங்
காற்றுப் படுவதும் குற்றமே என்றார்.

கெஞ்சிப் பிழைத்தவர் உண்டு- தட்டிக்
கேட்கப் பயந்து மறந்தவர் உண்டு
கேட்டை எதிர்த்தவர் உண்டு- அவன்
உற்ற கதிகண்டு நெஞ்சு நடுங்கி
அஞ்சி இருந்தவர் உண்டு- தம்
ஆற்றல் அறிந்தவர் மாற்றங்கள் செய்ய
அஞ்சிக் கிடப்பதற்குண்டோ- இன்னும்
ஆயிரம் ஆண்டு பொறுப்பதற்கு குண்டோ!

தூக்கம் கலைந்தது காற்று- தன்னைச்
சூழவுந் தீமைகள் கண்டது காற்று
துன்பம் மிகுந்து எழுந்தது காற்று
வீரம் மிகுந்தது காற்று சீற்றம் மிகுந்து எழுந்தது
விண்ணை அளந்து வளர்ந்தது காற்று

ஆழி நெடு மலை மேவி- இந்தப்
பூமியை ஓர்முறை சுற்றி விரைந்தது
சூறை எனப் பெயர் சூடி
வீசி விசிறி விரிந்தது காற்று
தாவி எழுந்தது காற்று- அறை
கூவிப் பகையை அழைத்தது காற்று
எட்டி உதைத்தது காற்று- தலை
பற்றிச் சுழற்றி எறிந்தது காற்று.
வெட்டித் தறித்தது காற்று- பகை
வேருடன் சாய முடித்தது காற்று.

துள்ளிக் குதித்தது மேகம்- கை
தட்டிச் சிரித்த இடியொடு மின்னல்
வெட்ட ஒளிர்ந்தது வானம்- முகில்
உள்ளம் நெகிழ்ந்து பொழிந்தது தாரை
ஊறிக் குளிர்ந்தது குன்று- நீர்
உண்டு தன் தாகம் தணித்தது பூமி
பொங்கி விரைந்தது கங்கை- அலை
துள்ளிக் குதிக்க மகிழ்ந்தது ஆழி
வேகந் தணிந்தது காற்று- இள
மேனிக்கு இன்பம் அளித்தது தென்றல்.

சாதிகள் வேண்டிய தில்லை- சொல்லும்
சாத்திரம் உண்டெனில் இன்றுடனில்லை
நாளை எழும்புது வையகம்- நல்ல
நீதியின் முன் இனிப் பேதங்கள் இல்லை.

**(சாதி ஒடுக்குமுறைக்கு எதி ரான போராட்டங்களை நினைவு கூர்ந்து)**

சி. சிவசேகரம்

# பிணங்களின் மறுபெயர்

அதிகாலை ஆறுமணி
ஆஸ்பத்திரிக் கடமைக்காய்
அடையாள அட்டையுடன்
சைக்கிளில் செல்கையில்
சுடப்பட்டுச் செத்ததனால்
போரிலே எதிர் கொண்ட
பயங்கரவாதி அவனாவான்!
ஆதலினால் பிணமானான்....

கட்டுமரமேறி
கடலிலே
வயிறு கழுவுதற்காய்
வலைபோட்ட வேளையிலே
சுடப்பட்டு செத்தனால்
போரிலே எதிர் கொண்ட
பயங்கரவாதி அவனாவான்!
ஆதலினால் பிணமானான்.......

வேளைக்காய் எழுந்து
வாழைக்குலை விற்பதற்காய்
தோளில் துவாயுடன்
வேகமாய் செல்கையிலே
சுடப்பட்டு செத்ததனால்
போரிலே எதிர் கொண்ட
பயங்கரவாதி அவனாவான்!
ஆதலினால் பிணமானான்.....

உண்ணவும் உடுக்கவும்
எண்ணி நடப்பவர்
மண்ணில் துவக்கால்
சுட்டு மடிந்தால்....
தொழிலாளி விவசாயி
வர்க்க உணர்வோடு
அநியாயம் சாய்க்கும்
அணியாய்த் திரள்வோம்.

சோ. தேவராஜா

# பாட்டன் பரம்பரை

பலநூறு ஆண்டுகள் முன்
பண்ணிவைத்த கோபுரத்தை
அண்ணாந்து பார்த்து அதை
அதிசயித்து உன்மனதுள்
பாட்டனுக்குப் பாட்டனுக்குப்
பாட்டனுக்குப் பாட்டனெவன்
பண்ணியவன் என்றெண்ணிப்
பரவசித்து நிற்பவனே.
பழைய பரம்பரையில்
பாட்டன்மார் பலபேர்காண்.

கல்லுடைத்த பாட்டன்மார்
கல்சுமந்த பாட்டன்மார்
பேரனுக்குத் தெரியாது.

ஆராரோ தேரேறி
வீதிவலம் வருவதற்காய்க்
கையிழந்த பாட்டன்மார்
கண்ணிழந்த பாட்டன்மார்
காலொடிந்த பாட்டன்மார்
கதையுனக்குத் தெரியாது,
கதைமுடிந்த பாட்டன்மார்
கணக்குனக்குத் தெரியாது,

கோபுரத்தில் பேர்பொறித்துக்
கொலுவிருந்த மன்னரிடை
பாட்டன் உனக்கொருவன்
எவனிருப்பான் என்றெண்ணிச்
செல்லரித்த ஏடுகளைத்
தேடுகிற பைத்தியமே!
பணக்கார உறவுகளைப்
பழமையிலும் நாடுகிறாய்.

மணி

**கூண்டுக்குள் இருந்து**
**17ம் பக்க தொடர்ச்சி.........**

“ஆர் தம்பி ஆளைத் தெரியலை”
“தெரியேலையோ நாங்கள் உங்கடை பழையாக்கள்தான் வடிவாப் பாருங்கோ”
கொஞ்சம் நெருங்கி வந்து கண்ணாடியை சரிசெய்து கொண்டு குமாரின் முகத்தை உற்றுப் பார்க்கிறார்:-
“எட எங்கடை குமார் எல்லே- மறக்காமை தேடி வந்திட்டாய்”
கையைப் பற்றிபடி மகிழ்ச்சியால் முகம் மலரக் கூறுகிறார். வயதின் முதிர்ச்சியிலும் அவரது கைகளின் வலிமை தெரிகிறது.
“வந்தவையை நிக்க வைச்சுக்கொண்டு உள்ளை கூட்டிக்கொண்டு வாருங் கோவன்”
“கதிரையைக் கொண்டுவந்து இதிலை போடுபிள்ளை. வேப்பம் நிழல்தான் நல்ல சுவாத்தியம். இவர் ஆரெண்டு சொல லேல்லை.
நாங்கள் முந்தின போராட்டங்களில ஒன்ற இருந்த நாங்கள் இப்ப நான் பிரான்ஸில் நாளைக்கு பயணம் அதற்கிடையிலை எப்பி டியும் இவரைச் சந்திச்சிட்டுப் போவ மெண்டு வந்தனான். எப்பிடிச் சுகங்கள்
“எங்களோடை இருந்தவையள் கனபேர் போய்ச் சேர்ந்திட்டினம். அப்பிடிச் சொல லிறது பிழை என்ன? இப்ப அவை இல்லை எண்டு சொல்லுவம். இருக்கிற நாங்கள் இடைக்கிடை சந்திக்கிறம். எங்கடை பேப் பர் புத்தகங்கள் வாறதுதானே”
“ஓ பரமண்ணை சொன்னவர் நானும் அனுப்பச் சொல்லி அட்றஸ் குடுத்தனான;”
“எட பரமுவைச் சந்திச்சநீரே எப்பிடி இருக்கிறார்”
“அவர் பழைய மாதிரியே இருக்கிறார். அதுசரி நீங்கள் பங்கு பற்றின பழைய போராட்டங்களைப் பற்றி என்ன நினைக்கிறியள்?”
“நீங்கள் எண்டு ஏன் பத்திரிகைக் காறர் மாதிரிக் கேக்கிறீர். நாங்கள் நடத்தின போராட்டங்கள் எண்டு சொல்லும். அது காலத்தின்ரை தேவை. அப்ப அடக்குமுறை அப்பட்டமா இருந்தது... அதை ஒழிக்காமல் நாங்கள் மனிசரா வாழேலாது எண்ட நிலையிலைதான் நிதானமா அதை ஒழிக்க விரும்பின நாங்களெல்லாம் ஒண் டாச் சேர்ந்து போராடினம். வெற்றியும் கண்டம். இனப்பிரச்சினைக்கும் இப்பிடி ஒரு வழியைக் கண்டிருந்தா எப்போதே இது தீர்ந்திருக்கும். தம்பி தண்ணியை குடியுங்கோ”
தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தில் தூக்குக் கயிற்றை எதிர்நோக்கி அதிலிரு ந்து மீண்டு பல ஆண்டுகள் சிறையிருந்து திரும்பிய அவரின் நிதானமும் வார்த்தைப் பிரயோகங்களில் கூட அவர்காட்டும் கவன மும் குமாரின் கவனத்தை ஈர்த்தது,
“நாங்கள் பங்குபற்றின சமூக மாற்றத்து க்கான போராட்டம் பின்னடைஞ்சிருக் கிறதாக நீங்கள் நினைக்கேல்லையே”
“ஏன் தம்பி அப்படி நினைக்கிறீர். இனப் போராட்டமும் சரியான திசையிலை போனால் வெல்லலாம் தானே. முந்தி அமெரிக்காவுக்கு எதிராக எங்கடை பேப்பர் மட்டும் தான் எழுதினது. இப்ப உள்ளூர் பத்திரிகைகளெல்லாம் அமெரிக் காவைக் கண்டிச்சு ஆசிரியர் தலையங்கம் எழுதுகினம். தென்னமெரிக்காவிலை ஏற்ப டுற மாற்றம் எல்லாம் உமக்கு நம்பிக்கை யைத் தரேலையே”
“ஓ வரலாறு எப்பவும் முன்னுக்குச் செல்லு மெண்டுதானே படிச்சனாங்கள். உண்மை யும் அதுதானே. அந்த நம்பிக்கை எப்பவும் எங்களுக்கு இருக்கும். ஆனால் இனப்பிர ச்சினைதான் இழுபட்டுப் போகுது”
“ஒரு பிரதேச சுயாட்சி அல்லது சமஷ்டி அமைப்பில்லாமை இதை எப்படித் தீர்க்கி றது அவர்கள் இந்தியாவுக்குப் போய் பஞ் சாயத்து முறையை ஆராயிறாங்கள். அதால ஒரு பிரயோசனமும் இல்லை”
சற்று தொலைவில் கேட்ட வெடியோசை உரையாடலின் கவனத்தை திசை திருப்பு கிறது.
“ஷெல்லடிபோல கிடக்குது”
“இல்லைத்தம்பி, ஷெல்இல்லை கிளை மோர் போலைத்தான் கிடக்கு. அதுவும் மானிப்பாய் பக்கம் தான். நீரும் பயணகா றன். நம்பி ஒரு இடத்தை வெளிக்கி டேலாத காலமாப் போச்சு. அவசரப்ப டாமை சந்தியிலை விசாரிக்க எல்லாம் தெரியும். பாதையை மாத்தி கவனமாப் போங்கோ“
அவரிடம் விடைபெற்றுக் கொண்டு குமார் புறப்பட்டான்.
மறுநாள் பலாலி நிலையத்திலிருந்து விமா னம் மேலெழுந்த போது கூண்டுக்குள்ளி ருந்து வெளியேறுவதாக குமார் எண ணவில்லை. அந்தக் கூண்டு விரிவடைந்து முழு நாட்டையும் உள்ளடக்கியதாக- அவன் சந்தித் அந்தக் கிராமத்துப் பழைய போராளியின் விடுதலை உணர்வு போல உலகை நோக்கி விரிந்து செல்வதாக உணர்ந்தான்.

## விசித்திர வழக்கு

மூன்றாம் முறையாகவும
மன்னன் சொலமனுடைய சபையில்
மற்றுமொரு
விசித்திரமான வழக்கு வந்தது
ஒரு பிள்ளை; இரண்டு தாய் மார்!
அன்னையர் இருவருமே- அது
'தன் பிள்ளை' என்கின்றனர்!
பிள்ளையை யாரிடம் ஒப்படைப்பது
என்று தெரியவில்லை!
மன்னன் சொலமன் யோசித்தான்!
மந்திரி பிரதானிகளை
உலகெங்கும் அனுப்பி
ஆலோசனைகள் கேட்டான்!
அந்தக் குழந்தையை இரு கூறாக்கி
ஆளுக்குப் பாதியாகக் கொடு என்றான்
அனைத்தும் அறிந்த மந்திரி ஒருவன்!
அமைச்சன் சொன்னதையே
மன்னனும் செய்யத் துணிந்தான்!
'வாளை' ஓங்கினான்!- அன்னையரில்
முன்னவள் வெட்டு என்றாள்
பின்னவள் வெட்டாதே என்றாள்!
முன்னவள் தன் சேனையை அனுப்பி
பிள்ளையின் முகவரியைச் சிதைத்தாள்!
அகதி, அனாதை, அங்கவீனம், விதவை,
...................................
பிள்ளையின் பெயர்கள் மாறின!
பின்னவளும் அதை வரவேற்றாள்!

முன்னவள் பிள்ளையின் உணர்வுகளைக்
கடத்தி வெற்றுடலாய்
வீதிகளில் எறிந்தாள்!
பின்னவள் தானும் சளைத்தவள் அல்ல
என்றவாறே அதையே செய்தாள்!
பிள்ளை அழுவதால்
தனக்கே அவமானம் என்று
ஊடக வாய்களை அதட்டி மூடினாள்

உண்ணலை ஒறுத்தால்
ஓர்மம் அடங்குமென்று
முன்னவள் பிள்ளையின் வயிற்றில் அடித்தாள்!
பின்னவள் பட்டினியை
பரம மோட்சத்துக்கான பாதையென்று
பஜனை பாடினாள்!
பிள்ளையின் உடம்பில்
பேதமை நோயை ஊட்டி
நோய் வந்து விட்டதாய் பாசாங்கு செய்தாள்
நோயினால் பிள்ளை தகிக்க
அந்தக் காய்ச்சலில் பின்னவள்
தாய்மை பாராட்டினாள்!

திம்பு, ஜெனிவா, ஒஸ்லோ, என்று
முன்னவளும் பின்னவளுமாய்
பேசிப் பேசியே,
நோயை வளர்த்தனர்!

உலகத்து மந்திரிமார்
அவ்வப் போது ஓடோடி வந்து
அன்னையர் இருவருக்கும்
ஆலோசனைகள் பல கூறிச் சென்றனர்.

தின்னக், குடிக்க, தீவிரம் பிறக்க
புதிது புதிதாக பட்சணங்கள் கொணர்ந்து
அன்னையர் இருவருக்கும்
உண்ணக் கொடுத்தனர்!
பிள்ளையின் அழுகையை
சகிக்காதவர் போல் அழுத
கன்னத்தில் முத்தமிட்டு
ஆறுதலும் கூறினர்!
மன்னனையும் வெட்டவிடாது
அன்னையர் இருவரும்
ஆவேசமாகவே
பிரச்சனை வளர்த்தனர்
பிள்ளை சாகுமென்று
இருவரும் நம்பினர்.

மன்னன் சொலமன் யோசித்தான்!
பிள்ளை செத்தபின்
பிரச்சனை தீருமென்று
பேசாமல் இருந்து விட்டான்!

~பட்டணத்தடிகள்~

# பக்க சார்பின்மை நடுநிலை என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலங்கள்

**20ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ்க் கவிதைகள், தொகுப்பு ஸ்ரீ. பிரசாந்தன், பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு.**
**2006 ஒக்றோபர், ப.544 இந்திய ரூபா. 300.00**

பக்கச் சார்பற்ற, நடு நிலையான இலக்கியம் என்றும் இருந்ததில்லை. அவ்வாறே இலக்கியம் பற்றிய பக்கச்சார்பற்ற பார்வையும் இருந்ததில்லை. எனினும் தகவல்களின் திரட்டோ படைப்புக்களின் தொகுப்போ, ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட அடிப்படையில் காய்தல் உவத்தலின்றிச் செய்யப்படக் கூடிய ஒரு பணியாகும். "இயன்றவரை குழுவாதங்களுக்குள் அகப்படாமல் நடுவு நிலைமையோடு செயற்பட்டேன்" என்கிற நூலாசிரியருக்கு இயன்றது எவ்வளவு என்பதை வாசகர்கள் அறிவதற்கு எனது கருத்துக்கள் உதவக்கூடும் என நினைக்கிறேன்.

'மரணத்துள் வாழ்வோம்' 'பதினொரு ஈழத்துக் கவிஞர்கள்' எனுந் தொகுதிகளின் வரையறுக்கப்பட்ட இலக்கைச் சரியாகவே சுட்டிக்காட்டுகிற தொகுப்பாசிரியர் 'ஈழத்துக் கவிதைக் கனிகள்' என்ற தொகுப்பு உலக அறிஞர்கள் மத்தியில் அவதானிப்பைப் பெறவில்லை என்பதையே அதன் குறைபாடாகக் கூறுகிறார். அத் தொகுப்பு வணிக நோக்கில் அவசரமாகத் தொகுக்கப்பட்டது என்பதே என் எண்ணம். இத் தொகுப்பு ஈழத்துக் கவிதைக்கனிகளின் குறைபாடுகளைக் கடந்துள்ளதா என்பது நம் கவனத்துக்குரியது.

கவிஞர்களின் தெரிவில் சிலரது விடுபடல் வேறு பலரது விடுபடலை நியாயப்படுத்தும் ஒரு வசதியா அல்லது தொகுப்பாசிரியர் தன்னையும் ஒரு சிலரது கண்ணில் ஒரு கவிஞராகத் தெரிகிற தனது குருநாதரையும் சில நண்பர்களையும் உள்ளடக்காமை அவர்களது கவித்துவம் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையிலா என்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏனெனில் பணிக்குரிய குறுகிய காலம் பார்வையில் அகப்படாமை என்ற விளக்கங்கட்கு உட்படுகிற கவிதைகளுள் பின்னவை அடங்கா.

சமூகச் சார்பு விடயங்கள் அளவுக்குப் போருக்கும் அடுத்துக் காதற் கவிதைகட்கும் இடங்கொடுத்த தொகுப்பாளர் ஏனோ ஆன்மிகக் கவிதைகட்குக் குறைவான இடம் வழங்கியதாகக்கூறி சமயச் சார்புப் பிரபந்தங்களில் தரமான பல கவிதைகள் "இருத்தல் கூடும்" என்றும் அவை சேர்க்கப்படாமைக்கும் குறுகியகால அவகாசத்தைக் குற்றங் கூறுகிறார். அவையும் விடுபட்ட பிறவும் சேர்த்தாலே இத் தொகுதி முழுமையடையும் எனக் கூறும் அவர் "குறுகியகால அவகாசம்" ஏன் எப்படி நேர்ந்தது என்பதை விளக்கவில்லை. "இப்படிப்பட்டதோர் அரியமுயற்சியை" அவரை நம்பி ஒப்படைத்த பதிப்பாளரை அவர் இவ்வாறு கைவிடுவதற்கு நிர்ப்பந்திக்கும் அவகாசமின்மை எவ்விதம் நேர்ந்தது?

இவ்வாறான ஒரு நூல் அவசர அவசரமாகத் தொகுக்கக் கூடிய ஒன்றல்ல. ஒரு ஆண்டோ இரண்டு மூன்று ஆண்டுகளோ செலவிட்டிருப்பினும் நல்லதொரு நூலுக்கு அது தகும். எனவே அவசரம் என்பது இவ்விடத்துப் பொறுப்புணர்ச்சியின்மையின் அடையாளமாகவே புலப்படுகிறது. சில வகையான கவிதைகட்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டிருக்கிறதெனின் நூலின் பேர் அதை அடையாளப்படுத்துகிற விதமாகப் பகுதி-1 என்று துணைத் தலைப்புடன் அமைந்திருக்கலாம்.

சிங்களம் மட்டுமே சட்ட அறிவிப்பு 1950களின் முற்பகுதியில் வெளியானது என்றும் 1956ல் ஏற்பட்ட இனக்கலவம் என்றும் 1972ல் தமிழர் ஐக்கிய முன்னனியைத் தமிழரசுக் கட்சியினரும் 'தமிழ்க் குழு உறுப்பினர்களும்' மலையகத் தமிழ்த் தலைவர்களும் இணைந்து உருவாக்கினர் என்றும் எழுதித் தனது அரசியல் வரலாற்று அறியமையுடன் இடதுசாரிகள் மீதான மாமூலான குற்றச்சாட்டுக்களையும் தனது நீண்ட பின்னிணைப்பில் தந்திருக்கிற நூலாசிரியர் தனது கவிதைத் தெரிவுகட்கான அடிப்படையை எங்குமே முன்வைக்கவில்லை.

மகாகவிக்குப் 15 பக்கங்களும் அவரை மீறி ஜெயபாலனுக்கு 25 பக்கங்களும் முறையே ஆறு (குறும்பாக்களை ஒன்றாகக் கொண்டு), ஐந்து கவிதைகளும் உள்ள இடத்தில்; இடதுசாரித் தடயம் அழிக்கப்பட்ட புதுவை இரத்தினதுரை 18 பக்கங்களில் நாலு கவிதைகளுடன் நீலாவணனின் 13 பக்கங்களையும் முருகையனின் 12 பக்கங்களை மிஞ்சி விடுகிறார். சோமசுந்தரப்புலவரும் 12 பக்கத் தகுதி பெறுகிறார். பிறரிடையே ஒரிருவருக்கு ஆளுக்கு நாலு கவிதைகள் போக மற்றவர்கட்கு ஒன்றுக்கும் மூன்றுக்குமிடையே ஒதுக்கப்பட்டுள்ளது. சிவசேகரத்தின் இரண்டு கவிதைகளை சிவயோகசுவாமி இரண்டாகப் பிளப்பது அகரவரிசைப் பிரச்சனையாலா அல்லது முதலாமவரது இன்னொரு கவிதையையும் போட்டால் பிரச்சினையிராது என்ற இறுதி நேர முடிவாலா தெரியவில்லை.

எது எவ்வாறு இருந்தாலும் இவ்வாறான வேறுபட்ட தெரிவுத்தொகையும் பக்க ஒதுக்கீடும் பற்றி நூலின் ஒரு விளக்கம் தேவைப்படுகிறது. எவ்வாறாயினும் பக்கங்களின் வேறுபாட்டில் தெரிவது பக்கச்சார்பின்மைக்கான ஆதாரமல்ல என்பேன். இவைபோக 'தாயகம் கவிதைகள் அறுபத்தாறு' 'குன்றத்துக் குமுறல்' போன்ற தரம்மிக்க தொகுப்புக்களில் பல கவிஞர்களின் அரசியற் பார்வைகள் கவனமாக மூடப்பட்டு இருட்டிக்கப்பட்டுள்ளன. அல்லது தொகுப்பாளரது அரசியலுக்கு உடன்பாடான பக்கங்கள் மட்டுமே காட்டப்பட்டுள்ளன. தொகுப்பாசிரியர் காட்டிய கவனம் அற்பமானது. அதற்கு அரசியல் தவிர்ந்த காரணங்கள் இருப்பதாகத் தெரியவில்லை.

ஜின்னா ஷெரிபுதீன், ஏ. இக்பால் ஆகியோர் போக, மலையகத்தின் மூத்த கவிஞர் சக்தி அ. பாலையாவும் பன்னீர்செல்வம் உட்பட்ட புதிய மலையகத்தின் படைப்பாளிகள் பலரும் கணிப்பிலெடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. திருகோணமலைக் கவிஞர்கள் நூறு பேரை சித்தி அமரசிங்கம் சில ஆண்டுகள் முன்பு ஒரு தொகுப்பில் அடையாளப்படுத்தியிருந்தார். சிவசேகரம் த. சிவராமலிங்கம், தர்மு சிவராமு ஆகிய பேர்களுடன் தன்னையும் சேர்த்து இலங்கையையும் நிராகரித்த பிரமிளும் போகத் திருகோணமலையில் யாரையும் தொகுப்பு அடையாளங் காட்டவில்லை. தரமான கவிதைத் தொகுதிகளை வெளியிட்ட மாவை வரோதயனும் தேவராஜாவும் கண்ணிற்படா விட்டாலும் கம்பன் கழகத்தொண்டரும் கவி அரங்கில் பாடிய ஒரு இளங் கவிஞரும் விடுபடுகின்றனர். நாட றிந்த இ. சிவானந்தனுக்கு இங்கு இடமில்லை என்ற பிறகு என்னத்தைச் சொல்வது. இவை அவகாசமின்மையால்

**-சிவா-**

ஏற்பட்ட குற்றங்களல்ல என்று மட்டும் உறுதியாகக் கூற இயலும்.

கவிதைகளைத் தெரிவு செய்வதிற் கூடியளவுக்கேனும் கவிஞர்களைக் கலந்தாலோசித்திருக்க இயலும். உதவியவர்களெனச் சொல்லப்பட்டோரின் கவிஞரும் விமர்சகருமான நு.ஃ. மானும் பல்கலைக்கழக விரிவுரையாளர் வேறிருவரும் உள்ளனர். அவர்கள் இவ்விடயத்தில் உதவியிருக்க முடியும். அவர்களிடம் எவ்விதமான உதவி கோரப்பட்டது என்பது தெரியவில்லை.

கவிதைகள் காணப்பட்ட நூல்களின் பேர்களும் வெளியீட்டுத் திகதிகளும் தரப்பட்டுள்ளன. சில நூல்களின் பிந்திய பதிப்புக்களின் திகதியே தரப்பட்டுள்ளது. சிலரது கவிதைகள் காலத்தால் மிகப் பிற்பட்டவை. கவிதைகள் எழுதப்பட்ட காலம் அண்ணளவாகவேனும் சரியாகத் தரப்படுவது இவ்வாறானதொரு தொகுப்புக்கு அவசியமானது. தொகுப்பாசிரியர் அதை முற்றாகவே புறக்கணித்துள்ளார்.

நீண்டகாலமாக எழுதும் சில கவிஞர்களின் அண்மைக்காலக் கவிதைகளையும் தொகுத்துள்ள இடத்தில் பிற முக்கியமான கவிஞர்களின் நன்கறியப்பட்ட அண்மைக்காலக் கவிதை எதுவுமே சேர்க்கப்பட்டாமை, தொகுப்பாசிரியரின் அறியாமையின் புலப்பாடா அல்லது உள்நோக்கமொன்றின் வெளிப்பாடா என்பதை அவர் தான் தெரிவிக்க வேண்டும்.

கவிஞர்கள் பற்றிய தகவல்கள் மிகவும் அசட்டையான முறையில் தொகுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு தொகுப்பதை விடத் தராமல் விடுவது சிறப்பு. சில கவிதைகள் வெளியான இடம் பற்றி 'விவபரம் தெரியவில்லை' என்று குறிப்பிடுவது எவ்வகையிற் பொருத்தமானது என விளங்கவில்லை.

இப்படிப்பட்ட ஒரு தொகுப்பை எப்படி அமைப்பது என்பதற்கு ஆங்கிலத்தில் வெளியாகியுள்ள நூற்றுக்கணக்கான நல்ல தொகுப்பு நூல் எதையாவது பார்த்தால் பல விடயங்களையுங் கற்கலாம். அதற்குப் பெரிதாக ஆங்கில அறிவு தேவை இல்லை. விஷயங்களை ஒழுங்காகச் செய்யக் கற்காமல் இலக்கியத்தை வரலாற்று நோக்கில் அடையாளப்படுத்துவது கடினம். ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளருக்கு நான் இதைச் சொல்லித் தான் தெரிய வேண்டியதில்லை.

நூலின் நேர்த்தியான தயாரிப்பு மெச்சத்தக்கது. எனினும் உள்ளடக்கத்தின் தகுதிக்கு நூலின் விலை மிக அதிகம்.

நூல் ஒருபுறமிருக்க, தமிழ்ச் சங்கத்தில் நடந்த வெளியீட்டு நிகழ்வின் தொடக்கம் ஒரு சைவ சமய அடையாளம் பெற்றமை பொருத்தமற்றது. அதுபோக நூலாசிரியர் உரைகள் நடக்கும் வேளையில் பல முறை குறுக்கும் மறுக்குமாக நடந்து தனது 'குருநாதருடன்' ஆலோசனைகள் நடத்தியதும் பார்க்க அழகாக இருக்கவில்லை.


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# புதிய பூமி

பெப்ரவரி 2007

**அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராகக் கண்ணீர்த் துளிகள் மட்டும் போதாது. விளைவுகளுக்காக மட்டுமன்றி காரணங்களுக்காகவும் போராடவேண்டும். அப்பொழுது தான் மக்களுக்கு உண்மையான விடுதலையும் விமோசனமும் கிடைக்கும்.**






























வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு கொம் பிரிண்ட் சிஸ்ரம், HL,1/2 டயஸ் பிளேஸ், கொழும்பு 1